பருவ வெளியீட்டுப் பகுதி
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

270

கார்த்திகை
01.11.2025

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



பேராசிரியர் சபா.ஜெயராசா
சின்னத்தம்பி குருபரன்
ஜலீலா முஹம்மில்
சிவ.ஆரூரன்
ஐங்கரன் விக்கினேஸ்வரா
திக்குவல்லை கமால்
குரு அரவிந்தன்
கந்தர்மடம் அ.அஜந்தன்
கொற்றை பி. கிருஷ்ணானந்த
முல்லைக்கமல்
இ.புஷ்பா
த.ஜெயசீலன்
ந.இரவீந்திரன்
செய்னுலாப்தீன் நஸீரா
நடராசா சிறிரஞ்சன்
கோகிலா மகேந்திரன்
தமிழ்க்கவி
கனிவுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2025 - ஐப்பசி (01.10.2025)

# பொருளடக்கம்

சிறுகதைகள்
சிவ. ஆரூரன் - 10
திக்குவல்லைகமால் - 15

கவிதைகள்
ஜலீலா முஸம்மில் - 09
முல்லைக்கமல்– 19
செய்னுலாப்தீன் நஸீரா - 31

கொசுறுக்கதைகள்
கொற்றை பி.கிருஷ்ணானந்தன் - 18



நூல் விமர்சனம்
இ.புஷ்பா - 20
த.ஜெயசீலன் - 23



தொடர் நாவல்
தமிழ்க்கவி - 36

உள் ஓவியங்கள்
கனிவுமதி

கட்டுரைகள்

**திறனாய்வுப் பரப்பில் நகையகம்**
பேராசிரியர் சபா.ஜெயராசா - 03



**பாலமனோகரனின் நிலக்கிளி, செங்கைஆழியானின் காட்டாறு நாவல்கள் - ஓர் ஒப்பீட்டுப் பார்வை**
சின்னத்தம்பி குருபரன் - 05




**யாழ் திரைப்படத்துறையின் முன்னோடி ஜோ தேவ் ஆனந்த்**
ஐங்கரன் விக்கினேஸ்வரா - 13

**நூற்றாண்டு நினைவில் தமிழருவி த.சண்முகசுந்தரம்**
குரு அரவிந்தன் - 16

**நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து - 09**
ந.இரவீந்திரன் - 28

**“வெற்றி - வெற்றி”**
நடராஜா சிறிரஞ்சன் - 32

**ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும் - 06**
கோகிலா மகேந்திரன் - 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PL

# ஜீவநதி

**2025 கார்த்திகை இதழ் – 270**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசிர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY


இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.


## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY

# ஜீவநதி
**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## ஜீவநதியின் பயணம்

ஜீவநதி 2 ஆவது தடவையாக ஈழத்தில் நூலக மாதமாகக் கொண்டாடப்படும் ஐப்பசி மாதம் நாளொன்றுக்கு ஒரு நூல் வீதம் 31 நூல்களை வெளியிட்டுள்ளது. நாவல்களாக புயலுக்குப் பின் - தமிழ்கவி, மழைக்கால மேகம் - இராஜினி தேவி சிவலிங்கம், சிறுகதைத் தொகுதிகளாக இருகப்பிகள் - பா.வேதநாயகம், அவளுக்கென்று ... ஓர் உலகம் - சுடரி, மாடி வீடும் ஒரு தென்னை மரமும் - திக்குவல்லை கமால்,, கவிதைத்தொகுதிகளாக கண்ணீரில் பிறக்கும் கடல் - 21 பெண்களின் பெண்ணியக் கவிதைகள் தொகுப்பு - க.பரணீதரன், காதலின் கார்காலம் - சங்கரி சிவகணேசன், போர் ஆற்றில் நனைந்த பெண் - 11 பெண்களின் போரும் பெண்களும் கவிதைத்தொகுதி - க.பரணீதரன், இரு உலகம் பல மனிதர் - ஆகசி கந்தசாமி, தென்றலின் சிறகுகள் - இந்ரா, உணர்வெழுதும் தூரிகை - தேயிலை தேசத்தவள், காற்றுக்கும் வேர்க்கும் - மீரா சிவகாமி, பல்வித கவிதைச் சோலை - பா .வேதநாயகம், நாடகப் பிரதிகளான நேரகாலம் - குழந்தை ம.சண்முகலிங்கம், ஒட்டாண்டிகள் - குழந்தை ம.சண்முகலிங்கம், இடுக்கண் வருங்கால் - குழந்தை ம.சண்முகலிங்கம் நூல்களையும், வாய்மொழி வரலாற்று நூல்களாக யோகேஸ்வரி சிவப்பிரகாசம், சிதம்பரநாதபிள்ளை திருச்செந்திநாதன், அலியார் பீர் முஹம்மது, விசுவாசம் ஜெகநாதன், நாராயணபிள்ளை யோகேந்திரநாதன், கட்டுரை தொகுதிகள் / விமர்சன நூல்கள், மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள் - என். செல்வராஜா, படைப்பியல் நோக்கில் பார்வையும் பதிவுகளும் - மு.அநாதரட்சகன்,மணம் கமழும் எமது முற்றத்து மலர்கள் தொகுதி - 2 - என். செல்வராஜா, உருமாறும் பழமொழிகள் - என்.செல்வராஜா, இலக்கிய உலா - பகவதாஸ் ஸ்ரீஸ்கந்ததாஸ், உலக கலை இலக்கிய தத்துவ வெளி - மு.அநாதரட்சகன், நினைவழியா நூல்கள் - புலோலியூர் ஆ.இரத்தினவேலோன், ஈழ மண்ணில் இந்திய இராணுவம் நூல் வழிப்பதிவுகள் - என்.செல்வராஜா, சிறுவர் நாவல், பூரித்த பொன் வனம் - திக்குவல்லை கமால், விவாதம் - அவலை நினைத்துக் கொண்டு - தொகுப்பு க.பரணீதரன் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஜீவநதியின் பயணம் எழுத்தாளர்கள், வாசகர்கள், நண்பர்கள் துணையுடன் இரண்டாவது தடவையும் சாத்தியமாகியுள்ளது அனைவருக்கும் ஜீவநதியின் நன்றி.

– க. பரணீதரன்

ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன்,
புத்தகப்பண்பாட்டுப் பேரவை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சபா.ஜெயராசா

# திறனாய்வுப் பரப்பில் நகையம்



நகைச்சுவையை உருவாக்கும் "நகையம்"(Joke) என்பது ஓர் இலக்கிய வடிவமாக அடையாளம் பெறுகிறது. சிறிய துணுக்கிலிருந்து நீண்ட உரையாடல் வரை அதன் வடிவம் விரிவு கொண்டது. அதன் வரலாறும் நீண்டது.

சுமேரிய மொழியில் கிறீஸ்துவுக்கு முற்பட்ட 1900 ஆம் ஆண்டில் எழுதப்பெற்ற நகையப்படைப்பு கண்டறியப்பட்டுள்ளது. (சுமேரிய மொழி பழைய திராவிட மொழி என்பது குறிப்பிடத்தக்கது) பப்பிரஸ்புல் ஓலையில் பழமொழி வடிவில் அந்த நகைச்சுவை எழுதப்பெற்றுள்ளது. இது இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. ஆனால் அதற்கு முற்பட்ட கி.மு.2300 ஆம் ஆண்டளவிலே நகைய எழுத்துப் படைப்புகள் தோன்றி விட்டதாக ஆய்வாளர் கருதுகின்றனர்.

தொன்மையான கிரேக்கத்திலும் நகைய எழுத்தாக்கங்கள் இடம்பெற்றிருந்தன. "சிரிப்பை விரும்புவர்" (Philogelos) என்ற தலைப்பில் 265 நகையங் களைத் தொகுத்து கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் கிரேக்க மொழியில் ஒரு நூல் வெளியிடப்பட்டது.

தொன்மையான தமிழகம், இந்தியா, அரேபியா, எகிப்து, சீனம் முதலாம் நாடுகளில் நகைச்சுவைப் படைப்புகள் இடம்பெற்றமைக்கு குறிப்புகள் உள்ளன. பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தில் நகைச்சுவை யாக்கம்(ஹாஸ்ய) பற்றிய சுலோகங்கள் உள்ளன. தமிழரின் தொல்காப்பியத்தில் மெய்ப்பாடுகள் பற்றிய விளக்கம் நகையத்தையும் உள்ளடக்கியது.

மொழி வளர்ச்சியில் சிலேடை(Pun) வழியாக நகைய உருவாக்கம் உலகமொழிகளில் இடம்பெறலா யிற்று. தமிழ் மரபில் அவ்வகையில் காளமேகப் புலவர்(14 ஆம் நூற்றாண்டு) விதந்து குறிப்பிடப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் ஊர்ப்பெயர்களைக் கொண்ட சிலேடைப்பாவை சுன்னாகம் குமாரசாமிப் புலவர் எழுதிய வரலாற்றுப் பதிவும் உண்டு.

உயிரினங்களின் படி மலர்ச்சி பற்றி ஆராய்ந்த சார்ல் டார்வின் நகையத்துக்கும் உடலியக்கத்துக்கும் சூழலுடனான இசைவாக்கத்துக்குமுள்ள தொடர்பை விளக்கினார்.

பல்வேறு காரணிகள் நகைச்சுவையை உருவாக்கும். சூழமைபு, மனப்பதகளம், அறியாமை, மன்னிப்புக்கோரல், உடற் கூச்சம், கேலியும் கிண்டலும் முதலியவை சிரிப்பு நடத்தையைத் தூண்டி விடும்.

கேலியும் கிண்டலும் முதலியவை சிரிப்பு நடத்தையைத் தூண்டிவிடும்.

நவீன உளவியலாளர் வரிசையில், நகையம் பற்றிய ஆழ்ந்த ஆய்வை மேற் கொண்டவர் சிக்மன் பிராய்டு, "நகையங்களும் நனவிலி மனத்துடன் அவற்றின் தொடர்பும்" என்ற நூலை அவர் 1905 ஆம் ஆண்டில் வெளியிட்டார். நனவிலி மனம் என்பதே அவரது அனைத்து ஆய்வுகளுக்கும் உரிய நடு உள்ளடக்கமாக அமைந்தது.

அவரது நூலைத் தொடர்ந்து பல்வேறு உளவிய லாளர் நகையம் பற்றிய விரிவாக ஆராயத் தொடங்கி னார்கள். நகையத்துக்கும் ஆழ்மனத்துக்கும் உள்ள தொடர்புகள் மற்றும் ஒருவரது ஆளுமைக்கும் உள்ள தொடர்புகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

உள நோயைக் கண்டறிவதில் நகையத்தின் பங்கு, உளச் சிகிச்சை அளிப்பதில் அதன் பயன்பாடு? முதலியவை விரிவாக ஆராய்ப்பட்டன. "இற்றை நாள் உளவியல்" என்ற உளவியல் ஆய்விதழ் நகையம் தொடர் பாக இருநூறு ஆய்வுக் கட்டுரைகளை வெளி யிட்டுள்ளது.

இத்துறையில் ஆய்வுகள் முடிவடையவில்லை. தொடர்ந்த வண்ணமுள்ளன.

நகையம் என்பது மனிதத்துவத்தை வலுப் படுத்தும் உள்ளீட்டுப் பண்புகளுள் ஒன்றாக கண்டறியப் பட்டுள்ளது. வாழ்வின் திருப்தி நிலையையும் உளநிறை வையும் கண்டறிவதற்கும் எதிர்வு கூறுவதற்கும் அது துணை செய்யும் என்று குறிப்பிடப்படுகிறது.

பல்வேறு அறிவுத்துறைகளில் நகையம் தனித்துவமான ஆய்வுப் பொருளாக வளர்ச்சியடைந்து வருகிறது. மானிடவியல், மொழியியல், மெய்யியல், உடற் கூற்றியல், அழகியல், இலக்கியத் திறனாய்வியல், மேலாண்மையில் முதலாம் துறைகள் தத்தமது தளங்களில் நின்று ஆய்வுகளை முன்னெடுக்கின்றன.

தொன்மையான மக்களினதும் நவீன மக்களதும் வாழ்க்கைக் கோலங்களை அறிவதற்கும் உரிய பயனுள் மொழிப் பொறியாக நகையம் இருப்பதாக மானிடவியல் கருதுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகையத்தை வெளிப்படுத்த மொழியின் வகிபாகம் என்ன என்பதையும், மொழி எவ்வாறு கட்டமைப்புச் செய்யப்படுகிறது என்பதையும் மொழியியலாளர் ஆராய்கின்றனர்.

பல்வேறு அறிவுத்துறைகளின் ஒன்றிணைப்பில், "நகைச்சுவையில்"(Humorology) என்ற தத்துவமான ஆய்வுப்புலம் உருவாக்கப்பட்டுள்ளது. "நகைச்சுவைக் கற்கை" என்ற பாடமும் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவரிடத்து ஏற்படும் உள நெருக்கீட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதனை ஒரு தனிப்பாடமாகவோ துணைப்பாடமாகவோ கற்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக்கப்பட்டுள்ளது.

இலக்கியத் திறனாய்வு, நகையத்தைத் தனித்துவமான ஒரு வகைமையாகக் கருதுகிறது. பிற இலக்கிய வகைகளுக்குச் செழிப்பூட்டும் கலை நுட்பியலாகவும் கருதுகின்றது. அதாவது கலை இலக்கியப் புனைவுகளில் சலீப்பூட்டும் தளங்களை உடைப்பதற்குரிய நுட்பியலாகவும் செயற்படுகின்றது.

நகைச்சுவை இலக்கிய வடிவங்கள் சுவையூட்டலுடன் மட்டும் நின்று விடுவதில்லை. அவை தெறித்தெழுகை(Reflective) என்ற செயற்பாட்டையும் மேற்கொள்வதாக இலக்கியத் திறனாய்வில் விளக்கப்படுகிறது. அது மனிதரின் அறிவையும் உணர்வையும் தன்னை அறியும் நிலைக்கு நகர்த்திச் செல்கின்றது.

பல்துன்பியல் படைப்புகளால் நிகழ்த்தப்பட முடியாத சாதனையை ஒரு நகையப் படைப்பு செய்து விடும் என்ற கருத்து அராபியத் திறனாய்வு மரபில் முன் வைக்கப்பட்டுள்ளது. (ஓமர் சப்பா) வாசிப்பு மறுவாசிப்பு என்பவற்றையும் கடந்த பெரு நீட்சி நகையப் படைப்புக்கு உண்டு.

திறனாய்வாளர் நகையத்தின் உள்ளடக்கத்தில் மட்டுமன்றி உருவத்திலும் ஆய்வு மேற்கொள்கின்றனர் அதன் வடிவம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வடிவமாகின்றது. தீர்வின் ஒருகை தருக்க முறைத்தீர்வாகும். பிரச்சினைக்குரிய தீர்வு தருக்க நிலையில் எட்டப்படும் பொழுது மனச்சுமை இறக்கப்படுவதனால் மகிழ்ச்சியும் அதனோடு இணைந்த நகைச்சுவையும் எட்டப்படுகிறது.

இன்னொரு வகையான தீர்வு, கோமாளித்தனமானது. அதுவும் மகிழ்ச்சி கொடுக்கும். நகைய ஆக்கத்தின் நிறைவு "துளைவி அடி" (Punchline) என்று கூறப்படும். சிரிப்பை உண்டாக்கும் அடியாக அது அமையும். தொடக்கம் வளர்ச்சி நிறைவு என்ற மூன்று அடுக்குகளின் நிறைவுப் பகுதியில் "துளையி" அடி இடம்பெறும் சிறிய புனைவின் நிறைவில் துளையி அடி இடம்பெறும் சிறிய புனைவின் நிறைவில் துளையி அடி இடம்பெறும் பெரிய புனைவுகளின் நிறைவுப் பகுதி பல வசனங்களுடன் முடிவடையும். அது நீர்ப்பரவல் அடிகள் (Jap Lines) என்று குறிப்பிடப்படும். மிகப்பெரிய ஆக்கங்களில் நகைச்சுவை தொடர்ந்தும் இடையிட்டுக் கட்டமைப்புச் செய்த வண்ணம் மொழிப்பரவல் நிறுவப்படும்.

பின்னை நவீனத்துவத்தை வலியுறுத்துவோர் குறிப்பானின் பன்மை விரிவை அடியொற்றி நகையத்தை விளக்குகின்றனர். அதாவது, குறிப்பான்கள் ஒவ்வொன்றும் பல பல பொருள்களையும் படிமங்களையும் உணர்ச்சி அலகுகளையும் சுமந்து நிற்கின்றன என பின்னை நவீனத்துவ கட்டுமானக் குலைப்பு என்ற கருத்து வடிவம் குறிப்பிடுகின்றது. பலபொருள் கோடல் நிலையில் ஒருவருக்கு நகைச்சுவையை உருவாக்காத ஒரு சொல் பிறிதொருவருக்கு நகைச்சுவையை வரவழைத்து விடத் தக்கது என்பதையே அந்தக் கருத்து வடிவம் விளக்குகின்றது.

இவ்வாறாகப் பல நிலை ஆய்வுகளைக் கொண்ட நகையம், தென்னாலி இராமன் கதை, யாழ்ப் பாணத்து அரசர் காலத்திலிருந்து பரவலுறத் தொடங்கிய விகடப் புலவர்கதை முதலியவற்றால் வாய் மொழி வழியாகப் பரவி வந்தது. அவற்றுக்கு முன்னரே நகைச்சுவைத் தொன்மக்கதைகள் வழக்கில் இருந்தன. தொன்மக்கதைகள் வழிபாட்டுடன் தொடர்பு கொண்ட நிலையில் அவை பக்திப் பெறுமானங்களுடன் இணைந்து கொண்டன.

ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து நகையம் எழுதும் மரபு அச்சுப் பொறியூடாக வளர்ச்சி கொள்ளத் தொடங்கியது. நகைய வாசிப்புச் செயற்பாடும் சுவைப் பாடும் வளரும் நிலை ஏற்பட்டது.

வீரமா முனிவர், உ.வே.சுாமிநாத ஐயர், வேத நாயகம்பிள்ளை, ஈராஜம் ஐயர், கல்கி, சாவி முதலியோர் முதலாம் தலைமுறை நகைய எழுத்தாளர்களாயினர்.

எழுத்தறிவுப் பெருக்கம், அச்சு ஊடகப் பெருக்கம், ஆகியவற்றை அடியொற்றி நகைச்சுவை எழுத்தாளர் பெருக்கெடுத்தனர். நகைச்சுவை எழுத்துக் களைத் தாங்கிய இதழ்களும் பெருக்கெடுத்தன.

குறுநகையங்கள் இதழ்களின் வாசிப்புப் பெருக்கத்தையும் விற்பனைப் பெருக்கத்தையும் ஏற்படுத்தின. "ஆனந்த விகடன்" என்பதில் உள்ள இரண்டு சொற்களுமே நகைச்சுவையோடு இணைந்த எண்ணக்கருக்கள்.

இலங்கையில் நகையத்துக்குரிய இதழ்களாக "சிரித்திரன்", "கலகலப்பு" முதலாம் இதழ்கள் வெளி வந்தன. இரண்டு இதழ்களும் இலங்கைக்குரிய பேச்சு மொழியோடும் பண்பாட்டு அலகுகளோடும் தொடர்பு பட்டு நின்றன. சிற்றிதழ்கள் வரிசையில் கூடிய விற் பனையை எட்டிய நிலையிலும் அவை அமைந்திருந்தன.

"நகைச்சுவை அரங்கு" "நகைச்சுவை ஆடர்" என்பவை தனியான ஆய்வுக்கு உரியவை. திரைப்பட எழுச்சிக்கு நகைச்சுவை உள்ளீடே காரணமாக இருந்த தென சார்லிசப்பிளினை மேற்கோள்காட்டியுள்ளனர். உடல்மொழி நிலையில் நகைச்சுவை உருவாக்கம் எவ்வாறு ஆழ்ந்து ஊடுருவி நிறைவிக்கும் என்பது சார்லி சப்ளினால் வெளிப்படுத்தப்பட்டது.

தமிழ்ச் சூழலில் திரைப்படங்களின் "வசூல்" ஈட்டலுக்கு, நகைய உள்ளீடுகளின் வகிபாகம் விதந்து குறிப்பிடப்படுகிறது. தமிழ் அரங்கிலும் நகையம் பல நிலைகளிலே பயன்படுத்தப்பட்டது. நாரதர், விதூடகன், தந்திரன், பபூன் முதலாம் பாத்திரங்கள் நகைச்சுவை யேற்றங்களை மேற்கொண்டன.

நகையம் பற்றிய திறனாய்வு ஆழ்ந்து விரிந்த நெடும்பரப்பைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி குருபரன்




# பாலமனோகரனின் நிலக்கிளி, செங்கை ஆழியானின் காட்டாறு நாவல்கள் – ஓர் ஒப்பீட்டுப் பார்வை

நாவல் என்பது ஓர் அரசின், ஓர் இனத்தின், இனக் குழுமத்தின், சமூகத்தின் போர், வீரம், காதல் தொழில் மற்றும் வாழ்வியல் சம்பவங்களின் தொகுப்பி லான வரலாறாகும். ஆரம்பத்தில் புராண, இதிகாசங் கள், காப்பியங்கள், காவியங்களில் ஒருவரைப் பாட்டுடைத் தலைவன், தலைவியாகக் கொண்டு பாடப்பட்ட வரலாறுகளை நாம் கற்றிருக்கிறோம். மேலைநாடுகளில் காவியங்களை அடியொற்றியதா கவே நவீன இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. உரை நடை இலக்கியத்தின் அடுத்த பரிமாணமே நாவல், சிறு கதை இலக்கியங்களாகும். மேலை நாடுகளில் காவியங் களில் இருந்து நாவல் தோற்றம் பெற்றாலும் தமிழ் மொழியில் அத்தகைய செல்வாக்குக் காணப்பட வில்லை எனப் பேராசிரியர்களான வையாபுரிப்பிள்ளை, க.கைலாசபதி போன்றோர் குறிப்பிடுவர்.

தமிழில் வீராசாமிச் செட்டியார் எழுதி வெளி வந்த “விநோதரச மஞ்சரி” (1873) முதல் நாவலாகக் கொள்ளப்பட்டாலும் அதன் கரு, உருவம், உள்ளடக்கம், உத்தி, வடிவம். கதைப் போக்கு என்பவற்றைக் கருத்தில்



கொண்டு மயூரம் வேதநாயகம்பிள்ளையின் “பிரதாப முதலியார் சரித்திரம்” (1879) முதலாவது தமிழ் நாவலாகக் கொள்ளப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அ.மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் (1894) பி.ஆர்.ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம் (1896) ஆகிய நாவல்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்தன. இவை யாவும் உரைநடைச் செய்யுளின் சாயலில் அமைந்த நாவல்களாகவே கொள்ளப்படு கின்றன.

ஈழத்தில் 1856 இல் காவலப்பன் கதை, திரு கோணமலை இன்னாசித்தம்பியின் “ஊசோன் பாலந்தைக் கதை” (1871), அறிஞர் சித்திலெப்பையின் “அசென்பேயின் கதை” (1885), மட்டக்களப்பு சுவாமி சரவணமுத்துவின் “கலாமதி” 1904, சி.வை.சின்னப் பிள்ளையின் “வீரசிங்கன் அல்லது சன்மார்க்க ஜெயம் (1905), “உதிரபாசம் அல்லது இரத்தின பவானி (1915), “விஜயசீலம்”(1916), மங்களநாயகம் தம்பையாவின் “நொருங்குண்ட இதயம்” (1914), “அரியமலர்” (1926) ஆகிய நாவல்கள் குறிப்பிடத்தகவை.

அறிஞர் சித்திலெப்பையின் அசென்பேயின் கதை ஈழத்தில் முதலாவது நாவலாகக் பேசப்பட்டாலும் கதைக் கரு, களம், பாத்திர வார்ப்புகள், சம்பவம் ஆகியன அரேபியா, இந்தியா, இலங்கை அகிய நாடுகளுடன் தொடர்புபட்டிருந்தமையால் அதனை ஏற்றுக் கொள்வ தில் இன்று வரையும் வாதப் பிரதி வாதங்கள் இருந்து கொண்டே இருக்கின்றது. இன்னும் சிலர் சி.வை.சின்னப்பிள்ளையின் “வீரசிங்கன் அல்லது சன்மார்க்க ஜெயம்” நாவலை முதலாவது நாவல் எனவும், வேறு சிலர் மங்களநாயகம் தம்பையாவின் “நொருங்குண்ட இதயம்” ஈழத்தில் முதலாவது நாவலா கக் கொள்கின்றனர். ஈழத்தைப் பொறுத்தவரையில் இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் காலாண்டில் இருந்தே ஜனரஞ்சகமான நாவல்கள் தோற்றம்பெற ஆரம்பிக்கின்றன. 1950 களின் பின்னர் மேலைத்தேய நாவல்களுக்கு நிகராக கரு, உருவம். உள்ளடக்கம், பொருள், உத்தி, வடிவம் என்பவற்றில் கவனம் செலுத்தி சாதாரணமாகச் சமூகப் பிரச்சினைகளை மையப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திய ஜனரஞ்சகமான நாவல்கள் தோற்றம்பெற ஆரம்பித்தன. சி.வி. வேலுப்பிள்ளை, எஸ்.பொன்னுத் துரை, வ.அ.இராசரெத்தினம், தெணியான், செங்கை ஆழியான், மஹ்மூத், அங்கையன் கைலாசநாதன், பால மனோகரன், செம்பியன் செல்வன், வைத்திலிங்கம், கணேசலிங்கன், டானியல், மாத்தளை சோமு, முருகபூபதி, டொமினிக்ஜீவா, அன்டனி ஜீவா, தி.ஞான சேகரன், தெளிவத்தை யோசப் போன்றார் அக்காலப் பகுதியில் *(1950-1980)* மிகவும் பேசப்பட்ட நாவலாசிரி யர்களாக இருந்தனர். அவர்களுள் பாலமனோகரனின் "நிலக்கிளி" *(1973, 2002)*, செங்கை ஆழியானின் "காட்டாறு" *(1977,1997)* ஆகிய இரு நாவல்களும் ஒப்பீட்டுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

இரு நாவல்களும் வன்னிப் பிரதேசத்தில் *1950* களின் பின்னர் அபிவிருத்தி செய்யப்பட்ட தண்ணி முறிப்புக் குளம் (நிலக்கிளி), அருவியாறு (காட்டாறு) ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட குடியேற்றக் கிராமங்களில் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு, சிறிது கற்பனை கலந்து பின்னப்பட்ட கதைகளாகவே அமைந்திருக்கின்றன. இரு நாவல்களினது கதையின் போக்கும் பாத்திர வார்ப்புக்களும், உரையாடல், வர்ணனை ஆகியவற்றுக்கும் கொடுத்திருக்கும் முக்கியத்துவமும் கதைகளுக்கு உயிர்ப்பினை ஏற்பத்தி இருக்கின்றன. இரு நாவல்களும் வீரகேசரி வாரமலரில் பிரதி ஞாயிறுதோறும் வெளிவந்து, பின்னர் வீரகேசரிப் பிரசுரமாக நிலக்கிளி *(1973)*, காட்டாறு *(1977)* நாவல் இரண்டும் வெளிவந்து பெரும் வாசகர் கூட்டத்தை உருவாக்கின. அக்காலத்தில் படித்த பல இளைஞர்கள் பலர் நூலகத்துக்குச் சென்று போட்டி போட்டுக் கொண்டு வாசித்தனர். அந்தளவுக்குப் பிரபலமான நாவல்களாக இரண்டும் இருந்தன என்பதும் குறிப்பிடத் தக்கது.

நிலக்கிளி நாவலின் நாயகன் நாயகியாக கதிராமன், பதஞ்சலியும் இடம்பெறக் கதைக்கு அழுத்தம் கொடுக்கும் பாத்திரங்களாக கோணா மலையர், உமாபதி, பாலியார், சுந்தரலிங்கம், காடியர், மணியம், ராசு, றைவர் ஆகியோருடன் மஹம்மதுக் காக்கா, சம்மட்டியார், சிதம்பரியார் உட்பட இன்னும் ஒரு சிலரும் துணைப் பாத்திரங்களாக நடமாடுகின்றனர். கதைக் களம் முற்று முழுதாக தண்ணிமுறிப்புக் குளம், அதனை அண்டிய அடர்ந்த காடுகள், பரந்த வயல் வெளி, தோட்டம், புலவு, வண்ணாத்திமோட்டை, குமுழமுனை ஆகிய இடங்களின் மிகக் குறைந்த கதா பாத்திரங்களின் துணையுடன் இயற்கைச் சூழலோடு ஒன்றிணைந்ததாகக் கதை நகர்ந்து செல்கிறது.

காட்டாறு நாவலில் இடையில் வந்து இணைந்து கொள்ளும் கதையின் நாயகன், நாயகியாக சந்தனம், செவந்தி ஆகியோருடன் கதை தொடங்கி முடியும் வரை உயிரோட்டமாக ஊடாடும் அழுத்தம்மிக்க கதாபாத்திரங்களாக தாமரைக்கண்டுக் கிழவர், கணபதி, கொன்ராக்டர் கந்தசாமி, சியாமன் மாரசிங்கம், செல்லாச்சி, புவனேஸ்வரி, வீரசிங்கம், செல்லத்துரை, மகேஸ்வரி ஆகியோருடன் கதைக்கு அழுத்தம் சேர்க்கும் கதாபாத்திரங்களாக செங்கமலம், தின சகாயம் அதிபர், மாயாண்டி, ஸ்ரீவரதசுந்தரம் விதானை யார். மாயழகு, கந்தையா கமவிதானை, மில்காரக் கோணான், நீர்ப்பாசன எஞ்சினியர், கனகராசா, மாயாண்டி ஆகியோருடன் துணைக் கதாபாத்திரங் களாக சிவசம்பு தபால்காரர், செபமாலை, இரத்தினம், கோபால் மாஸ்டர், சிவசம்புப் பொடியன், சின்னப்பு, சங்குப் பொடியன், மாரிமுத்து, உடையார் ஆகி யோருடன் இன்னும் பலரும் கதையில் நடமாடுகின்றனர். கதைக் களம் முற்று முழுதாக அருவியாறு அதனோடு இணைந்த சூழல், கடலாஞ்சி குடியேற்றக் கிராமம், தங்கு சேட்டைக்காடுகள், வயல்வெளிகள், தோட்டம், புலவு, தரிசு நிலக் காடுகள், அதன் இயற்கைச் சூழல் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டே கதை நகர்ந்து செல்கிறது. கதா பாத்திரங்களின் எண்ணிக்கை அதிக மாக இருந்தாலும் கதையோட்டத்துக்கு ஏற்ற விதமா கவே கதை மாந்தர்களின் ஊடாட்டம் அமைந்திருக் கின்றன என்பதையும் ஊகிக்க முடிகிறது.

இரு நாவல்களிலும் ஒத்த சில பண்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். பாலமனோகரன், செங்கை ஆழியான் இருவரும் தமிழ் கூறும் நல்லுலகில் புகழ்பெற்ற எழுத்தாளர்கள், இரு நாவல்களும் வீர கேசரிப் பிரசுரமாக வெளிவந்து சாகித்திய மண்டலப் பரிசில்கள் பெற்றவை. நாவல்களின் கருவும் கதைக் களமும் வளமான வன்னிப் பிரதேச இரு நீர்ப்பாசனக் குளங்களை மையப்படுத்திய இரு குடியேற்றக் கிராமங் களிலும் வாழும் மக்களின் வாழ்வியல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டவை. வாழ்க்கையின் உயர்வுக்கு காணி, நிலம், தோட்டம், புலவு, ஆடு, மாடு ஆகியவற்றின் தேவையை உணர்ந்த மக்களின் வாழ்வியலுக்கான போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை. இரண்டிலும் நிலபுலம், செல்வாக்குமிக்க சுரண்டல் பேர்வழிகள் காணப்படுகின்றனர். பாமர மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கான போராட்டம் ஆகிய பொதுவான விடயங்களை அவதானிக்க முடிகின்றன.

அத்தோடு இரு நாவலாசிரியர்களும் பாத்திர அறிமுகம், கள வர்ணனை, சம்பவங்கள், பாத்திரங் களின், குண நலன்கள், உரையாடல்கள் என்பவற்றில் கூடுதல் கவனம் செலுத்தி இருக்கின்றனர். ஒவ்வொரு பாத்திர அறிமுகத்தின்போதும், உரையாடல் வர்ணனை களின் போதும் அவர்களின் குண நலன்கள், உடல மைப்பு, அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பவற்றை யெல்லாம் வாசகரின் மனக்கண்முன் நிறுத்தி விடு கின்றனர். ஒவ்வாரு சொல்லுக்கும் உயிர் கொடுக்கும் வகையில் பாத்திரங்களுக்கு இடையேயான உரை யாடல்களை மிகச் சிறப்பாகக் கையாண்டிருக்கின்றனர்.

நிலக்கிளி நாவலின் ஆரம்பம் கார்த்திகை மாதம் மழை பெய்து காடுகள் பச்சைப் பசேலெனச் செழித் திருக்கின்றன. அந்த அடர்ந்த காட்டுக்குள் முரலிப் பழம் கொய்வதற்காக மாட்டு வண்டிலில் கதிராமன், பதஞ்சலி,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாபதி மூவரும் செல்வதாகக் கதை ஆரம்பமாகிறது. காட்டாறு நாவலும் அவ்வாறுதான் தாமரைக் கண்டுவும் கணபதியும் தங்கு வேட்டைக்கு அடர்ந்த வனப் பகுதிக்குள் செல்வதாகக் கதை ஆரம்பிக்கிறது.

நாவல்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டும் வேறுபட்டும் காணப்படும் அம்சங் களாகப் பின்வருவனவற்றை இனங்கண்டு கொள்ள லாம். இரு நாவல்களின் கதையும் கிராமிய மக்களின் வாழ்வியல் அம்சங்களோடு நகர்ந்து செல்வதனால் காட்டாறு நாவலில் அருவியாற்று நீர்ப்பாசனம், கடலாஞ்சிக் கிராமம், காணி, நிலம், தோட்டம், புலவு, போக்குவரத்து, நாளாந்த வாழ்க்கை முறை, கடைத் தெரு, கல்வி, சுகாதாரம், நீதி, நிருவாகம், வேட்டை யாடல் ஆகிய அம்சங்கள் தெளிவாகவும் பின்புலமாக வும் காட்டப்பட்டிருக்கின்றன. நிலக்கிளி நாவலில் தண்ணிமுறிப்புக் குளம், குமுளமுனை, வண்ணாத்தி மோட்டை ஆகிய இடங்கள், அடர்ந்த வனாந்தரம், வயல்வெளி, தோட்டம், புலவு ஆகியன சித்திரிக்கப் பட்டிருந்தாலும் தண்ணிமுறிப்புக் குளத்தை அண்டிய கிராமம், பொதுப் போக்குவரத்து, கடைத்தெரு, கோணாமலையார் குடும்பம், உமாபதி குடும்பம் தவிர ஏனைய மக்களும் குடும்பமாக வாழ்கின்றனர் என்பது பற்றிய விபரங்கள் எதுவும் கூறப்படவில்லை. ஏனெனில் இவைகளும் மக்களின் நாளாந்த வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட அம்சங்களாகும்.

பாலமனோகரன் நாவல் தலைப்பின் பொருளை இடையிடையே சுட்டிக் காட்டிக் கதையைச் சுவாரசிய மாக நகர்த்திச் சென்று இறுதியில் நிலக்கிளியின் வாழ்க்கை வட்டத்தை பதஞ்சலியின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுச் சுபமாகக் கதையை நிறைவு செய்கின்றார். செங்கை ஆழியான் காட்டாறு நாவலின் கதையை நகர்த்திச் சென்றாலும் தலைப்பின் பொருள் இறுதிவரை நாசுக்காகவே உள்ளது. நாவலில் ஒருமுறை மாத்திரம் கரைபுரண்டோடிய காட்டாற்று வெள்ளத்தைக் குறிப் பிட்டிருக்கின்றாரா அல்லது முதலாளித்துவ வர்க்கத்தி னரின் அடக்குமுறை, ஊழல், மோசடி, சுரண்டல்






என்பவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகள், வெறுப்பு, கோபம், வன்மம் ஆகியவற்றைக் கட்டுப் படுத்த முடியாமல் இறுதியில் அவர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்ததைக் குறிப்பிடுகின்றாரா என்பதை வாசகர்கள்தான் ஊகித்துக் கொள்ள வேண்டும். இதே போன்றதொரு சாயலை ஆசிரியரின் “பிரளயம்” (1973) நாவலிலும் அவதானிக்கலாம். காட்டாறு (1977), பிரளயம் ஆகிய இரு நாவல்களும் ஆசிரியரின் இளமைப் பருவத்தில் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் வெளிவந்ததனால் இவை இடம் பெற்றிருக்கலாமோ என ஊகிக்கவும் தோன்றுகிறது.

நிலக்கிளி நாவல் கதையின் நடுப்பகுதியில் பாம்பு தீண்டிப் பதஞ்சலியின் அம்மப்பா உமாபதி இறக்கிறார். தனிமையில் வாழும் பதஞ்சலிக்கு ஆறுதல் கூறுவதற்காக பாலியரும் கதிராமனும் அடிக்கடி சென்று வருகின்றனர். அது கோணாமலையருக்குப் பிடிக்க வில்லை. ஒருநாள் கதிராமனுக்குத் தாறுமாறாக அடிக்கிறார் மலையர். அன்று வீட்டை விட்டு வெளி யேறிய கதிராமன் பதஞ்சலியைத் திருமணம் செய்து, காடு வெட்டிக் குடிசை அமைத்துப் பயிர் செய்து தனிக் குடும்பமாக வாழ்கின்றனர். கோணாமலையரின் வாழ்க்கையில் கஷ்டகாலம் ஆரம்பமாகிறது. நிலக்கிளி போல் வாழ்ந்த பதஞசலியின் வாழ்க்கையில் திருப்பு முனையை ஏற்படுத்துகின்ற பாத்திரமாக சுந்தரலிங்கம் மாஸ்டரும் வந்து இணைகின்றார். காட்டாறு நாவலில் முதலாளித்துவ வர்க்கத்தினரின் சுரண்டல், ஊழல் மோசடி, அக்கிரமம், ஆக்கிரமிப்பு, அதற்கெதிராகக் கிளர்ந்தெழும் இளைஞர் என இடையிடையே கதையில் திருப்பு முனையை ஏற்படுத்திக் கதை விறுவிறுப்பாக நகர்ந்து செல்கிறது. சந்தனம், கணபதி, செவந்தி, சியாமன், புவயேஸ்வரி, கந்தசாமி, தினசகாயம், வீரசிங்கம் போன்றோர் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

முதலாளித்துவ வர்க்கத்தின் சுரண்டல் இரு நாவல்களிலும் காணப்பட்டிருந்தாலும் நிலக்கிளி நாவலில் ஏழைகளைச் சுரண்டி ஏப்பம்விடும் சின்னத் தம்பியார், சம்மட்டியார் இருவரும் இருந்தாலும் காட்டாறு நாவலில் உள்ளதுபோல் அத்தனை கொடுமை யானவர்கள் அல்லர். காட்டாறு நாவலில் சகல இடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் சுரண்டல், ஊழல், மோசடி, அதிகார துஸ்பிரயோகமும் இடம் பெறுவதை அவதானிக்கலாம். அதனை நாவலாரியர் தான் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அவதானித்த தாகத் தனது முன்னுரையில் குறிப்பிட்டிருக்கின்றார். சியாமன், கந்தசாமி, தினசகாயம், எஞ்ஜினியர், கனகராசா, விதானையார், வைத்தியர், மில்லுக்காரக் கோணார் ஆகியோர் இத்தகைய செயல்களில் ஈடுபடு வதையும் காண முடிகிறது. குடியேற்றவாசிகளுக்கு அரசு கொடுத்த விவசாயக் காணிகளையும் காடுகளையும் வளைத்துப் போட்டுக் கொண்டு நிசமாகவே தனி இராச்சியம் நடத்தி வந்தனர். அடிமாட்டு விலைக்குக் காணிகளை அவர்களுக்கு வழங்காதவர்களுக்கு விவசாய நிலத்துக்கு நீர் வழங்காது தடுத்து வந்ததை யும், விவசாயிகள் அடகு வைத்த காணிகளை ஈவிரக்க மின்றி பறித்து அவர்களைக் கூலிக்கு மாரடிக்கும் தினக் கூலிகளாக மாற்றியதையும், தோட்டம், புலவுக்காகக் காடு வெட்டிய காணிகளுக்கு அரசு அனுமதிப் பத்திரம் வழங்குவதைத் தடுத்து வந்ததையும், அரசு வழங்கிய நிவாரணங்கள், கொந்து ராத்து வேலைகள், பாசனத் துக்கு நீர் வழங்கல் ஆகியவற்றில் ஊழல் மோசடியும் ஈடுபட்டதையும் ஆசிரியர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. சியாமன் போன்ற காம வெறியர்களின் காமப் பசிக்கு பல பெண்கள் இரையாகியதோடு, தினசகாயம் போன்றோ ரால் மாணவர்களின் கல்வி மறுக்கப்பட்டதையும் காண முடிகிறது. இத்தகையவர்கள் வீரசிங்கம் போன்ற அடியாட்களை வைத்துக் கொண்டு மிரட்டல், கொலை, களவு என்பவற்றிலும் ஈடுபட்டு வந்ததை ஆசிரியர் அவ்வப்போது சுட்டிச் செல்கின்றார்.

நிலக்கிளி நாவலில் கள, சம்பவ வர்ணனைகள், ஆசிரியரின் சுய கருத்துக்கள் அளவோடு, கச்சிதமாக அமைந்திருக்கின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் களவர்ணனைகளோடு இணைந்த வகையில் பாத்திரங் களை உயிர்த் துடிப்பானதாக்கித் தமது கருத்துக்களை யும் கூறி வாசகர்களிடத்தில் மனப்பதிவை ஏற்படுத்தி விடுகின்றார். காட்டாறு நாவலாசிரியரின் களவர்ணனை கள் பல இடங்களில் அதிகரித்துவிட்டனவோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. உச்சக்கட்டச் சம்பவங்கள் சிலவற்றில் சம்பவத்தை நேரடியாகக் கூறுவதைவிடுத்து அதிதமாக வர்ணித்துச் சுற்றி வளைத்து நிறைவு செய்வது வாசகரின் கதை மீதான இலயித்திருப்பைத் திசை திருப்பி விடுவதாகவும் அமைந்து விடுகின்றன. சில வர்ணனைகளில் வா.வே.சு.ஐயர், கல்கி, சாண்டில்யன், ரமணிச்சந்திரன் போன்றோரின் சாயலும் தென்படு கின்றன. அதேபோல் பாத்திரங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

வாசகர்களிடத்தில் மனப்பதிவை ஏற்படுத்தி விடும் பாத்திரங்களாக பதஞ்சலி, கதிராமன், கோணா மலையார், உமாபதி, பாலியார் போன்றோர் அமை கின்றனர். காட்டாறு நாவலில் தாமரைக் கண்டு, கணபதி, சந்தனம், செவந்தி, புவனேஸ்வரி, செல்லத் துரை, செல்லாச்சி, மாயாண்டி, செங்கமலம் போன்ற பாத்திரங்கள் வாசகரின் மனதை விட்டகலாதவை. இதேபோல் எதிர்மறையான பாத்திரங்களும் உள்ளன.

நிலக்கிளி நாவலில் காணப்படாத விடயமொன் றாக முதலாளித்துவ அடக்குமுறைக்கு எதிரியான மாக்சீயச் சிந்தனை இளைஞர் மத்தியில் சந்தனத்தினூ டாக விதைக்கப்படுகிறது. அது படிப்படியாக உருப் பெற்று கதையின் இறுதிப் பகுதியில் விஸ்வரூபம் எடுக்கிறது.

நிலக்கிளி நாவலின் கதையின் முடிவு கோணா மலையரின் இறப்புடன் இரு குடும்பங்களும் ஒன்று சேர்வது சித்திரிக்கப்படுகிறது. முப்பத்தோராம் நாள் சடங்குக்காக கதிராமன், பதஞ்சலி, பாலியார், ராசு எல்லோரும் மலையர் வாழ்ந்த வளவுக்குள் வந்திருந் தனர். பதஞ்சலி செழும்பு பிடித்திருந்த வெங்கல விளக்கை மினுக்கிக் கழுவி விளக்கேற்றிய பின்னர் மீண்டும் கிணற்றடிக்கு சென்று வேலிக் கட்டைகளில் உல்லாசமாக அமர்ந்திருந்த இரு நிலக்கிளிகளைப் பார்த்து ரசித்துக் கொண்டே "சூய்.." எனக் கூற அவை சிறகடித்துப் பறந்து சென்றதைப் பார்த்த "அவள் குதித்துக் கொண்டே வீட்டை நோக்கிக் குதுகலத்துடன் ஓடியபோது, "என்ன பதஞ்சலி! பச்சை உடம்போடு பாய்ந்து திரிகிறாய்" என்று பாசத்துடன் கடிந்து கொண்டாள் பாலியார். தோட்டத்தில் வாழைகளுக்குப் பாத்தி கட்டிக் கொண்டிருந்த கதிராமன், பாலியார் கூறியதைக் கேட்டு மெல்லச் சிரித்துக் கொண்டான்.

"நிலக்கிளிகள் நிலத்தில் வாழ்பவைதான். உயரே பறக்க விரும்பாதவைதான். இலகுவில் பிறரிடம் அகப்பட்டுக் கொள்பவைதான். ஆனால் அவை எளிமையானவை! அழகானவை!, தம் சின்னச் சொந்த வாழ்க்கை வட்டத்துள்ளே உல்லாசமாகச் சிறகடிக்கும் அவற்றின் வாழ்க்கைதான் எவ்வளவு இனிமையானது" எனக் கூறிக் கதையை நிறைவு செய்கின்றார் ஆசிரியர்.

காட்டாறு நாவலில் தினசகாயம் கொலை செய்யப்படுகிறார். சியாமன் செவந்தியைக் கற்பழித்துக் குற்றுயிராக்குகின்றார். சந்தனம் இதற்கெல்லாம் முடிவு கட்டுவதாக வாக்குறுதி எடுக்கின்றான். இத்தனைக்கும் காரணமான சியாமன் மாரசிங்கம், கொன்ரக்டர் கந்தசாமி, அடியாள் வீரசிங்கம் ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. செபமாலை பன்றி வேட்டைக்குச் சென்று பன்றியின் தாக்குதலால் மரண மடைய செவந்தி விதவையாகிறாள். இளம் விதவையான அவளை அடையக் காம வெறியுடன் வரிந்துச் செவந்தியைக் கட்டிக் கொண்டு அலைகிறார் சியாமன். தன் வேலையாள் ஒருவனுக்குத் திருமணம் செய்து வைத்து தான் அனுபவிக்கத் திட்டமிடுகிறார். நாளை திருமணம் நிச்சயிக்கப்பட்டு நிச்சயிக்கப்பட்டுவிட்டது. செவந்தி சந்தனத்திடம் தஞ்சமடைகிறாள். அவளைத் திருமணம் செய்து அவளுக்குப் புதுவாழ்வு கொடுக்கச் சந்தனம் முன்வந்து தாலி சாமான் வாங்கக் கடைத் தெருவுக்குச் செல்கின்றான். இச்சந்தர்ப்பத்தில் சியாம னும் அடியாட்களும் சந்தனத்தின் தோட்டத்துக்குள் நுழைந்து தோட்டத்தை நாசம் செய்து அங்கிருந்த செவந்தியை வல்லுறவு கொண்டு குற்றுயிராக விட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கின்றார் சியாமன். இரவு வேளையில் தாலி சாமான்களுடன் தோட்டத்தை நோக்கிக் காட்டு வழியாகச் சந்தனம் வரும்போது மறைந்திருந்த வீரசிங்கம் பொல்லால் தாக்குகிறான். தலையில் அடிபட்ட சந்தனம் மூர்சையாகித் தரையில் விழுகிறான். நினைவு தெளிந்து புலவுக்குச் செல்கிறான். புலவு நாசமாக்கப்பட்டது போல் செவந்தியும் சிதைக்கப்பட்டு வாய்க்கால்கட்டின் மறுகரையில் கிடந்த செவந்தியைக் கண்டு...

செவந்தி ..” என்று வீறிட்டான். “பாய்ந்து சென்று அலங்கோலமாகக் கிடந்த அவளின் தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டான். அவள் தலை துவண்டது.

“செவந்தி... செவந்தி...” என அவன் அடங்காத் துயருடன் அழைத்தான்.” “செவந்தி... செவந்தி...” “அவளின் பஞ்சார்ந்த கண்கள் மெதுவாகத் திறந்தன. “முகத்தில் இருந்தால் போல் ஒரு திருப்தியான புன்னகை”.

“செவந்தி... ஆர் இதெல்லாம் செய்தது.” “அவள் எதையோ கூற முனைந்தாள். உதடுகள் அசைந்தன. “சி...ய...” அவ்வளவுதான்.

“செவந்தி...” என்று அலறினான் சந்தனம். அதைக் கேட்க அவளில்லை. வெகு நேரம் அழுதான். தன் கண்ணீர் வற்றும் வரை அவன் அழுதான். “செவந்தி இதற்குப் பழிவாங்காமல் விடமாட்டேன்.” “அரை மதியோன் அழுதபடி சரிந்து கொண்டிருந்தான்”. “சந்தனம் எழுந்து நின்றான். கதையும் சோகமாக நிறைவடைகிறது. இந்த நாவலை வாசித்த பலரின் கேள்வி, வாசகரைச் சோகத்தில் ஆழ்த்தி இருக்காமல் இளம் விதவையான செவந்தியையும் சந்தனத்தையும் கதைக்காக மாறுதல் செய்து இணைத்து வைத்துச் சுபமாகக் கதையைச் நிறைவு செய்திருக்கலாம். இதைச் செய்த மனித மிருகங்களுக்கு என்ன நடந்தது. என ஒன்றும் தெரியாமலே கதை நிறைவடைந்துவிட்டது.

இரு நாவல்களும் கதாசிரியர்களின் இளமைக் காலத்தில் எழுதப்பட்டவை. அதனால் ஒரு சில குறைபாடுகள் இருப்பதும் தவிர்க்க முடியாதது. உண்மையில் இந்நாவல்களின் சிறப்பினால் பல ஆயிரக் கணக்கான வாசகர்களைத் தம்வசம் ஈர்த்துக் கொண்டன என்பது யாவரும் அறிந்ததே. ஈழத்து நவீன தமிழ் நாவல் இலக்கியத்துக்குக் கிடைத்த வரப்பிரசாதமாக இந்நாவல்கள் இரண்டும் கொள்ளப்படுகிறது. பல ஆக்க இலக்கிய கர்த்தாக்கள், விமர்சகர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்நாவல்கள் இரண்டுக்கும் அதிகமான பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கின்றனர். ஒருமுறை வாசிக்க எடுத்தால் வாசகரின் ஆர்வத்தைத் தூண்டி இந்நாவல்களில் மூழ்கிவிடும் மனநிலையை ஏற்படுத்தி விடும். அத்தகைய சிறப்பு வாய்ந்தவை. அத்தோடு பலர் பலமுறை வாசித்தும் இருக்கின்றனர். இந்நாவல்கள் இரண்டும் குறித்த மக்கள் சார்ந்த வாழ்வியலைக் கூறும் வரலாற்று ஆவணங்கள் என்பதில் ஐயமில்லை.

---

# ஜலீலா முஸம்மிலின் ஹைக்கூ கவிதைகள்

1
எவ்வளவு பெரிய விடுதலை
சப்தங்கள் வழிக்கப்பட்ட
இந்த மௌனம்

2
குடையை விட்டும்
பிடிவாதமாக வெளியே நிற்கிறது
நிழல்

3
கொளுத்தும் வெயில்
குடத்தில் பெண் சுமக்கிறாள்
கானல் நீர்

4
மண்ணொழுங்கை
ஈரக்கோலமிடும்
நீர் வண்டி

5
இரவின் தனிமை
மிக்க ஆறுதலாய்
நிலவின் மௌன ஒளி

6
வீசும் காற்று
வாசல் அடையும்
தெருக்கொன்றைப் பூக்கள்

7
பூப்பதும் காய்ப்பதும் இல்லை
மழை வந்தால் மட்டும்
வ(ள)ரும் மின்னல் கொடி

8
மண்ணை முட்டி
தலை தூக்கிப் பார்க்கிறது
முளைக்கும் விதை

9
வரம் கேட்டிருக்குமோ?
குழந்தை கிடைத்தது
குப்பைத்தொட்டிக்கு

10
பெய்யும் மழை
கரைந்தோடுகிறது
பகல் வெம்மை

11
தொண்டை வரள வரள
கூவி விற்கிறான்
தண்ணீர் போத்தல்

12
சிறு நெகிழிப்பைக்குள்
சிறைப்பட்டுத் துடிக்கிறது
பெருங்கடல்

13
தொலைத்தது யார்?
தேடியலைகிறது
வான்வெளியில் நிலவு

14
வெள்ளை வேட்டி சட்டை
மறைந்துபோய் விட்டது
உள்ளக்கறை

15
இரா நதி
குளித்து கொண்டிருந்தது
நிலவொளியில்

16
கட்டிய தொட்டில்
மரத்தில் ஊஞ்சலாடும்
உதிர்ந்த சருகு

17
பாலை நிலம்
வரிவரியாக
வற்றிய நதிக்கதைகள்

18
துவைப்பது யாரோ?
தினமும் தூய சட்டை
அணிகிறது பட்டாம்பூச்சி

19
புலம்பெயரும் யானை
கண்டுபிடித்து விடும்
நிலத்தடி நீரோட்டம்

20
கவிதை எழுதி விட்டேன்
படபடப்போடு காத்திருக்கிறேன்
“ஹார்ட்டின்“களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமை கண்டு...

சிவ. ஆருரன்



*1992*

நகரின் பிரபல பெண்கள் பாடசாலையில் நான் ஆண்டு ஒன்பது மாணவி. அன்று ஒரு பாடசாலை நாள். இடைவேளை மணி ஒலிக்கிறது. எமக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருந்த கணித ஆசிரியை வெளியேறுகிறார். நான் புத்தகப்பையை ஒழுங்குபடுத்தி விட்டு, கன்ரீனுக்கு செல்வதற்கு வகுப்பறையை விட்டு வெளியே வருகின்றேன். அடுத்த வகுப்பில் என் சினேகிதி வானதி படிக் கிறாள். நாம் இருவரும் ஆரம்பப் பாட சாலையில் ஒரே வகுப்பில்தான் கற்றிருந் தோம். ஆறாம் ஆண்டில் இப்பாட சாலைக்கு வந்தோம். எம் விதிப்பயனோ என்னவோ அவளை A வகுப்பிற்கும் என்னை B வகுப்பிற்கும் அனுப்பிவிட்டார்கள். எங்கள் இருவரின் வீடுகளும் வெவ்வேறு திசைகளில் இருப்பத னால் நாம் வெவ்வேறு வழிகளில்தான் பாடசாலைக்கு வந்து போகிறோம். ஆயினும் இடைவேளையில் சந்திப்பது; பாடசாலை முடியும்போது சந்திப்பது: ரியூட்டரியில் சந்திப்பது என எம் சந்திப்புக்கள் நீண்டு செல்லும். இடையிடையே நாம் பரஸ்பரம் வீடு வாசல்களுக்கும் சென்று வருவதுண்டு.

நான் இப்போது நடைபாதைக்கு வருகிறேன். வகுப்பின் நடைபாதைக் கரையின் குறைச்சுவரில் வேறு வகுப்பு மாணவியர் குழுமி நின்று அந்த வகுப்பறையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நான் விரைந்து செல்கிறேன் அங்கு கண்ட காட்சி என்னைக் கலவரப் படுத்துகின்றது. வகுப்பறையில் வானதி எழுந்து நிற்கிறாள். அவளிற்கு முன்பாக பழனிப்பிள்ளை ரீச்சர் கையில் பிரம்போடு நிற்கிறார்.

எமது பாடசாலையின் கொடுங்கோல் ஆசிரியைகள் பலரில் பழனிப்பிள்ளை ரீச்சர் முதன்மை யானவர். தயவு தாட்சணியம் என்பது அவரின் அகராதி யில் கிடையாது. ஆண்களை எள்ளலாகப் பார்ப்பவர்: அதனால் திருமணம் செய்து கொள்ளாதவர் இந்த மிஸ் பழனிப்பிள்ளை யாருக்கும் பயப்படமாட்டாள்" என அடிக்கடி உச்சரிப்பார். அவர் ஆண்களை வெறுக்கிறார் என்பதில் ஒரு நியாயம் இருப்பதாகக் கொண்டாலும் ஏன் பெண்களாகிய எங்களையும் வெறுக்கிறார் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது. எம் வகுப்பிற்கு வாழ்க்கைத்திறன் பாட ஆசிரியையாக இருக்கிறார். அடிமட்டத்தைக் கொண்டு கைமொழியில் அடிப்பது, தையல் ஊசியால் குத்துவது போன்ற தண்டனைகளைச் சர்வ சாதாரணமாகவே வழங்குவார்.

"ஏன் சாப்பாடு கொண்டு வரேல்லை?" ரீச்சர் அதட்டிக் கேட்கிறார்.

"அம்மாக்குச் சுகமில்லை: அதுதான் இண்டைக்குக் கொண்டு வரேல்லை, ரீச்சர்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவ்வியமாகக் கூறுகிறாள் வானதி. அவளின் குரல் தேய்ந்து ஓய்கிறது.

பழனிப்பிள்ளை ரீச்சர் வானதியின் வகுப் பாசிரியை. மாணவர் அனைவரும் மதிய உணவைத் தவறாது வீட்டில் இருந்து கொண்டுவர வேண்டும் என்பது அவர் வகுத்திருக்கும் சட்டம். இன்று வானதி மதிய உணவு கொண்டு வரவில்லை. அதன் விளைவே இது என விளங்கிக் கொள்கின்றேன்.

"அடியே! இண்டைக்கு நான் உனக்குத் தாற தண்டனையில நாளைக்கு உன்ரை ஆத்தை சாப்பாடு தந்து விடுவா" என்ற ரீச்சர், வகுப்பிலுள்ள ஏனைய மாணவியரைப் பார்த்து, "எல்லாரும் இவளுக்குச் சாப்பாடு குடுக்கோணும், சரியா" என்று கூறி, வகுப்பின் தலைவி வித்தியாவைக் கூப்பிடுகிறார். "எல்லாரிட்டை யும் கொஞ்சம் கொஞ்சம் சாப்பாடு வாங்கி கொண்டு வா!" வித்தியா தயங்கு கிறாள், ரீச்சரைப் பார்க்கிறாள்.

"என்னடி என்ர முகத்தைப் பார்க்கிறாய்!" ரீச்சர் அதட்டி தடியை ஓங்குகிறார்.

வித்தியா பயந்துபோய் கையை முகத்திற்குக் குறுக்கே பிடித்து ஒதுங்குகிறாள்.

ரீச்சர் எல்லா மாணவியரதும் சாப்பாட்டுப் பெட்டிகளை நோட்டமிட்டுவிட்டு, அதில் பெரிய சாப்பாட்டுப் பெட்டியின் மூடியை வித்தியாவிடம் காட்டி, அதை எடுத்து அதில் உணவை சேர்க்குமாறு பணிக்கிறார். வித்தியா அந்த மூடியை எடுத்து மேசை மேசையாகச் சென்று ஒவ்வொரு மாணவியிடமும் நீட்டுகிறாள். ஒரு மாணவி சாப்பிட்ட கையால் உணவிட விரும்பாதவளாக மறு கையால் உணவிடத் தயாரான போது ரீச்சர் கண்டு விடுகிறார். "வலக்கையால எடுத்து வை" என்கிறார்.

"எச்சில் கையால சாப்பாடு குடுத்தால் அம்மா ஏசுவா" தயங்குகிறாள்.

"குடுக்காட்டி நான் அடிப்பன்!"

அவள் கறி சேர்த்துக் குழைத்த பிட்டின் சிறிதளவை எடுத்து வைக்கிறாள்.

வேறொரு மாணவி தன் தோசையின் தூய்மை யான ஓரத்தை நுணுக்கமாகக் கிழித்து வைப்பதைக் கண்ட ரீச்சர், "சாப்பிட்ட பக்கத்தால வையடி" என்று அதட்டி, அதைச் செய்விக்கிறார். அடுத்த மாணவி சாப்பாடு போடவே விரும்பவில்லை.

"உனக்கு என்னடி?" ரீச்சர் அவளிடம் கேட்கிறார்.

"ரீச்சர்... புட்டை வாழைப்பழத்தோட பினைஞ்சு போட்டன்..." இழுக்கிறாள்.

"நஞ்சு இல்லைத்தானே... எடுத்து வை!" ரீச்சரின் விளக்கம் இது.

அரைமனதோடு ஒவ்வொரு மாணவியும் உண்டு விடுகின்றனர். அந்த மூடி உணவினால் பெருகிக் கிடக்கிறது. இருவருக்கும் போதுமான சாப்பாடு அது. இடியப்பம், இட்லி, தோசை, பிட்டு, பாண், சௌபி, கடலை, பயறு, உழுந்து, கறி, சம்பல், தேங்காய்ப்பூ, சீனி, சர்க்கரை, வாழைப்பழம் இன்ன பிற வகையறாக்கள் கலந்த ஓர் அறுசுவை (எச்சில்) அடிசில், வித்தியா அத்தட்டை வானதியின் மேசையில் வைக்கிறாள். என் நெஞ்சு அக்காட்சியால் பதறுகிறது. அது நஞ்சற்ற உணவு தான்: எனினும் அதைப் பார்க்கும் போதே வயிற்றைக் குமட்டிக் கொண்டு வருகிறது.

"சாப்பிர்றீ... இண்டைக்கு உனக்குத் தான் சாப்பாடு கூட" என்கிறார் ரீச்சர்.

வானதி சாப்பாட்டையும் ரீச்சரின் முகத்தையும் மாறி மாறிப் பார்க்கிறாள். வாடி வதங்கி வளைந்து நிற்கிறாள். பல்லைச் சற்று இளித்து முகத்தைக் கோணி தன்மீது பரிதாபம் ஏற்படுத்தும் வகையில் நிற்கிறாள். எல்லோருக்கும் அவள் மீது பரிதாபம் ஏற்படுகிறது. ஆனால் ரீச்சருக்கு மட்டும் உகூம்! "என்ரை முகத்தைப் பார்க்காமல் சாப்பிடடி..." ரீச்சர் அதட்டுகிறார்.

இதற்கிடையில் நடைபாதையில் வேறு வகுப்பு மாணவிகள் கூடிவிடுகின்றனர். வானதி காட்சிப் பொருளாகி விடுகிறாள். பலர் பார்த்துக் கொண்டிருப் பதைக் கண்டு ரீச்சரின் உற்சாகம் அதிகரிக்கின்றது. வானதி ரீச்சரின் முகத்தையே பார்த்துக் கொண்டு நிற்கிறாள். "அடியே! நீ என்ன பிராமணத்தியோ? சாப்பிடடி" என்று கூறி ரீச்சர் ஒருமுறை அடிக்கிறார். ஏனைய மாணவியரைப் பார்த்து "இவளை சாப்பிடச் சொல்லுங்கோடி!" என உறுமுகிறார். ரீச்சரின் முகத்தைப் பார்க்கக் கொடூரமாகத் தெரிகிறது.

நடைபாதையில் என்னருகே நிற்கும் என் வகுப்பு மாணவி, "என்னப்பா வானதி உம்மட சினேகிதிதானே, சாப்பிடச் சொல்லும்" என்கிறாள்.

"நீர் சாப்பிடுவீரோ?" நான் திருப்பிக் கேட்கிறேன்.

"என்னண்டு சாப்பிடுறது!" முகஞ்சுழிக்கிறாள்.

"ஆங், அது மாதிரித்தான் மற்றவைக்கும்"

அவள் அமைதியாகிறாள்.

வானதி சாப்பிடாது நிற்பது எனக்கு ஆறுதலாக விருக்கிறது. ரீச்சர் ஏசியபடியே இன்னொரு முறை அடிக்கிறார். எனக்கு ரீச்சர் மீது கோபம் வருகிறது.

ஈற்றில் வானதி பணிந்து விடுகிறாள். அவள் ஒருமுறை அள்ளி வாயில் வைத்து விழுங்கியதும் நான் என் வகுப்பறைக்குத் திரும்பி வந்து கதிரையில் அமர்ந்து விடுகிறேன். நெஞ்சு குமுறுகிறது. இயலாமையால் கண்ணீர் வருகிறது.

ரீச்சர் தனக்கு திருப்தியாகும் வரை வானதியை சாப்பிட வைத்துவிட்டு வகுப்பறையை விட்டு வெளியேறியதும் மாணவியர் செத்தவீட்டிற்குச் சென்று ஆறுதல் கூறும் தோரணையில் அவளிடம் செல் கின்றனர். எனக்கோ அவளைக் கண்கொண்டு காணவே இயலாது இருக்கிறது. என் கதிரையிலேயே இருந்து விடுகிறேன்.

பாடசாலை முடிந்ததும் மாணவத் தலைவர்கள் வானதியின் வகுப்பை எம் வகுப்பிற்கு முன்னதாகச் செல்ல அனுமதிக்கின்றனர். வானதி யாரிடமும் பேசிக் கொள்ளாது குனிந்த தலை நிமிராது சென்று விடுகிறாள். எனக்காகக் கூடக் காத்திருக்கவில்லை. எனக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழனிப்பிள்ளை ரீச்சரின் மீது வெறுப்பாக இருக்கிறது. அவரை சும்மா விடக்கூடாது என முடிவெடுக்கிறேன். அதற்கு உதவக்கூடியவர் என் அண்ணா மாத்திரமே. அண்ணா அப்போது யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருட மாணவன். அவருக்கு சமூகத்தில் உள்ள பெரிய பெரிய மனிதர் களோடு பழக்கம் இருக்கிறது. அவரைக் கொண்டு ரீச்சர் மீது நடவடிக்கை எடுக்கலாம் என உறுதியாக நான் நம்புகிறேன். திருப்தியோடு வீடு வந்து சேர்கிறேன்.

மாலையில் அண்ணா வீடு வந்து சேர்கிறார். அவர் வந்ததும் வராததுமாக பாடசாலையில் நடந்த அனைத்தையும் அவரிடம் கூறுகிறேன். வெப்பசாரம் தாழாது அழுதும் விடுகிறேன். அண்ணாவிற்கு கோபம் வந்துவிடுகிறது. "தங்கச்சி, நீ சாட்சி சொல்லுவியோ?" சீற்றத்தோடு கேட்கிறார்.

"ஓம்!"

"நீ சாட்சி சொன்னால் பள்ளிக்கூடத்தில இருந்து உனக்குப் பிரச்சினை வரலாம். அப்பிடி வந்தால் உன்னை வேறை பள்ளிக்கூடத்துக்கு மாத்திவிடுறன். கொத்தணி, கோட்டம் எண்டு எங்கை வேணுமெண்டா லும் போகலாம். நீ ஒண்டுக்கும் யோசிக்காதை" அண்ணா என் தலையைத் தடவி விடுகிறார்.

அண்ணா குளித்து சாப்பிட்டு விட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே செல்கிறார். இரவு எட்டு மணியளவில் திரும்பி வருகிறார் "தங்கச்சி, வெளியில தெரிஞ்ச ஆக்களோட கதைச்சுப் பாத்திட்டு வாறன். பாதிக்கப்பட்டது வானதிதானே. அவ முறைப்பாடு செய்தால் சரி. நீ முதலில வானதியோடை கதைச்சிட்டு வா" என்று கூறுகிறார்.

மறுநாள் சனிக்கிழமை காலை ஆகாரத்திற்கு முன்னதாகவே சைக்கிளை எடுத்துக் கொண்டு வானதி வீட்டுக்குச் செல்கிறேன். அவளின் வீட்டுப் படலையைத் திறந்தபோது அவளின் அம்மாவே என்னை வரவேற் கிறார். சில நிமிடங்கள் அவரோடு பேசுகிறேன்.

"என்னப்பா, உம்மை நேற்றெல்லாம் காணக் கிடைக்கேல்லை" என்றவாறு வானதி வெளியே வரு கிறாள்.

அவளின் முகம் சாதாரணமாகவே தெரிகிறது. அவள் வந்ததும் அவளின் அம்மா வீட்டினுள் செல் கிறாள்.

வானதி நானும் தனிமையாக ஒதுங்கியதும் வந்த விடயம் குறித்து அவளோடு பேச ஆரம்பிக்கிறேன்.

"வானதி, நாங்கள் பழனிப்பிள்ளை ரீச்சரை சும்மாவிடக் கூடாது! நடவடிக்கை எடுக்க வேண்டும்"

"ஏனப்பா? என்ன நடந்தது?" இவ்வாறு வானதி கேட்க நான் குழம்பிப் போகிறேன்.

"இல்லையப்பா... ரீச்சர் உமக்கு மிச்ச சாப்பாடு சாப்பிடத் தந்தவா எல்லோ."

"எப்ப தந்தவா?" வானதி அதிர்ச்சியோடு கேட்கிறாள்.

"உமக்கு ஆரும் பிள்ளையள் பகிடிக்குச் சொல்லியிருக்குங்கள் நீர் நம்பீட்டீர் போல"

வானதி முழு பூசணிக்காயை ஒரு தட்டுச் சோற்றில் மறைக்க முற்படுவது எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. அச்சம்பவத்தை நான் கண்டது இன்னும் அவளுக்குத் தெரியாது போலும். நேற்று நான் பாட சாலைக்குச் சமூகமளிக்கவில்லை என்றே அவள் நினைக்கிறாள். அவளின் பேச்சு உறுதிப்படுத்துகிறது.

"வானதி... நான் நேரில கண்டனான் அப்பா" விடயத்தைப் போட்டுடைத்து விடுகிறேன்.

இப்போது வானதியின் முகத்தில் அசடு வழிகிறது. ஒருவிதமாக சிரிக்கிறாள். "அதை விடும்... வேறை ஏதாவது கதைப்பம்..."

"என்னப்பா நீர் உமக்கு நடந்தது அநியாயம். அதனால இதை மேலிடத்துக்குக் கொண்டுபோக வேணும்."

"அதை ஏன் பெரிசுபடுத்த வேணும்? சும்மா விடுவம்" வானதி மிக இலகுவாக கூறுகிறாள்.

"என்னப்பா நீர்? ஒண்டுக்கும் பயப்படாதையும் நீர் முறைப்பாடு குடும்: சாட்சிக்கு நான் வாறன். முதலில அதிபரிட்ட சொல்லுவம்: பிறகு கொத்தணி, கோட்டம் எண்டு மேற்கொண்டு போகலாம்."

"சும்மா இரும்!" வானதி என்னை அதட்டு கிறாள். "சாப்பிட்டது நான்தானே, நீரில்லையே நானே சும்மாவிடும் எண்டிறன்: உமக்கு என்ன பிரச்சினை?" வானதியின் முகம் கோபத்தில் சிவக்கிறது.

நான் மௌனிக்கிறேன். இரு நிமிட அமைதியின் பின் வேறு விடயங்களைப் பேசிவிட்டு விடைபெறு கிறேன்.

திரும்பி வரும்போது வழிநெடுகிலும் அண்ணா ஏசப்போகிறாரே என்ற பயம் மேலெழுகிறது. அண்ணா வோடு பேசுவதற்கு முன்னதாக வானதியோடு பேசி யிருக்க வேண்டும் அல்லவா.

என் பேச்சை நம்பி அண்ணா நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து விட்டாரே. அண்ணாவிடம் என்ன கூறுவது? நான் வீட்டுப் படலையைத் திறந்தபோது அண்ணா முற்றத்தில் நிற்கிறார். அவரை நெருங்கிச் சென்று வானதியோடு பேசியதைக் கூறுகிறேன். அண்ணா கோபப்படவில்லை. அது எனக்கு வியப்பாக விருக்கிறது.

நான் கூனிக்குறுகிக் குற்றவுணர்ச்சியோடு நிற்பதைக் கண்ட அண்ணா, "நீ ஏன் யோசிக்கிறாய்? இப்பிடியும் நடக்கும் எண்டு நான் எதிர்பார்த்தனான்" என்றபடி என் தலையில் கை வைத்து தேற்றுகிறார். "அடிமை வாழ்வை விரும்பி ஏற்றுக் கொள்பவர் இருக்கும்வரை விடுதலைக்கான முன் னெடுப்புக்கள் சாத்தியமில்லை" என ஒரு ரஷ்ய நாட்டு அறிஞர் சொல்லியிருப்பதாக கூறிவிட்டு அண்ணா அப்பால் செல்கிறார்.

அண்ணா இவ்வாறு கூறியதையும்; அண்ணா ஏன் கோபப்படவில்லை என்பதையும் விளங்கிக் கொள்ள என் பகுத்தறிவு வெளியைத் திறந்து விடுகிறேன். ஆயினும் அதை விளங்கிக் கொள்ள எனக்குச் சில ஆண்டுகள் எடுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா



# யாழ் திரைப்படத் துறையின் முன்னோடி ஜோ தேவ் ஆனந்த்

(சிங்கள சினிமாவின் ஆரம்பகால வளர்ச்சிக்கு அடிகோலியவர்களே தமிழர்கள் தான். அவர்களில் ஒருவரே முன்னோடியான ஜோ தேவ் ஆனந்த் விளங்குகிறார். அண்மையில் அவர் அரச விருதுகளைப் பெற்றுள்ளார்.)

1980களில் சிவாஜி கணேசன் நடித்த "பைலட் பிரேம்நாத்" திரைப்படத்திற்கு இணை இயக்குநராக ஜோ தேவ் ஆனந்த் பணியாற்றினார்.

மேலும் ஜெய்சங்கர், ராதிகா மற்றும் நாகேஷ் நடித்த "ரத்தத்தின் ரத்தமே" என்ற இலங்கையில் வெற்றிகரமான திரைப்படத்தையும் அவர் இயக்கி யுள்ளார். இத்திரைப்படம் இந்தியாவிலும் திரையிடப் பட்டு வெற்றியடைந்தமை குறிப்பிடத்தக்கது)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரிய ரான "ஜோ தேவ் ஆனந்த்" ( Joe Dev Anand ) 1960களின் முற்பகுதியில் இலங்கைத் தமிழ்த் திரைப்படமான "பாச நிலா" திரைப்படத்தை (16மிமீ) இயக்கி வெளியிட்ட பெருமைக்குரியவர்.

பின்னர் கொழும்புக்கு வந்த பிறகு, கீதா, சுஜீவா, சுனேத்ரா மற்றும் சூகிரிகெல்லா ஆகியோருடன் இணைந்து இயக்கி சிங்களத் திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க வகையில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர்.

இலங்கையில் சிங்கள சினிமாவின் ஆரம்பகால வளர்ச்சிக்கு அடிகோலியவர்களே தமிழர்கள்தான். அவர்களில் ஒருவரே முன்னோடியான ஜோ தேவ் ஆனந்த் விளங்குகிறார். அண்மையில் அரச விருது களைப் பெற்றுள்ளார்.



திரைப்படக்கலை ரீதியாகவும் தொழில் ரீதியாக வும் இலங்கை நாடு சளைத்து விடவில்லை. சர்வதேசப் பரிசில்களைப் பெறுமளவுக்குப் பல சிங்களப் படங்கள் இங்கிருந்து உருவாகியிருக்கின்றன. இந்தச் சிங்களப் படத்தொழிலை நம்பியே பல கலைஞர்கள் நிலைக்கத் தொடங்கி விட்டார்கள். அது பெரிய தொழிலாகவே மாறிவிட்டது.

சினிமா என்பது ஓர் உன்னதக் கலைச் சாதன மாகும். எல்லாக் கலைகளையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் பிரபலமான கலையாகும். வேடிக்கை யாக ஆரம்பித்த சினிமாக்கலை வேகமாக உலகமெல் லாம் பரவி அனைத்து மக்களையும் தற்போது ஈர்த்து நிற்கின்றது.

**பைலட் பிரேம்நாத் இணை இயக்குநர்:**

சிவாஜி கணேசன் நடித்த "பைலட் பிரேம்நாத்" திரைப்படத்திற்கு இணை இயக்குநராக இருந்தார். ஜெய்சங்கர், ராதிகா மற்றும் நாகேஷ் நடித்த "ரத்தத்தின் ரத்தமே" என்ற இலங்கையில் வெற்றிகரமான திரைப் படத்தையும் அவர் இயக்கியுள்ளார், இது இந்தியாவிலும் திரையிடப்பட்டது.

தற்போது, 94 வயதில், பிரதமர் தலைமை விருந் தினராகக் கலந்து கொண்டு, BMICH மண்டபத்தில் கடந்த ஜூன் மாதம் 13, 2025 அன்று அவர் நடித்த படங்களுக்காக சிறப்பாக கௌரவிக்கப்பட்டார்.

இலங்கைத் தமிழ் திரைப்படத் துறையில் கடைசியாக வாழும் சில ஜாம்பவான்களில் ஒருவராக இருந்து வருகிறார்.

**சிங்கள திரைப்படத்தை இயக்கிய தமிழர் :**

1950ஆம் ஆண்டிலேயே இலங்கையில் தமிழ்ப் படத் தயாரிப்பு முயற்சிகள் ஆரம்பமாகின எனலாம். இதுவரை அநேக தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறலாம். ஆனாலும், 1950 இல் ஐம்பது படங்கள் வெளியாகிய நிலையில் அவற்றில் 36 படங்கள் மட்டுமே திரைக்கு வந்திருக்கின்றன என அப்போது கூறப்பட்டது.

இவ்வாறு வளர்ச்சிக் கண்ட ஈழத்து சினிமா இன்றைளவில் பல்வேறு பாங்கில் வெற்றி கண்டுள்ளது எனலாம்.1947 ஆம் ஆண்டு முதல் இலங்கை நாட்டில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் வெளியாகும் திரைப்படங்களையும், அதைச் சார்ந்த தொழிலாளர் களையும் உள்ளடக்கிய திரைப்படத்துறை ஆகும். 1947 ஆம் ஆண்டு தயாரிப்பாளர் எஸ். ஏம். நாயகம் என்பவரால் “கடவுனு பொறந்துவ “என்ற முதலாவது சிங்கள மொழி பேசும் திரைப்படம் தயாரிக்கப்பட்டது.

இலங்கைத் திரைப்படத்துறைக்கு அடித்தளம் இட்டவர் எஸ். ஏம். நாயகம் என்ற தமிழரே ஆவார். மேலும் இலங்கைத் தமிழ்த் திரைப்படத்துறை வரலாற்றில் இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ்த் திரைப்படம் 1951 இல் வெளியான “குசுமலதா“ என்ற திரைப்படம் கருதப்படுகின்றது.

**ஈழத் திரைப்பட தனித்துவம்:**

காலங் காலங்களாக தமிழ் நாட்டு திரைப் படத்தின் உள்ளடக்கம், ஆரம்ப வருடங்களில் இருந்த அளவிலேயேதான் உள்ளது. சித்தாந்தம் மற்றும் தர ரீதியில் வளர்ச்சியில்லை. இயக்குநர்கள் அனைவரும் பாட்டு, குழு நடனம், துரத்தல் சண்டை, பாலியல் கிளுகிளுப்பு இவைகளையே ஒரு ஜனரஞ்சகமான கேளிக்கை சாதனமாக செயல்படுத்தினர்.

ஆனாலும் இலங்கைத் தமிழ் சினிமா கலைஞர் களின் கலை நயத்தை வெளிப்படுத்தும் வகையில் வித்தியாசமான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் சினிமாவாக வெளிவந்தன. இந்த வரிசையில் இலங்கைத் தமிழ் திரைப்படத் துறையில் கடைசியாக வாழும் சில ஜாம்பவான்களில் ஒருவராக ஜோ தேவ் ஆனந்த் இருந்து வருகிறார்.

தமிழக சினிமாவில் வியாபாரத் தனமே முக்கிய அம்சமாக நிலைத்தது. இந்த நூற்றாண்டின் இறுதியில் விரிந்து பரவிய தொலைக்காட்சி தமிழ் திரைப்படத் துறையின் மற்றொரு விரிவாக்கமாக உறைந்து விட்டது. படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சிகள் போல தமிழ் திரைப்படங்கள் உருவெடுத்தன. இன்றும் அதே பாணியில் தொடருகின்றன. ஆனால் இவற்றுள் இருந்து மாறுபட்ட திரைப்படங்களாக இலங்கைத் தமிழ் சினிமாவின் வரலாறு அமைந்துள்ளது.

**ஈழத்தில் அச்சில் AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வெளிவரும் முதல் காமிக்ஸான “வியாக்ரன்” நூலினைஅதன் ஆசிரியர் இ.சு.முரளிதரன் பின்வரும் பாடசாலைகளுக்கு நூலக மாதத்தை முன்னிட்டு வழங்கிச் சாதனை படைத்துள்ளார்.**

1கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி(அனுசரணை ஐ.பிரதீபன்... 250பிரதிகள்) உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி(அனுசரணை வி.மணிமாறன். வி.விஜயரூபன் 100பிரதிகள்) இமையாணன் அ.த.க வித்தியாலயம் (அனுசரணை சி.புஷ்பராசா.50பிரதிகள்), கரணவாய் மகா வித்தியாலயம் (அனுசரணை க.குகதாசன்100பிரதிகள்), கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க பாடசாலை (அனுசரணை பொன் சத்தியேந்திரன்100பிரதிகள்) என்பவற்றுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. மொத்தமாக 600 பிரதிகள்.

யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் - வேலாயுதம் கண்ணனின் அனுசரணையோடு 50 மாணவர்களுக்கு ஜீவநதி வெளியீடான "வியாக்ரன் கொமிக்ஸ்" நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. யா/கனக ரத்தினம் மகாவித்தியாலயத்தில் (ஸ்ரான்லி கல்லூரி) - வேலாயுதம் கண்ணனின் அனுசரணையோடு 50மாணவர்களுக்கு ஜீவநதி வெளியீடான "வியாக்ரன் கொமிக்ஸ்" நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

மு/முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் அதிபர் சி.மோகஜீவன் தலைமையில்..வாசிப்பு மாத நிகழ்வு நடைபெற்றது. சுவீடன் தேசத்தில் வாழும் புலம் பெயர் உறவான ஆறுமுகம் மகுலனின் அனுசரணையோடு 100 மாணவர்களுக்கு ஜீவநதி வெளியீடான "வியாக்ரன் கொமிக்ஸ்" நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கிளிநொச்சி குமாரசாமி புரம் அ.த.க பாடசாலை அதிபர் கே.எம்.செல்வதாஸ்.. நிகழ்வை நெறிப்படுத்தினார்...















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குவல்லை கமால்

# சொல்லாமல் சொல்லும் சொல்



பிளாஸ்திக் கோப்பையில் தண்ணீருடன் பலகைக் குற்றித் துண்டொன்றில் அமர்ந்து கொண்டேன். வாரம் ஒருமுறை தவறாமல் நடக்கும் காரியம் இது. வேறென்ன? நகம் வெட்டுவது தான். வீட்டுப் பின்புற கொய்யா மரத்திலிருந்து குருவிகள் கீச்சுபீச்சென்று ஏதோ கதைத்துக் கொள்வதுபோல் தெரிந்தது.

அப்போதுதான் எங்கோ போய்விட்டு வாப்பாவோடு வந்திறங்கினான் சின்னவன். வித்தியாசமான இருப்பில் என்னைக் கண்டதும் என்னவென்று பார்க்க ஓடிவந்திருக்கக்கூடும். சட்டென்று அவனுக்கு விளங்கி விட்டது.

"அப்ப ஜூம்மாக்கு போகப்போறா?"

அவனது கேள்வி சிரிப்பாய் மலர்ந்தது எனக்குள்.

"ஓஓ புள்ளேம் வாரா அப்போட பள்ளிக்கிப் பொக?"

"நானும் வாரவார"- என்றவாறுவீட்டினுள்ளே ஓடிப்புகுந்தான்.

வெள்ளிக் கிழமை ஜூம்மாத் தொழுகைக்குப் போகவேண்டுமென்று அவனுக்குத் தெரிந்திருக்காது. ஆனால் நகம் வெட்டினால் ஜூம்மாவுக்கு போவார்கள், என்பதை எட்டு வயதுகூட ஆகாத சின்னவன் தெரிந்து வைத்திருந்தான்.

கை நகங்களை சுலபமாக வெட்டிக்கொள்ள முடிந்தது. பெருவிரல் கால்நகம் மிகவும் வன்மையானது. அதனை "வெட்டமாட்டேனென்று "நகக் கட்டர் கடுமையாக எதிர்த்து நின்றது. நானும் விடாமல் போராடினேன். ஜூம்மாத் தொழுகைக்கு போவதற்கு குளித்துக்கொள்வதும் சுன்னத்துதான்.

குளித்தாயிற்று.இனி "என்னைத்தொடு" என்று காலைச் சாப்பாடு அழைப்பு விடுத்தது.

பதினொரு மணி தாண்டிவிட்டது. அயன் பிடித்து வைத்திருந்த சாரன் - சேர்ட் உள்ளிட்ட உடுப்புக்களை அணிந்துகொள்ளத் தயாரானேன்.

நேரகாலத்துடன் போனால்தானே வசதியான ஓர் இடத்தில் அமர்ந்துகொள்ள முடியும்.

"அப்பா அத்தரு"- என்றவாறு அத்தர் குப்பியை மணக்கமணக்க கொண்டுவந்தான் சின்னவன்.

கைகளிலும் உடையிலும் சற்றே தடவிக் கொண்டேன். அத்தர் குப்பி சின்னதுதான். ஆனால் அது எழுப்பும் புத்துணர்ச்சி அலாதியானது.

சின்னவன் வாப்பாவோடு போகாமல் என்னோடு வரத்தான் ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு தொழுகை கடமையாகும் வயது இன்னும் வரவில்லை.ஆனாலும் இந்த வயதுச் சிறுவர்கள்தான் முந்திக்கொண்டு பள்ளிவாசலை ஆக்கிரமித்து விடுவார்கள். மட்டுமன்றி மேல்மாடியில் இடம்பிடித்து சின்னச்சின்ன கூத்துக்களையும் செய்யத் தவற மாட்டார்கள்.

"அப்பா போம்"

அவன் தயாராகி வந்து என்னை அவசரப் படுத்தினான். வெள்ளை ஜூப்பாவும் வெள்ளைத் தொப்பியும் அணிந்திருந்தான். முகம் பளிச் சென்றிருந்தது. தாடிதான் இல்லை.சின்னதொரு தாடியும் வைத்து , கற்பனைசெய்து பார்த்தபோது ஒரு குட்டி "தாயி"போல் தோற்றமளித்தான்.

"உம்மா நாங்க ஜூம்மாக்குப் போற. வரச் செல்லே தைத்து முட்டீம் வாழப்பழமும் கொணரோணுமே உம்மா"- உறுதிப்பாட்டுடன் உம்மாவிடம் விடை பெற்றுக் கொண்டான்.

நடைத்தூரத்தில்தான் பள்ளிவாசல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***

ஜூம்மா பிரசங்கம் ஆரம்பமாகியது.

"அல்லாஹ் வயது வந்த ஒவ்வொரொவருக்கும் திருமணத்தை வாஜிபாக்கியுள்ளான். விபச்சாரத்தி லிருந்து ஒவ்வொருவரும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேணும்.விபச்சாரம் கொடிய பாவமாகும்."

இப்பொழுதெல்லாம் வாராவாரம் புதுப்புது மௌலவிமார்கள் வந்து பிரசங்கம் செய்கிறார்கள். அதில் சாதக பாதகங்களும் உண்டு.சிலர் ஆர்வ மேலீட்டால் பேசுவது ஜமாஅத்தார் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதுமுண்டு.

"இன்று விபசாரத்தை சிலநாடுகள் சட்டபூர்வ மாக்கியுள்ளது.அதன் தாக்கம் வெவ்வேறு மதகலாசாரங் களுக்குள்ளும் ஊடுருவியுள்ளதாகத் தெரிகிறது. விபசாரம் வெவ்வேறு விதமாகவும் சமுதாயத்தில் புகுந்து கொள்ள வாய்ப்புண்டு"

நான் சுற்றுமுற்றும் பார்த்தேன்.யாரும் தூங்கி வழிவதாகத் தெரியவில்லை.பொதுவாக எங்கோ தொடங்கி எங்கோ முடியும் பயான்களைத்தான் நிகழ்த்துவார்கள். இவரோ ஒரு வாலிபன். நேர் கோட்டில் தான் பேசிக்கொண்டிருந்தார்.அவரது மொழிநடையும் பரவாயில்லை.

"இன்று பத்திரிகைகளாகட்டும் , வானொலி-தொலைக்காட்சி ஆகட்டும், ஸ்மாட்ஃபோன் - கம்பி யூட்டராகட்டும் எல்லாமே வாலிபர்களை விபச்சாரத் துக்கு தூண்டுவனவாகவே இருக்கின்றன. மெல்ல மெல்லப் பெண்களும் இதற்கு வசப்பட்டவர்களாகி வருகின்றனர்."

நான் பேரனைக் கொஞ்சம்? அவதானித்தேன். அவனுக்கு எதுவும் விளங்காவிட்டாலும் கண் கொட்டாமல் பார்த்தபடியே இருந்தான். சிலவேளை மௌலவியின் பேச்சு அவனைக் கவர்ந்திருக்கக்கூடும்.

"வாலிபர்கள் மட்டுமல்ல மேல்வகுப்பு மாணவி களும் பல்கலைக் கழக மாணவிகளும்கூட ஃபோனும் கையுமாகவே இருக்கிறார்களாம்.ஏனென்று கேட்டால் படிப்புத் தேவை என்கிறார்களாம்.அதில்வரும் ஆபாஷ விடயங்களையும், விபச்சாரக் காட்சிகளையும், அவர்கள் பார்க்க மாட்டார்கள் என்பதற்கு என்னதான் உத்தரவாதம்.? பெற்றார்களே உங்கள் பிள்ளைகள் மெல்லமெல்ல விபச்சாரத்தின் பக்கம் தள்ளப்படும் விடயத்தில் கண்ணும்கருத்துமாக இருங்கள்"

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. பெற்றாரும் வாலிபர்களும் மாத்திரமா இங்கே அமர்ந்திருக் கிறார்கள். ஐந்து வயதுக் மேற்பட்ட எல்லாப் பிள்ளை களும் இங்கேதான் உள்ளனர். இதைக் கருத்தில் கொண்டல்லவா பயான்கள் அமைய வேண்டும். என்னைப்போல் இன்னும் எத்தனைபேர் இப்படி யோசித்திருப்பார்கள். பள்ளிவாசல் அல்லாத இடமென்றால் எழும்பிக் கத்தியிருப்பார்கள்.

"சும்மாவல்ல.விபச்சாரத்தில் பலவிதங்கள் உண்டு. உடலால் செய்யும் விபச்சாரம், மனதால் செய்யும் விபச்சாரம், நாவால் செய்யும் விபச்சாரம், கண்களால் செய்யும் விபச்சாரம், காதினால் செய்யும் விபச்சாரம். இப்படிப் பல."

விபச்சாரம் பாவமான காரியமென்று வயதுக்கு வந்த எவருக்காவது தெரியாமலிருக்குமா? ம்... எப்படியும் விபச்சாரம் விபச்சாரமென்று நூறு தடவை களுக்கு மேல் மௌலவி சொல்லியிருப்பார்.

மேலே வேகமாகச் சுழலும் விசிறிகளைப் பார்த்தேன். காதுகளைக் கிழிக்கும் ஒலிச் சாதனங்களைப் பார்த்தேன். பளபளப்பான மார்பல் சுவர்களைப் பார்த்தேன். தொங்கும் அலங்கார மின்குமிழ் தொகுதி களைப் பார்த்தேன்.என் கோபமூட்டத்தைத் திசை திருப்பிக்கொள்ள எவ்வளவுதான் முயற்சித்தாலும், விபச்சாரம் எந்த நேரத்தில் வந்து காதுகளுக்குள் புகுந்துவிடுமோ என்ற அச்சம் மனசின் ஒரு மூலையில் குந்திக்கொண்டிருந்தது.

"யா அல்லாஹ் இந்த விபசாரத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக.விபச்சாரத்திலிருந்து எங்கள் பிள்ளை குட்டிகளை சந்ததியைக் காப்பாற்றுவா யாக. நேரான வழியைப் காட்டு யாஅல்லாஹ்"

"ஆமீன்ன ஆமீன்" என்று தூக்கலாகவே எல்லோரும் சொன்னது , இந்த விபச்சார பயான் முற்றுப்பெறவேண்டும் என்பதற்காகக்கூட இருக்கலாம்.

இன்னும் ஒரு ஐந்து நிமிடத்தில் தொழுகை ஆரம்பித்துவிடும்.

***

பள்ளிவாசலிலிருந்து சனம் வெளியேறிக் கொண்டிருந்தது. வீதியோரப் பழக்கடைகள் ஏராளம். இந்தக் காட்சியை வெள்ளிக் கிழமைகளில் மாத்தரமே காணலாம். அத்தனை பேரும் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த சிங்களச்சகோதர சகோதரிகள்தான்.

"அப்பா தயிறு "- பேரன் விடுவானா?

" அப்பா வாழப்பழம் " அதையும் மறப்பானா?

அவனது தேவை நிறைவேறியாயிற்று.

வீட்டை நெருங்கும்போது, ஏதோ தான்தான் எல்லாம் வாங்கி வருவதாக உம்மாவுக்குக் காட்ட ,என் கையிலிருந்த வாழைப்பழப் பொதியை தன் கைக்கு எடுத்துக்கொண்டான்.

"ஆ...அப்ப சாரத்த மாத்திக்கொண்டு வாரொண்டும். புள்ள இரீங்கொ. சுடச்சுடத் தின்னியத்துக்கு."

சின்னவன் சாப்பாட்டு மேசையில் அமர்ந்து கொண்டான்.

அவள் சோறுகறிகளைக் கொண்டுவந்து மேசையில் பரத்தினாள்.

"உம்மா"

"எனத்தியன் புள்ள?"

"விபச்சாரம் விபச்சாரமென்டு பயானில ஒரேயொரேசென்ன. அதெனத்தியனும்மா?"

அவள் கையில் அகப்பையைப் பிடித்தபடி என்ன செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடினாள்.

"பேச்ச வெச்சிட்டு சோத்தத் தின்னு புள்ள. பொப்படம் பொரிச்சீக்கி. கோழி ஆக்கீக்கி. சீனி போட்ட மாங்கக் கறி ஈக்கி. தைரு வாழப்பழமெல்லம் கொணந்தீக்கி. இன்டக்கி நல்ல ரசமான சாப்பாடு" - என்றவாறு மகனின் பீங்கானில் சோற்றை அள்ளியள்ளி வைத்தாள்.

சின்னவன் இன்னும் ஒருபடி மேலாக யோசித்தான்.

அவனது கேள்விக்கு சோறுதான் பதிலா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டின் நினைவில் தமிழருவி த. சண்முகசுந்தரம்



குரு அரவிந்தன்

மகாஜனக்கல்லூரியில் புதிய மாணவர்களில் ஒருவனாக நானும் அன்று இருந்தேன். இதுவரை காலமும் காங்கேசந்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றதால், புதிய பாடசாலையான மகாஜனக் கல்லூரி எனக்குள் வியப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்த வீதிவழியாகக் காங்கேசந்துறையில் இருந்து எனது தாயாரின் ஊரான சண்டிலிப்பாய்க்குத் துவிச்சக்கர வண்டியில் போகும் போது மகாஜனாவின் கட்டிட அமைப்பே என்னை முதலில் பிரமிக்க வைத்திருந்தது. இன்று அந்தப் பாடசாலையின் உயர்வகுப்பு மாணவ னாக உள்ளே நுழைந்தபோது அதே பிரமிப்பில் மூழ்கிப் போயிருந்தேன். எனது அத்தான் அக்காவின் கணவர் பொ.கனகசபாபதி அவர்கள் மகாஜனாவில் அப்போது ஆசிரியராக இருந்ததால், எனது அக்காவின் விருப்பப் படி நானும் மகாஜனாவில் மாணவனாக இணைந்து கொண்டேன்.

வகுப்பறையில் இன்னுமொரு ஆச்சரியம் எனக்குக் காத்திருந்தது. சண்முகசுந்தரம் மாஸ்டர் தான் எங்களுக்கு அரசறிவியல் பாடம் கற்பிக்க வந்தார். ஒவ்வொருவராக அறிமுகம் செய்யச் சொன்னார். ஒவ்வொருவரும் அவரது மேசைக்கு அருகே சென்று சகமாணவர்களைப் பார்த்து எங்களை அறிமுகம் செய்ய வேண்டும். முக்கியமாக எங்கள் பெயர், தந்தை யின் பெயர், எந்த ஊரில் இருந்து வந்திருக்கிறோம் என்பதைக் குறிப்பிட வேண்டும். நான் எனது பெயரையும் தந்தையின் பெயரையும், ஊரையும் சொல்லிவிட்டு நகர்ந்தேன்.

"நின்று கொள்" என்றார். என்னை நிமிர்ந்து பார்த்தார். "குருநாதபிள்ளை மாஸ்டரின் மகனா?" என்று கேட்டார். "ஓம்" என்று பதில் சொன்னேன்.

"நான் நடேஸ்வராக்கல்லூரியில் அவரிட்டைப் படிச்சு நல்ல பெயர் எடுத்து இந்த நிலைக்கு வந்திருக் கிறேன். அதேபோல என்னட்டை படிக்கிற நீயும் நல்ல பெயர் வாங்கி அவரது பெயரைக் காப்பாற்ற வேண்டும், தெரியுதா?" என்றார்.

"தெரியுதா?" என்பதில் இருந்தே அவர் என்னிடம் எதை எதிர்பார்க்கிறார் என்பதை நான் புரிந்து கொண்டதால், "ஓம்" என்று தலையசைத்துவிட்டு எனது இருக்கையில் சென்று உட்கார்ந்தேன். அவருடனான முதல் அறிமுகம் இதுதான். ஆனால் இவரை அடிக்கடி எங்கோ கண்ட ஞாபகம் சட்டென்று வந்தது.

*1925* ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் *30* ஆம் திகதி பிறந்த இவரது தந்தையின் பெயர் தம்பு, தாயாரின் பெயர் அன்னப்பிள்ளை ஆகும். அந்தக் காலத்தில் ஆசிரியர் களைச் சட்டம்பியார் என்றுதான் எல்லோரும் அழைத் தால், எனது தந்தையையும் சட்டம்பியார் என்றுதான் ஊரில் அழைத்தார்கள். இவரது தகப்பனாரையும் தம்பு சட்டம்பியார் என்று ஊரார் அழைத்தனர். அதன்பின் ஆங்கிலச் சொல் பிரயோகத்தால், ஆசிரியர்களை "மாஸ்டர்" என்று அழைக்கத் தொடங்கியிருந்தனர். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வீதிக்கு அருகே இவரது வீடு இருந்தது. சண்முகசுந்தரம் மாஸ்டர் நடேஸ்வராக் கல்லூரியில் எனது தந்யைாரிடம் கல்வி கற்றார் என்பதை அவர் சொல்லித்தான் நான் தெரிந்து கொண்டேன்.

இதைவிட சண்முகசுந்தர மாஸ்டர் எனக்கு உறவினருமாவார். இவரது ஒன்றுவிட்ட சகோதரி சிவஞானம் அக்கா எங்கள் குருவீதியில் இரண்டு வீடு தள்ளித்தான் தான் குடியிருந்தார். அவரைப் பார்ப்பதற் காக அடிக்கடி இவர் அங்கே வருவது நினைவில் வந்தது. நாங்கள் தொடர்வண்டிப்பாதைக்கு அருகே இருந்த குரு விளையாட்டுக்கழக மைதானத்தில் விளையாடிக் கொண்டிருப்போம். சைக்கிளில் கடந்து போகும் போது வீதியில் பார்வை இருந்தாலும் கடைக்கண்ணால் என்ன நடக்கிறது என்பதைப் படம் பிடித்து விடுவார். காரணம் எங்களோடு விளையாடிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் அவரது மகன் அருள்முருகன் என்பதும் எங்களுக்குத் தெரியும். குருநாதசுவாமி கோயில் திருவிழாவிற்கு அவர் தவறாது வருவது மட்டுமல்லாமல், வரமுடியாத காலத்தில் தவறாது மகன் அருள் முருகனை அனுப்பிவைப்பார்.

மகாஜனா உயர் வகுப்புகளுக்கான தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மன்றத்தின் செயலாளராக என்னை நியமித்த போது, அதிபர் தெ.து. ஜயரத்தினத்தின் அறைக்கு அழைத்துச் சென்று என்னை அறிமுகமும் செய்து வைத்தார். "மகாஜனன்" மலரின் பதிப்பாசிரியாகவும் அவர் இருந்தார். அவர் தந்த பயிற்சியால் புலம்பெயர்ந்த மண்ணில் கனடா பழைய மாணவர் சங்கத்தின் "மகாஜனன்" இதழ்களுக்கும் மலராசிரியராக என்னால் பணியாற்ற முடிந்தது.

இவது எழுத்துக்கள் சிறுகதை, நாடகம், கட்டுரை என்று பல வகையிலும் தமிழ் இலக்கியத்திற்கு அணிசேர்த்தன. முக்கியமாக உள்ளூரில் உள்ள வர லாற்றுப் புகழ் பெற்ற கோயில்களை ஆவணப்படுத்துவ தில் கவனம் செலுத்தினார். இறங்கணியவளை குரு நாதரை வணங்கி "குருநாதர் மான்மியம்" எழுதினார். குருநாதர்பற்றி ஒல்லாந்தர் காலத்தில் வரதபண்டிதரும் கிள்ளைவிடுதூது எழுதியிருந்தார். "மாவை முருகன் காவடிப்பாட்டு", "மாருதப்புரவீகவல்லி கப்பற்பாட்டு", "வாழ்வு பெற்ற வல்லி" போன்ற நூல்களின் சொந்தக் காரர் எங்கள் சண்முகசுந்தர மாஸ்டர்தான். இந்த நூல்களில் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டதற்குக் காரணம் இந்த நூல்களுக்கான மேலதிக தகவல்களைச் சேகரிப் பதற்கு உள்ளூர் கோயில்கள் பற்றி விபரங்களைப் பெற்றுத் தரும்படி அப்போது அவரது மாணவனாக இருந்த என்னிடம் அன்புக் கட்டளையிட்டதால், நான் அந்தப் பணியை மேற்கொண்டேன். எனக்கும் எங்கள் அயற்கோயில்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் இருந்ததால் விருப்பத்தோடு செயற்பட்டேன்.

அவர் குறிப்பிட்டபடி எனது ஒன்றுவிட்ட சகோதரி குறமகள் வள்ளிநாயகி இராமலிங்கம் அவர் களிடம் இருந்து பல தகவல்களைப் பெற்றுக் கொண்டேன். குறிப்பாக எங்கள் வீட்டிற்கு அருகே இருக்கும் குருநாதசுவாமி, நாச்சிமார், கூத்தியவத்தைப் பிள்ளையார் போன்ற புராதன கோயில்கள் பற்றிய தகவல்களை குறமகளின் பாட்டியார் சொன்னதாக அவரது தாயாரிடம் இருந்து பெற்றுக் கொண்டோம். சண்முகசுந்தர மாஸ்டர் குதிரைமுகம் பற்றிக் குறிப்பிட்ட போது இதைப் பற்றி மேலும் ஆய்வுகள் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அப்பொழுதுதான் மாருதப்புரவீக வல்லியின் குதிரைமுக நோய் பற்றி நான் ஒரு ஆய்வு செய்தேன். உண்மையிலே அது "குதிரை முகமாக இருந்திருக்குமா?" என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. அதனால்தான் பலாலியில் வசித்த பிரபல மூலிகை மருத்துவரான பஞ்சாட்சர ஐயரிடம் இருந்த மூலிகை மருத்துவம் என்ற மிகப்பழைய நூலில் இருந்து குதிரைமுக நோய் பற்றி அறிந்து கொண்டேன். சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியைப் பீடித்தது குதிரை முகம் அல்ல "குதிரைமுக நோய்" என்பதை அதன் மூலம் அப்போது உறுதி செய்தேன். அக்காலத்தில் ஓவியர்களும், சிற்பிகளும் குதிரைமுக நோயை அடை யாளப் படுத்துவதற்காக குதிரை முகத்தையே வரைந் திருந்தார்கள். அக்காலத்தில் வேறுவிதமாக இவற்றை அடையாளப்படுத்த வசதிகள் இருக்கவில்லை.

இதே போன்ற குதிரை முகத்தோடு கூடிய சிலையை கிரேக்க நாட்டில் மைக்கோனோஸ் நகரத்தில் பார்த்திருந்தேன். அவர்கள் அதைத் தங்களின் பெண் தெய்வம் என்று சொன்னார்கள். மேலை நாடுகளில் ஐபோடேன்ஸ் அல்லது ஹிப்போடேன்ஸ் ((Ipotanes or hippotaynes) என்று அழைக்கப்படுவது புராணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் உயிரினங்களாகும். அவை பொதுவாக சென்டார்களிலிருந்து (Mythological creature) மிகவும் வேறுபட்ட அரை-மனித அரை-குதிரை உயிரினங்களாக சித்தரிக்கப்படுகின்றன. அதனால்தான் எனது தேடுதலில் கிடைத்த இந்த வரலாற்று உண்மையை புதினமாக இப்போது ஞாயிறு வீரகேசரி யில் எழுதுகின்றேன்.

மகாஜனாவில் கல்வி கற்பித்த எனது சில ஆசிரியர்கள் அதிபர்களானதால், திரு. க. கிருஸ்ண பிள்ளை, திரு. பொன். சோமசுந்தரம், திரு தெ. து. ஜயரத்தினம், திரு. பொ. கனகசபாபதி, திரு. மா. மகாதேவன், தமிழருவி திரு. த. சண்முகசுந்தரம் ஆகிய ஆறு அதிபர்களிடம் கல்விகற்றதாக நான் சில சமயங் களில் பெருமையாகச் சொல்லிக் கொள்வதுண்டு. எனது மதிப்புக்குரிய ஆசான் தமிழருவி த. சண்முகசுந்தரம் அவர்கள் *1986* ஆம் ஆண்டு எங்களை விட்டுப் பிரிந்தா லும் அவரிடம் கல்விகற்ற பலர் இன்று தமிழ் இலக்கிய வளச்சிக்காக உலகெங்கும் பரந்து அரும்பெரும் சேவை யாற்றிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்காக அவர் நூல் வடிவில் விட்டுச் சென்ற ஆவணங்கள் என்றும் இவ்வுலகில் நிலைத்து நிற்கும்.

## தேய்பிறை கண்டும் தோற்றிட மாட்டேன்

ஓய்ந்துபோகும் வாழ்வது அன்றோ
ஓய்வெடுக்க நேரங்கள் என்றோ
ஓடியது போதுமென்பது மனமதுவன்றோ
ஓயாமல் ஓடிமுடி என்பது பணமதுவன்றோ

வாடியே உடல் வதைபடும் போதும்
வாயடக்கமுடியாப் பசி வந்து மோதும்
வாங்கிய பட்டங்கள் விட்டத்தில் தொங்கும்
வாடகை வீடாய் உடலது மங்கும்

கூடியே வரும் கூட்டங்கள் போதும்
கூடவே வரும் குரலும் மனதைக் கோதும்
கூவிடும் குயிலிசை ஓலமாய் செவியினில் மோதும்
கூரியவாளில் நிற்கிறேன் அதுவரை போதும்

தேரோடும் வீதியில் தேம்பிடமாட்டேன்
தேய்ந்திடும் தேகத்தால் தேங்கிடமாட்டேன்
தேய்பிறை கண்டும் தோற்றிட மாட்டேன்
தேர்விதுவென்று எழுதியே முடிப்பேன்

காவியை அணிந்து கரைந்திடமாட்டேன்
காலையில் என்றும் உறங்கிடமாட்டேன்
கார்மேகம் கண்டு விலகிடமாட்டேன்
காலோயும் வரை நான் ஓய்ந்திடமாட்டேன்

கந்தர்மடம் அ.அஜந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொசுறுக்கதைகள் மூன்று

கொற்றை பி.கிருஷ்ணானந்தன்



1.

அன்று சலூனுக்குப் போய் வந்து தலை தோய்வதற்காகக் குளியலறைக்குள் நுழைந்தேன். கதவைப்பூட்டியதன் பின்னர் தான் தெரிந்தது ஷம்போப் போத்தல் காலியாக இருப்பது.

சமையலறைக்குள் வேலையில் மும்முரமாக இருந்த எனது இல்லக் கிழத்தியிடம் உரக்கக் குரல் கொடுத்தேன்.

"இஞ்சாரப்பா புதுச் ஷம்போப் போத்தல் மேசையில் இருக்கு. ஒருக்கால் எடுத்துத்தாங்கோ..."

பதில் உடனே வந்தது.

"ஏன் போகேக்கை எடுத்துக்கொண்டு போறது தானே. நான் கையலுவலாக இருக்கிறன். நீங்களே வந்து எடுத்துக் கொண்டு போங்கோ,"

பிள்ளைகளும் வீட்டில் இருப்பதால் ஒரு துவாயைக் கட்டிக்கொண்டு வெளியே வந்து ஷம்போவை எடுத்துக் கொண்டு போனேன்.

ஒரு பத்து வருஷங்களுக்கு முன்னர் திருமணம் செய்த புதிதில் அயலில் எங்கள் வீட்டில் (அம்மா வீடு, ஆழக்கிணறு) இருந்த கிணற்றுக்கு சனி ஞாயிறு தினங்களில் நான் தலை தோயப் புறப்பட்டால் என் ஆசை மனைவி ஏற்கனவே தான் குளித்திருந்தா லும் தானும் கூட வர வேண்டுமென்று அடம்பிடித்து கூட வந்து நான் மறுக்க மறுக்க என் சகோதரிகள் பார்க்க நான் கூச்சப்பட என் தலையில் சீயக்காய் வைத்து கசக்கி நீர் வார்த்து முதுகு தேய்த்து சவர்க்காரம் போட்ட நிகழ்வுகள் என் மனத்திரையில் படமாக ஓடின.

2.

**அந்த டொக்டரும் இந்த டொக்டரும்**

தங்கவேலருக்குத் திடீரென நெஞ்சுவலி வர பருத்தித் துறையிலுள்ள வடிவேல் டொக்டரின் கிளினிக்கில் கொண்டு போய்க் காட்டினார்கள்.

நோயாளியைப் பரிசோதித்த டொக்டர் பதற்றமடைந்து "Very Serious" உடனடியாக மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கோ ஒரு நிமிசம் பிந்தினாலும் ஆபத்து" என்று கூறி அனுப்பி விட்டார்.

நோயாளியை ஏற்றிக் கொண்டு இரண்டு கிலோமீற்றர் தூரத்திலுள்ள மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் முருகானந்தன் டொக்டரின் கிளினிக் திறந்திருப்பதைக் கண்டு ஒருக்கால் அவரிடம் காட்டிப் பார்ப்பம் என்ற சிந்தனையில் அங்கே கொண்டு போனார்கள்(வைத்தியசாலையில் தங்கி நிற்க வேண்டுமென்றால் ஏற்படும் அசௌசகரியங்கள் தான் மனதில் முதலில் தோன்றும்)

டொக்டர் யாரோ ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. இவர்களைப் பார்த்ததும் உள்ளே வரச் சொன்னார். பரிசோதித்துப் பார்த்தார். பின்னர் சாசுவதமாக முன்னர் கதைத்துக் கொண்டிருந்த நண்பரிடம் கதையின் தொடர்ச்சியாக "அப்புறம் என்ன நடந்தது" என்று கேட்டார்.

அதன் பின் நோயாளியைக் கொண்டு வந்தவர்களைப் பார்த்து, "இவருக்குரிய வைத்திய வசதிகள் என்னிடம் இப்போது இல்லை. நீங்கள் மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதுததான் நல்லது. நான் துண்டு எழுதித் தாறன்" என்று கூறி அனுப்பி வைத்தார்.

அவர்கள் போன பின் நண்பரிடம் நோயாளிக்குக் Heart attack என்றார்.

நண்பர் கேட்டார் "நீங்கள் ஒரு சாதாரண நோயாளியிடம் நடந்து கொண்டது போல் தெரிகிறதே"

முருகானந்தன் டொக்டர் சொன்னார்.

"நோயாளிக்கு முன்னால் நானும் பதற்றம் அடைந்தது போல் காட்டிக் கொண்டால் நிலைமை மேலும் மோசமாகி விடும். அதனால் தான் சாதாரணமாகக் காட்டி நோயாளியின் நிலைமையை நான் அவதானித்ததை குறிப்பெழுதிக் கொடுத்து விட்டேன். கொஸ்பிற்றல் அரைக்கிலோமீற்றல் தூரத்திலை தான் இருக்கு"

3.

**வைத்திய தர்மம் தலை காக்கும்**

நெல்லியடிக்கு அண்மித்த ஒரு கிராமத்தில் ராசா டொக்டர் ஒரு கிளினிக் நடாத்திக் கொண்டிருந்தார்.

அரச பணியில் ஓய்வு பெற்றுவிட்டு தனிப்பட்டமுறையில் வைத்தியம் பார்க்கும் அவரை உலக மகா கஞ்சன் என்றும் சனம் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அன்று தான் உறுதிப் படுத்திக் கொண்டேன்.

உதவியாளர் எவரையும் வைத்துக்கொள்ளாமல் தானே எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார். ஆஸ்த்துமா நோயினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு பெண்மணியைப் பரிசோதித்து விட்டு தானே மருந்துகளைக் கொடுத்தார். ஆயிரத்து முன்னூறு என்றார். அந்தப் பெண்மணி பயந்து பயந்து தன்னிடம் ஆயிரத்து இருநூறு மட்டுந்தான் இருக்கிறது என்று சொல்லி பணத்தை எடுத்து மேசையில் வைத்தார்.

டொக்டர் காசை எண்ணிப் பார்த்து விட்டு கொடுக்கப்பட்ட மருந்துச் சரைகளில் குறைந்த விலையில் உள்ள ஒன்றை எடுத்து விட்டு பிறகு காசைக் கொண்டு வந்து தந்திட்டு மருந்தை வாங்கிக் கொண்டு போங்கோ என்று சொல்லி அனுப்பி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லது நாளை பிறக்கட்டும்

எழு எழு எழு போதை தெளியட்டும்
எழு போதை விட்டு விட்டு எழு
வெளியே வா நடநட ..பார்
விழுந்து விடாதே !
விழு,விழுந்தாலும் பரவாயில்லை,
மறுபடி எழு...
மறுக விழாதே ! நட நட..
போதைவஸ்துகளை தொடாதே !
முன்னே நட
போதை ஏற்றும் நண்பனைத் தேடாதே..!
தென்பட்டால் குனிந்து நட நட..
பாடசாலையின் பக்கம் பார்க்காதே!
படிப்பை நிறுத்தியது பற்றி யோசி..
பாடசாலைக்குள் போதை விற்றது பற்றி,
ஆசிரியரிடம் அகப்பட்டது பற்றி,
சக மாணவர்கள் முன் தலைகுனிந்தது பற்றி,
ஆசிரியரை முறைத்தது பற்றி,
அவரை ஏசியது பற்றி,
தலைமை ஆசிரியரிடம் அழைத்துச்சென்றது பற்றி,
பொலிசாரிடம் கையளிக்கப்பட்டது பற்றி,
அப்பா அழுத்து பற்றி, அம்மா மயங்கியது பற்றி,
தங்கையை அடித்தது பற்றி, - அக்காளின்
துவிச்சக்கரவண்டியை உடைத்தது பற்றி,
அண்ணனிடத்தில் அடிவாங்கியது பற்றி,
அயலவர் பற்றி, உறவினர் பற்றி,
வாள்களை எடுத்துக்கொண்டு - தெருவில்
திரிந்தது பற்றி,
வீடுகளுக்குள் புகுந்தது பற்றி,
சேர்ந்து திரிந்தவர்வல்கள் பற்றி,
தெரிந்தவர்கள் பார்த்தது பற்றி,
பொலிசார் கைதுசெய்தது பற்றி,
நீதிமன்றம் சென்றது பற்றி,
சட்டம் பற்றி, சிறை சென்றது பற்றி,
சீர்திருத்தத்துக்கென சிலகாலம் -உள்ளே
இருந்தது பற்றி, - மாமாவின்
உறுதிப்பிணையில் வீடு வந்தது பற்றி,
ஏதும் - சிந்தித்துக்கொள்ளாதே.. நட நட..
பாதையைப்பார்த்து வா..
"கொஞ்சம் யோசி.."
"கொளுத்துகிறது வெய்யில்!"
"கொஞ்சம் உசாராய் நட" - தெருவின்
மறு கரைக்கு வா..
மரத்தின் அயலில் நில் ! முன்னே நட..
கையைக்காட்டு..கவனமாய் நட..
கதவைத்திற, முற்றத்திலேயே நில்!
உடைகளை வாங்கு, போய்க்குளி..
பின்கதவு வழியாக உள்ளே வராதே!
முன் கதவைத்தட்டு, போய்ச்சாப்பிடு..
நித்திரைக்குப்போ.." விழித்திருக்காதே படு"
விடிந்துவிட்டது எழு எழு - எழுந்து வா வெளியே..
யாரோடும் பேசாதே!" வந்து சாப்பிடு"
வெளியே போகாதே! இங்கேயே இரு,
ஒரு யன்னலைத் திறந்துவை,- " காற்று வரட்டும்.."
வீட்டுக்குள்ளேயே நட, திரி..
நித்திரை வந்தால்ப் போய்ப்படு..
வானொலியில் பாடல் கேள்..- இசையை ரசிக்கப்பழகு..
"குத்துப்பாடலுக்கு " காலாட்டம் போடாதே!
மாற்று அல்லது நிறுத்திவை !
"கண் அயர்ந்தால் தூங்கு"..
இல்லையேல் மெல்லிய குரலில் பாடு ..
கண் அயரத்தூங்கு, விடிந்துவிட்டது..!
எழு எழு..- போய்க்குளி,முகச்சவரம் செய்..
வெளியே வா பள்ளிக்கூடம்வரை போ திரும்பு வா..
வீட்டின் படலையைத்திற,- உள்ளே வா..
இரு, சாப்பிடு,- போய்ப் படு
விடிந்தது எழு - மீண்டும்
புறப்படு..
பாடசாலையைப் - பார்த்துக்கொண்டு வா..
உள்ளே எவரெவர் நிற்கிறார்கள்- என்று
பார்க்காதே..!
திரும்பி வா, வாசல்ப்பக்கம் பார், வா..
வீட்டுப்பக்கம் போகநட,- தெருவில் யாரையும்
பார்த்து புன்னகைக்காதே, யாரையும் தேடாதே!
உசாராய் நட நட.. - வீட்டுக்குள் வா..
அரை வயிறு சாப்பிடு,- தண்ணீரைக்குடி,
நித்திரை வந்தால் கொஞ்சநேரம் கொள்,
எழும்பு, - நூலகத்திற்குச்செல்..- அதன்
வாசல்ப்படியேறிவிட்டு - திரும்பி வா..
அதன் யன்னல்ப்பக்கம் கூடப்பார்க்காதே!
வீட்டுக்குள் வா,- வரமுதல் கால்களைக்கழுவு,
மலசல கூடத்திற்குப்போ - கிணற்றடியில் முகத்தைக்கழுவு,
வா, இரு,சாப்பிடு..
சாப்பிட்ட தட்டைக்கழுவு, அடுக்கிவை..
அக்காவின் துவிச்சக்கரவண்டியைத் துடைத்துவை,
முகத்தைச் சாந்தப்படுத்து, "அம்மாவோடு பேசு.."
அவளின் ஒப்பாரிகள் முடிந்து - இன்றுதான்
இரண்டு சொல்லைக் கண்ணீரோடு சேர்ந்து
உச்சரிக்கிறாள்.,"
அழாதே, போதையை இனிமேலும் நாடாதே..!
"சத்தியம் செய் "- தங்கையோடு பேசு,
அண்ணனோடு அடக்கமாய் இரு,
"கொப்பர் வருகிறார்" - சுவர்ப்பக்கமாய்ப்போய் நில்,
"பார்க்கிறார் பேசு" , " பேசாதே! ,குனிந்துகொண்டு கேள்"
"அப்பா நான் பாடசாலையில் சேர்ந்து
படிக்கப் போகிறேன்.."
"நல்லது நாளை பிறக்கட்டும்"

முல்லைக்கமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ .புஷ்பா




# “முடிவைத் தொடுவாய் முயன்று” ஒரு விமர்சனப் பார்வை

இந்நூலின் ஆசிரியர் கோகிலா மகேந்திரன் அவர்கள். இவர் விஞ்ஞான ஆசிரியர், அதிபர், சீர்மியர், சீர்மிய ஆலோசகர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், உளவியலாளர், எனப் பல்திறன் வகிபாகங்களை வகித்து 108 சிறுகதைகளையும் 3 நாவல்களையும் எழுதி விருதுகள் பலவற்றையும் வென்றவர்.

இந்நூல் சோலைக்குயில் அவைக் காற்றுக்களத்தில் வாரந் தோறும் இடம்பெற்ற வகுப்புக்களில் கற்பிக்கப்பட்ட, பேசப்பட்ட விடயங்கள் ஜீவநதி சஞ்சிகையில் மாதந்தோறும் தொடர் கட்டுரைகளாக வெளிவந்து 12.10.25இல் ஜீவநதி, சோலைக்குயில் அவைக்காற்றுக்கள வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் கொண்டுள்ள விடயம் சமூக உளவியலும் கல்வியியலும் சார்ந்தது. இவ்விடயப்பரப்புக்குள் “தீர்மானம் எடுத்தல்” என்பதே நூலின் கருப்பொருளாக அமைகிறதெனலாம்.

நூலாசிரியர் சமூக நோக்குடையவர். சமூக அக்கறை உடையவர். சமூகம் மீது கூர்மையான பார்வையைச் செலுத்துபவர். “எமது சமூகத்தின் செல்நெறி எங்கே போகிறது?”என அடிக்கடி கேள்வி எழுப்புபவர். பிரச்சினைகளின் வேர்களைக் கண்டறிந்து தீர்வுகளையும் முன்வைப்பவர். இம்முயற்சியில் விளைவாகவே இவர்சிறுகதைகளை மட்டுமன்றிக் கட்டுரைகளையும் எழுதுகிறார்.

இந்நூல் “எண்ணிச்செயல் முதல் உள விளையாட்டுக்கள்” வரை பதினேழு கட்டுரைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கட்டுரையும் காத்திரமான சமூக உளவியல் கருத்துகளை ஆழமாகக் கொண்டுள்ளது. தெளிவான சிந்தனையுடன் சிந்தித்துச் சரியான முடிவை எடுக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கும் “எண்ணிச் செயல்” என்ற முதலாவது கட்டுரை இந்நூலின் கருப்பொருளின் தோற்றுவாயாக அமைகிறது. வினைத்திறனும் விளைதிறனும் கொண்ட தீர்மானங்களை எடுத்தல், வெற்றிகரமான வாழ்க்கையின் முக்கிய கூறு எனக்கூறும் ஆசிரியர் அதற்கான உதாரணங்களையும் எளிமையாக முன்வைக்கிறார்.

மகாபாரதத்தில் கர்ணன் தான் குந்தியின் புதல்வன் என அறிந்த பின்பும் பாண்டவர் பக்கம் சேர மறுத்து “செருமுனை சென்று செஞ்சொற்றுக்கடன் கழிப்பதுவே இனி எனக்குப் புகழும், கருமமும், தருமமுமாகும்” என உறுதியான முடிவெடுத்தான். புகழும் பெற்றான்.

மேலும் மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவத்தைச் சந்தித்த பாஞ்சாலியின் முடிவெடுத்தல், பென்சிலினைக் கண்டுபிடித்த அலெக் சாண்டர் பிளெம்மிங்கின் முடிவெடுத்தல் ஆகியவைபற்றிக் கூறியிருப்ப தோடு அவசரப்பட்டு எடுக்கப்படும் முடிவுகள் எவ்வளவு அழிவைத்தரும் என்பதற்கு டைட்டானிக் கப்பலின் சோகத்தையும் அதற்கான உளவியல் காரணத்தையும் நுணுக்கமாக எடுத்துக்காட்டுகிறார்.

நூலாசிரியர் விழுமியங்களை இறுகப் பற்றுபவர். விழுமியம் அவரது மூச்சு எனக்கூறலாம். எனவே அவர் முடிவெடுத்தலிலும் விழுமியங் களைத் தொடர்புபடுத்துகிறார். ஒருவர் எடுக்கும் முடிவுகள் அவரது விழுமியங்களுடன் பரிவு கொள்ளல் அவசியம் எனக் கூறுவதோடு மனித குலத்தின் தொடர் இருப்புக்கும் அவை அவசியமாகின்றன எனக் குறிப்பிடுகிறார்.

விழுமியங்களில் அன்பு, நேர்மை, கருணை, அஹிம்சை எனக் குறிப்பிட்ட சிலவற்றைத்தான் நாம் அறிந்திருப்போம். ஆனால் ஆசிரியர் நம்பத்தகுந்தவராதல், புதிதாகச் செய்தல், வாண்மையுடன் இருத்தல், அழகுணர்வு, ஒத்துழைத்தல், வலுவூட்டல், சுதந்திரம், வளைந்து கொடுத்தல் என விழுமியங்கள் அறுபதுக்கும் மேற்பட்டன எனக் குறிப்பிடுகிறார். (சீர்மியத்தில் சிறப்பு முறைகள் என்ற அவரது நூலில் முழுமையாகப் பார்க்கலாம் )சில வேளைகளில் நாங்கள் எடுக்கப் போகும் முடிவு எங்களுடைய இரண்டு விழுமியங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கலாம் எனக்கூறி உதாரணங்களையும் தந்துள்ளார். ஒருவர் தன் அலுவலக வேலையை இன்றிரவு முடித்துக் கொடுக்கவேண்டிய நிலை. நம்பத் தகுந்தவராதல், பொறுப்பு ஆகிய இரண்டு விழுமியங்களை அது கொண்டுள்ளது. அதேநேரம் அன்று மாலை நண்பர் ஒருவர் உதவி கோரி அவரிடம் வருகிறார். அவசரமாக அவருடன் வைத்தியசாலைக்குச் செல்லவேண்டும். இங்கு நட்பு என்ற விழுமியம் முக்கியம் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டையும் செய்ய முற்பட்டால் பதற்றத்தால் காரியங்கள் பிழைக்க லாம். ஆரோக்கியமும் குன்றும். இரண்டில் ஒன்றைத்தான் அவரால் செய்யமுடியும். "அது எது?" என்பது எந்த விழுமியம் முக்கியம் என்பதைப் பொறுத்தது. இந்த இடத்தில், "முடியாது" என்று யாரோ ஒருவருக்குச் சொல்லவேண்டும். வெளிப்படையாகக் கூறவேண்டிய இக்கருத்தை எமது சிந்தனைக்கு உட்படுத்தியிருக்கிறார் ஆசிரியர் எனக்கொள்ளலாம்.

முடிவெடுத்தலில் ஒருவருடைய ஆளுமைக்கூறும் பல மாற்றங்களைச் செய்யும் என்ப தற்கு, ஷேட் தைத்து விற்கும் நிறுவனம் ஒன்றின் செயற்பாட்டை ரசனையுடன் உதாரணமாக எடுத்துக்காட்டி விளங்கவைத்துள் ளார். உணர்வு நுண்மதி, தீர்மானம் எடுத்தலில் பெரியளவில் செல் வாக்குச் செலுத்தும் காரணியாகும். உணர்வு நுண்மதிக்கு வரைவிலக் கணம் தரும் ஆசிரியர், உணர்வுகள் தன்னாட்சி உடையவை, தம்மைத் தாமே காதலிப்பவை, ஏறியும் இறங்கியும் அலைபோல் திரும்பி வருபவை என்பார். உதாரணமாகக் கோபம் கொண்ட ஒருவர் கத்துவ தும், விலகிச் செல்வதும், பின் திரும்பி வந்து கத்துவதுமாக இருக்கும் நடத்தைக்கோலத்தை எமக்கு எடுத்துக்காட்டுகிறார். மரண வீடு ஒன்றில் உண்மையான கவலை யுடன் அழும் உறவினர்கள் கத்தி அழுவதும், சற்று ஆறி இருப்பதும், மீளக் கத்தி அழுவதுமாக இருக்கும் நிலைமையும் காட்டப்படுகின்றது.

உணர்வுகள் பயம், வெறுப்பு, மகிழ்ச்சி என அறுபத் தேழுக்கும் மேற்பட்டவை.நாம் எமது உணர்வுகளை அடையாளம் காணுதலும், ஏற்றுக்கொள்ளலும் முக்கியம் என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. பதகளிப்பும் கோபமும் ஒருவருக்கு வேகமாகத் தொற்றக்கூடியவை. அடிக்கடி உச்சக்கோபம் வந்து அதனால் இதயத்தின் மின் இயக்கச் செயற்பாட்டில் மாற்றத்தை அனுப விப்பவர்களுக்கு ஒருநாள் அந்த கோபம் இறப்பையும் ஏற்படுத்தலாம்.

அதேபோல அடிக்கடி பதகளிப்புக்கு உள்ளாகிப் பல்வேறு மெய்ப்பாட்டு முறைப்பாடுகளை அனுபவிப்பவர்களுக்கு ஒருநாள் சுவாசிப்பதில் சிக்கலையோ அல்லது பக்கவாதத்தையோ ஏற்படுத்தலாம் எனக்கூறி எச்சரிக்கை செய்வதோடு நுண்மதி, உணர்வு நுண்மதி ஆகிய இரண்டுக்கும் இடையிலான சிக்கலான உறவும் ஒருவரின் வெற்றிகரமான வாழ்வுக்கு அவசியம் எனக்குறிப்பிடுகிறார்.

தீர்மானம் எடுத்தலில் உள்ளுணர்வு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை ஆதாரங்களுடன் விளக்கிக்கூறுகிறார். யூலியசீசர் செனட்டுக்குப் புறப்பட்ட வேளையில் "போகவேண்டாம்" என அவரது மனைவி கல்பேர்னியா தடுத்தமை தொடர்பான உதாரணங்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

மனிதர்களுக்குப் புலன்கள் ஐந்து என்பதே பொதுவாக அறியப்பட்ட விடயம். ஆனால் அகச்செவி, மூட்டுகள் இவற்றுடன் தொடர்புபடுத்தி ஆறாம் புலன், ஏழாம் புலன் என்பவற்றுக்கும் ஆசிரியர் ஆதாரம் தந்து விளக்குகிறார்.

பொதுவாகச் சில மனிதர்கள் தம்மை உயரந்தவராகவும், தகுதியானவராகவும், நேர்மையான வராகவும் காட்டிக்கொள்வதற்குப் பொய் பேசுகிறார்கள். ஆனால் அந்த எதிர்பார்ப்பு நடப்பதில்லை. பொய்யை மணந்து பிடிப்பது இலகு. அதற்குப் பொலிகிராப் யந்திரம் தேவையில்லை எனக்கூறி ஆசிரியர் பொய்யறி கருவியைப் புதுக் கோணத்தில் அறிமுகம் செய்கிறார். பொய் பேசும்போது உடல் தொழிலியல் கூறுகள் கிளறப்படுவதால் அவர் களின் இதயத் துடிப்பு வேகம், சுவாச வேகம் என்பன கூடுகின்றன. குருதய முக்கம் உயருகிறது. வியர்வைச் சுரப்பும் தோலின் கடத்தலும் மேலே செல்கின்றன. இவற்றின் அடிப்படையில்தான் பொய்யறிகருவி வேலை செய்கிறது எனவும் குறிப்பிடுகிறார்.

எனவே உண்மையைப் பேசித் தளர்வாக ஆரோக்கியமாக இருங்கள் என ஆசிரியர் கூறும் செய்தியினை நாம் விளங்கிக்கொள்ளலாம்.

தடக்குப் புள்ளி என்ற கட்டுரையில் பிள்ளை ஒன்று குறிப்பிட்ட சூழலில் மட்டும் கதைக்காது இருக்கிறது. இது தெரிவு செய்யப்பட்ட மௌனம் என விளக்கம் தரப்படுகிறது.

1980களில் உலகில் பேசப்பட்டவரான ஆபிரிக்க அமெரிக்கப் பெண் மணி மாயா ஏஞ்செலோ சிறுவயது முதல் பாரிய நெருக்கீடுகளைச் சந்தித்த தால், அவை இவரை ஆறு வருடங்கள் பேசாமல் வைத்திருந்தது. இவரே பின்னர் மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் கவிஞராகவும் விளங்கியவர். இவரது ஏழு சுய சரிதை நூல்கள் பெரு வரவேற்பைப் பெற்றவை. இவரது "அசாதாரண பெண்" என்ற கவிதை எமது நாட்டில் க.பொ.த உயர்தர ஆங்கில இலக்கியப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

"உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை

ஒப்பிக்கும் என்றன் உளம்" ஔவையாரின் பாடல்வரியுடன் பிரபஞ்ச ரகசியம் என்ற கட்டுரையை ரசனையுடன் ஆரம்பித்து "இன்று உலகில் மிகச் சாதரண விடயமாக இருப்பது மனச்சோர்வு"எனக்கூறி அது பற்றிய விளக்கமும் தருகிறார்.

மனச்சோர்வு பிள்ளைப்பருவத்திலும் வரலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா ?உங்கள் பிள்ளைக்கு மனச்சோர்வு இருக்கலாம் என்று சந்தேகப் பட்டால் அடுத்து வரும் வினாக்களைக் கவனமாகப் பாருங்கள் .இவற்றுள் ஆறு ஏழு வினாக்களுக்கு ப் பதில் ஆம் என்று அமையுமானால் நீங்கள் உங்கள் பிள்ளையின் உடல், உள நிலையைச் செவ்வை பார்ப்பதே சரியான தெரிவாக இருக்கும் .ஆனாலும் கடுமையாக அச்சப்படத் தேவையில்லை எனக்கூறுகிறார் .இந்த இடத்தில் வைத்தியரிடம் ""அழைத்துச் செல்லுங்கள் ""என்று மட்டும் கூறிக் கைவிடவில்லை. அழைத்துச்சென்று உடல் உள நிலையைச் செவ்வை பார்ப்பதே நல்லது என்று கூறும்போது ஆசிரியர் ஒரு சீர்மியராகவே தென்படுகிறார்.

உலகில் பிரபலமான மனிதர்கள் சிலர் சிறிது காலத்திற்குத் தன்னும் மனச்சோர்வுக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் ,விஞ்ஞானியான ஐசாக் நியூட்டன்,டச்சு ஓவியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்சென்ட் வான்கோ ஆகியோர் உதாரணமாக எடுத்துக் காட்டப் படுகின்றனர்.மனச்சோர்வு என்பது வாழ்வின் முடிவல்ல. ஆயினும் பெற்றோர் என்ன செய்யவேண்டும் என்பதில் "கவனம் செலுத்துவோம்" எனத் தன்மைப் பன்மையில் கூறியிருப்பது ஆசிரியரின் சமூக அக்கறையை எடுத்துக்காட்டுகிறது.

இந்நூலின் சிறப்புகளைத் தொகுத்து நோக்கும்போது உன்னதங் கள் பலவற்றைக் கண்டுகொள்ளலாம். நூலை முழுமையாக வாசித்து முடித்தபோது "எமது சமூகத்துக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம் இது. இதனைச் சமூகத்தில் அனைவரும் வாசித்து அறியவேண்டும்" என உணர்ந்தேன்.

சமூக நலன் கருதிய உளவியல் சிந்தனைகளே நூலின் மூலக்கூறு களாக அமைந்துள்ளன. யாருக்காக நூல் எழுதப்பட்டது என்று நோக்கி னால் வாசகர்களுக்கு என்று பொதுமைப்படுத்திவிட முடியாது .குறிப்பாகப் பெற்றோர், ஆசிரியர்கள், கல்வியியற் கல்லூரியிலும் பல்கலைக் கழகத்தி லும் பயிலும் மாணவர்கள் என்போரை மனதில் கொண்டு எழுதப்பட்ட தெனலாம். ஆயினும் பலதரப்பினரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் சமூக ரீதியான, வரலாற்று ரீதியான ஆதாரங்களைக் காட்டி வாசிப்பில் ஆர்வம் ஏற்படும் வகையில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது என்பது முக்கியமானது.

உயர் கல்வி நிறுவன மாணவர்கள் உசாத்துணை நூலாகப் பயன் படுத்துவதற்கு ஏற்ற நூலாகும்.இந்த நூலை வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே அறிந்து கொள்ளவும் ஏற்ற நூல் எனக் குறிப்பிடலாம்.

மொழிநடை என நோக்கினால் இலக்கண வழுக்கள் அற்ற நேர்த்தியான எளிமையான மொழிநடை அமைந்துள்ளது. ஆசிரியர் விஞ்ஞான ஆசிரியர். எப்படி இவரால் நேர்த்தியாக எழுத முடிகிறது என்ற வியப்பும் வருகிறது. வினாவும் எழுகிறது. இதற்கு அவரது பரம்பரை அலகு ,அவருக்குக் கற்பித்த ஆசிரியர்கள், நீண்டகால எழுத்துத்துறை அனுபவம் ,தேர்ச்சி, முதிர்ச்சி போன்ற அனைத்தும் காரணமாக அமையலாம் என நினைக்கத் தோன்றுகிறது.

எழுத்துப்பிழைகள் இரண்டு வந்துள்ளன. இறுதி நேரத்திலும் அச்சுத் தவறுகள் ஏற்படலாம் என்பதற்கு இது உதாரணமாகவும் அமையலாம். "சினமா" என்ற சொல் வழக்கிலிருந்து மாறுபட்டாலும் ஆங்கில உச்சரிப்பு ரீதியாக அதுவே சரியென்று கொள்ளலாம்.

சிலகட்டுரைகளில் வரும் ஆங்கில மொழிப்பிரயோகம் வரவேற்கப் படவேண்டிய மணிப்பிரவாள நடை என்று கொள்ளலாம்.மண்வாசனை கலந்த பேச்சுவழக்குச் சொற்களும் ஆங்காங்கே விடயத்திற்குப் பொருத்த மான வகையில் பாவிக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு அறிகைக்குழப்பம் கட்டுரையில் "நீங்கள் போனாப் போலை என்ன?நாங்கள் கொஞ்சம் இருந்திட்டு வாறம்" என்ற இடத்தைச் சுட்டலாம்.

பழந்தமிழ் அறிஞர்களதும் மேலைத்தேய அறிஞர்களதும் கருத்துக் களை நூலாசிரியர் பொருத்தமான இடங்களில் போடுகிறார். "தடிகளும் கற்களும் உங்கள் எலும்புகளை உடைக்கலாம். ஆனால் சொற்கள் உங்களைக் காயப்படுத்த முடியாது." -டேயில் கார்னெகி.இதுபோன்ற ஆழமான கருத்துக்கள் கொண்ட குறுஞ்செய்திகள் -சிந்தனைகள் -வருவது ஆசிரியர் வாசகருக்குக் கொடுக்கும் "டொனிக்" எனலாம் .சமூகத்தினை நன்றாக நாடிபிடித்துப் பார்த்துத்தான் இவ்வாறு கையாளுகிறார் என நினைக்கத் தோன்றுகிறது.

இந்த நூலின் பலம் ,பலவீனம் என்று நோக்கினால் தீர்மானம் எடுத்தல் என்ற தலைப்பிலான உளவியல் சார்ந்த நூல் எதுவும் தமிழில் இதுவரை வரவில்லை என்பது இந்நூலின் பலம் .பலவீனம் என்று பார்த்தால் சில இடங்களில் வரும் சுருக்கக் குறியீடுகளின்(A .D .H .D போல ) விரிவாக்கமோ அல்லது தமிழ்ப்பதமோ -அடை ப்புக்குள்ளாவது - குறிப்பிடப்படவில்லை .வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் .பொதுவாக



இன்று அச்சு ஊடகங்களில் எழுத்துப் பொறிமுறை பின்பற்றப் படுவது குறைந்து வருவதை அவதானிக்கலாம். இதற்கு இந்த நூலும் விதிவிலக்காகவில்லை .இதற்கு அறிகைக்குழப்பம், நட்ஷத் திரத் தீர்மானம் ஆகிய கட்டுரை களின் தலைப்புகளைச்சுட்டிக் காட் டலாம். மாணவரின் நன்மை கருதி அச்சகம் சார்ந்தோர் இதைக் கவனத் தில் கொள்வது அவசியமாகும்.

நூலாசிரியரின் சிறுகதை களிலும் நாவல்களிலும் நகைச் சுவை உணர்வினைப் பார்த்திருப் போம். இந்த நூலிலும் ஓரிரு இடங் களில் அதைக் கண்டு ரசிக்கலாம். தடக்குப் புள்ளி கட்டுரையில் கவனக் குறைவுடன் கூடிய அதீத செயற்பாடு உள்ள பிள்ளையின் குணங்குறி களைக் குறிப்பிட்டுக் கூறும் ஆசிரி யர், வரிசையில் நிற்கவேண்டிய சந்தர்ப்பங்களில் ஒருபோதும் தனக் குரிய முறை வரும்வரை காத்திருக் கும் பொறுமை அதற்கு இருப்ப தில்லை எனக் குறிப்பிடும்போது அடைப்புக்குறிக்குள் "இலங்கை மக்களில் எத்தனை பேருக்கு A.D.H.D இருக்கும் எனக் கற்பனை செய்து பாருங்கள்" என்று கூறுகிறார். இதனை வாசிக்கும்போது வைத்திய சாலைகள், கோயில்கள், பெற்றோல் நிரப்பு நிலையங்கள் என அனுபவக் காட்சிகள் மனத்திரையில் வந்து போகின்றன. யதார்த்தத்தை நகைச் சுவையாகப் படம்பிடித்துக் காட்டி யுள்ளமை சிறப்புக்குரியது. பயனுள்ள புதிய புதிய நூல்களை வாசிப்பதால் டிமென்சியா எனப்படும் மறதிநோய் வராது தடுக்கலாம் என்பதையும் கவனத்தில் கொண்டு இந்த நூலை வாங்கி வாசிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. ஜெயசீலன்

# விழுதும் விருதும்




கவிஞர் நாக.சிவசிதம்பரத்தினுடைய முதலாவது கவிதை நூல் "வேரினை நோக்கிய விழுதுகள்" "இணுவில் கலை இலக்கிய வட்டத்தின்" வெளியீடாக வெளிவந்துள்ளது.

கவிஞர் நாக. சிவசிதம்பரம் இணுவிலை பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் 80 களின் நடுப் பகுதியில் இருந்து கவிதைத் துறையிலே குறிப்பாக கவியரங்கங்களினூடாக அறிமுகமானவர். இன்றும் தொடர்ச்சியாக கவியரங்குகளிலே பங்குபற்றி வருவதுடன் கவிதை தொடர்பான செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறார்.

ஒரு ஆசிரியராக, பின்னர் அதிபராக இருந்து ஓய்வு பெற்று, இன்று தன்னுடைய ஓய்வு காலத்தில் ஓய்வொழிச்சலின்றி இலக்கிய முயற்சிகளில், செயற்பாடுகளில் தன் பங்குபற்றுதல் மூலம் பங்களித்தும் வருகின்றவர் இவர்.

கிட்டத்தட்ட 1986 ஆம் ஆண்டிலிருந்து கவியரங்குகளில் பங்குபற்றி வந்தாலும் அவர் கவியரங்குகளுக்காகவும் தனித்தனியாகவும் எழுதிய கவிதைகள் ஒரு நூலாக இதுவரை வெளிவந்திருக்கவில்லை. அந்த அடிப்படையில் சுமார் நாற்பது ஆண்டுகளின் பின் அவரது முதலாவது நூலாக இந்நூல் வெளிவருவது முக்கியமானதாகும்.

யுத்தம் ஆர்முடுகிக் கொண்டிருந்த 85ஆம் ஆண்டில் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்று திரும்பியிருந்த கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் மிகவும் பிரபலமாக பொது மேடைகளிலும், கவியரங்குகளிலும் ஒலித்துக் கொண்டிருந்தன. அக் காலத்தில் 1986 ஆம் ஆண்டு அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கம்பன் விழா நல்லூரிலே நடைபெற்றது. அவ் ஆண்டுக் கம்பன் விழாக் கவியரங்கில் புதுவை இரத்தினதுரை அவர்கள் மிகச் சிறப்பாக, போர்க்காலச் சூழலை மையமாகக் கொண்டு சண்டமாருதமாகக், கவிதை பாடினார். அன்று பாடப்பட்ட அக் கவியரங்கக் கவிதைகள், இன்று போல ஒலிப்பதிவு, ஒலி பரப்பு வசதிகள் இல்லாத போதும், சாதாரண தரத்திலே ஒலிப்பதிவு செய்யப்பட்டு பகிரப்பட்டும், மிகப்பெரிய வரவேற்பை பெற்றன என்பது ஒரு முக்கியமான வரலாறு. அவருடைய கவிதைகளை சிறுவர்களாக நாங்களும் அக்காலத்தில் கேட்டுக் கிறங்கிய ஞாபகங்கள் இன்றும் மீண்டும் எட்டிப் பார்க்கின்றன.

புதுவை அடுத்த வருடமும் அதாவது 1987ஆம் ஆண்டும் கம்பன் விழா கவியரங்கில் பங்கு பற்றுவார் என்ற செய்தி வெளிவந்த போது பெரும் எண்ணிக்கையான அவரின் இரசிகர்கள் உட்பட நாங்கள் எல்லோரும் ஆவலோடு அந்த கவியரங்கைப் பார்ப்பதற்காக சென்றிருந்தோம். ஆனால் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் விடுதலைப் போராட்டத்திலே தன்னை இணைத்துக் கொண்டமையால் 87 ஆம் வருடக் கம்பன் விழா கவியரங்கில் பங்கு பற்றவில்லை. அவருக்குப் பதிலாக அக் கவியரங்கில் கம்பன் விழா மேடை ஏறி கவிதை பாடியவர் நாக.சிவசிதம்பரம் ஆவார். அவர் அந்த கவியரங்கத்திலே புதுவை இரத்தினதுரை அளவுக்கு இல்லை என்றாலும் ஓரளவு சிறப்பாக தன்னுடைய கன்னிக் கவிதையை வெளிப்படுத்தி இருந்தார்.

அதற்குப் பிறகு தொடர்ச்சியாக பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு கவியரங்குகளில் அவர் மிகச் சிறப்பாக கவிதை பாடி வந்ததை நாம் அறிவோம். நாங்களும் இளையவர்களாக கவியரங்க மேடைகளில் ஏறிய 90 களிலே கூட மிக முக்கியமான சில கவியரங்கக் கவிஞர்களில் ஒருவராக நாக. சிவசிதம்பரம் அவர்களும் திகழ்ந்திருந்தார். அவருடன் நாமும் கவியரங்குகளில் அன்றிருந்து இன்று வரை பங்குபற்றி வருவது மறக்க முடியாதது.

"கவிஞர் நாக சிவசிதம்பரத்தின் கவிதைகளில் கிராமத்து வாசம் வீசும். இணுவில் செம்பாட்டு மண்ணின் புழுதி உறைந்த வாழ்க்கை அனுபவங்கள், தோட்ட வேலைப் பின்னணியிலும் சைவக்கோயில் பண்பாட்டு புலத்திலும் உழைப்பின் உரத்தோடு வெளிப்படும். கவியரங்குகளில் கவிதைகளை எடுத்துரைக்கும் போது உணர்ச்சி வெளிப்பாடுகள் உறுதியாகவும் சொற்தெளிவோடும் அமைந்திருக்கும்." என்கின்ற பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசனின் வரிகள் சத்தியமானவை.

இவருடைய கவிதைகள் அதிகம் மரபு ஓசை சார்ந்தவை. என்றாலும் எல்லா யாப்பு வடிவங்களையும் அவர் முழுமையாகக் கையாண்டவர் என்றும் கூற முடியாது. நாட்டார் வழக்கிலே பயன்படுத்தப்பட்ட ஒப்பாரி போன்ற வடிவத்திலோ அல்லது அகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிப்பா மற்றும் தேவார திருவாசக சந்தங்கள் கண்ணி ஆகிய சில யாப்புப் பா வகைகளிலோ அவரது கவிதைகள் அதிகம் பேசின.

அதிக சோடனை, அணி அலங்காரங்கள் அற்ற தாகவும், குறியீட்டில் மறைபொருளில் பல விடயங் களைப் பிரஸ்தாபிப்பவையாகவும், சொற் செட்டுடை யவையாகவும், இருண்மை அற்ற எளிமையானவை யாகவும், அவரின் கவிதைகள் அமைந் திருந்தன.

கவிஞர் நாடகத்துறையிலும் ஆர்வமுள்ளவர் என்ற ரீதியிலே அவருடைய கவியரங்கக் கவிதைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்கள் உரையாடுவது போன்ற, நாடகப் பாணியில் அமைந்தவையாகவும் காணப்பட்டன.

கிராம வாழ்க்கை முறைமைகள், கிராம வாழ்வி லுள்ள எளிமைகள், அழகுகள் அழுக்குகள், அந்தக் கிராமங்களின் தனித்துவ விசேசங்கள், தோட்டம் துரவு துலா இறைப்பு, கோவில் திருவிழாக்கள், கூத்துக்கள் நாடகங்கள், மேளக் கச்சேரி சமாக்கள் என்பவை நாக. சிவசிதம்பரத்தினுடைய கவிதைகளிலே விரவி வரும். சாதாரண மக்களால் பயன்படுத்தப்பட்ட பழமொழி களை, சாதாரண மக்களால் பேசப்படுகின்ற வட்டார பேச்சு வழக்குகளை, பாவித்து அவற்றுக் கூடாக அக் கால நாட்டுச்சூழலிலே இருந்த துன்பங்கள் துயரங் களை, சமூக அவலங்களை, குடும்ப உறவுக் கோலங் களை, அடங்கிய குரலில் உணர்ச்சி வசமாகவும், நாசூக்காகவும், தணிந்த கோபத்துடனும், அவர் பாடு கின்ற பாணி கவி அரங்குகளில் நல்ல வரவேற்பைப் பெற்றன. எளிய சொற்கள், சீரான சொற்கோர்ப்பு, சொல் முறை என்பவைகளினூடாக ஆழமான விடயங்களைச், சிந்தனைச் செழுமைகளை, அவரின் கவியரங்கக் கவிதைகள் பேசின.

மேலும் அந்தக் காலத்தில் நாம் சந்திக்க நேர்ந்த முன்னறியா அனுபவங்கள், போராட்ட கால வீரமும் அவலங்களும், எம் வாழ்வோடு ஒட்டிவந்த பண்பாட்டு பாரம்பரியங்கள், யாழ் மண்ணின் தனித்துவ குணங்கள், சமூக மாற்றங்கள், பிரள்வுகள் என பல விடயங்களும் அவருடைய கவிதைகளின் பாடு பொருளாகின. நாட்டினுடைய நடப்பை, அரசியலை, மிகவும் நுட்பாக அங்கதச் சுவையுடன் எள்ளல் ,நக்கல் ,நையாண்டித் தொனியில் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல வாசகர்களுக்கு அவருடைய கவிதைகள் கொண்டு சென்று சேர்த்தன.

போர்க் காலங்களிலே நடந்த சம்பவங்களையும், போராலே சமூகத்தில் ஏற்பட்ட தாக்கங்கள் பாதிப்பு களையும், சாதனைச் சரித்திரங்களையும், அவரின் கவிதைகள் அதிகம் பேசியிருக்கின்றன. ஆனாலும்

அவருடைய அந்தக் குரல் ஒரு ஆவேசப் புரட்சிக் குரலாக, ஒரு கட்டுடைக்கும் குரலாக, ஒரு எழுச்சிக் குரலாக இருக்கவில்லை. அவர் தன்னுடைய வாழ்க்கை நிலை, குடும்பச் சூழல், அவருடைய பின்னணி, தொழில் என்பவற்றைக் கருத்தில் கொண்டே தன்னுடைய மனக் கவலைகளை வெளிப்படுத்தியிருந்தார். அவரின் கவிதைகள் பெரும் பாலும் மௌனத்திலிருந்து பிறந்த ஆர்ப்பாட்டமில்லாத தணிந்த தனித்த வேதனை தோய்ந்த ஆதங்கக் குரலாகவே ஒலித்தன. அவர் தன்னுடைய மனதுள்ளே புழுங்கி "எம்மால் என்ன செய்ய முடியும்" என்ற ஏக்கத்தை எவரிடமோ கொட்டித் தீர்க்கின்ற கவிதைகளாகவே அவரின் அனேக கவிதைகள் அமைந்து கிடக்கின்றன. அவை அதிகம் அதிகாரத்தை கேள்விக்குட்படுத்தாதவை எனினும் அதிகாரத்துக்கெதிரான குமுறலை எண்ணக் கொதிப்பை சன்னமான குரலிலேனும் சொல்லப் பின் நிற்காதவை என்பதும் நோக்குதற்குரியது.

இவ் இயல்பு போலியானதல்ல. அனேக சாமானிய, ஆசாபாசங்களுக்குள் ஆட்பட்ட, பாமர மக்களின் எண்ணமும் குரலும் அதுவாக அமைந்திருந்தது என்பதே யதார்த்தமானது.

இந்த அடிப்படையில் நீண்டு சென்ற யுத்தத்திற் கிடையில் வெளிச்சென்றவர்களை விட விரும்பியோ விரும்பாமலோ வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு, கையாலாகா மற் தவித்த ஒரு மக்கள் கூட்டத்தின் எண்ண ஓட்டத்தை, போராட்டத்திற்கு வெளியே நின்று ஓரளவு நடுநிலை யாக இவரின் கவிதைகள் பிரதிபலித்தன என்று கூறலாம்.

"தான் வாழ்ந்த காலத்து அவலங்களுள் முகம் புதைத்து தீவிர போராளிக் கவிஞர்களாக பலர் உரு மாறிய சூழலில் சிவ சிதம்பரத்தால் அத்தீவிரம் கொள்ள முடியவில்லை: அவர் தனித்து நிதானித்து தன் நிலையை யாரிடம் சொல்லி அழுவது என்ற பாணியிலே தம்மை நிலைப்படுத்திக் கொண்டவர் அதற்கு அவரது குடும்பச் சமூகப் பின்னணியும், தான் வாழ்ந்த ஊரின் பண்பாட்டுப் பின்னணியுமே காரணங்களாகும். கோயில் சமூகப் பின்னணியில் வாழப் பழக்கப்பட்ட அவரால் அதை மீற முடியவில்லை. எனினும் மன அவலங்களை வெளிப் படுத்தாமல் இருக்கவும் முடியவில்லை.இந்த இருதலைக் கொள்ளி எறும்பு நிலையில் நின்று கொண்டே அவரது கவிதைகள் பிரவாகம் கொள்கின்றன." என்று இவரின் நூலின் நயப்புரையில் இவரின் ஊரவரான பேராசிரியர் வ. மகேஸ்வரன் அவர்கள் தெரிவித்திருப்பது சாலப் பொருத்தமானது.

இவ்வாறு ஈழத் தமிழ்க் கவிதைத் துறையில் நீண்ட ஊடாட்டத்தோடிருந்தும் அதிகம் விமர்சகர் களால் கணிக்கப்படாத கவிஞராகவே நாக. சிவ சிதம்பரம் காணப்படுகிறார். அது பற்றி அவர் அதிகம் அலட்டிக் கொண்டதும் இல்லை என்பது வேறு.

தாமே விமர்சகர்கள் எனத் தமக்குத்தாம் மகுடம் சூடிய, கவிதை பற்றி ஆகக் குறைந்தபட்ச அரிவரி விடயங்களைக் கூட அறியாத, நடுநிலையற்ற, அன்றிருந்து இன்றுவரை தம்தம் வட்டங்களை மட்டும் சிலாகித்து வளப்படுத்துகின்ற, ஆய்வாளர் விமர்சகர்கள் என்போர் வழமையாக ஒப்பிக்கும் "ஈழக் கவிஞர் வரிசை" என்ற பட்டியலிலும் இவரின் பெயர் உள்வாங்கப்பட்டி ருக்கவில்லை. மரபு சார்ந்த கவிதைகளைப் பாடிய தாலோ, அதிகம் கவியரங்கக் கவிஞராகவே வெளித் தெரிந்ததாலோ, என்னவோ நவீன கவிதையாளர்கள் எனச் சொல்லிக்கொள்ளும் சிலரும் இவரைக் கண்டு கொள்ளவில்லை.

ஆனால் 2003 ல் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் தினக்குரலுக்கு வழங்கிய நீண்ட நேர்காணலில் தமக்கு அடுத்த தலைமுறையின் ஆற்றல்மிக்க கவிஞர்கள் என இனங்காட்டிய கவிஞர்கள் சிலரில் நாக. சிவ சிதம்பரம் அவர்களும் ஒருவர் என்பது முக்கியமானது.

கவிஞர் அவர்களுடைய கவிதைகள் நீண்ட காலத்தின் பின்னேனும் நூல் உருப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதே. இந்நூல் ஈழக் கவிதைத் துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இயங்கிக் கொண்டிருக்கும் கவிஞர்களில் ஓரளவு மூத்தவரான இவரின் வகிபாகத்தை விமர்சகர்களைத் தாண்டி சக கவிஞர்களும், கவிதை இரசிகர்களும், சாதாரண வாசகர்களும், கூட அறிந்து கொள்ள நிச்சயமாக உதவும் என நம்பலாம்.

"வேரினை நோக்கிய விழுதுகள்" தொகுப்பு 87 சிறியதும் பெரியதுமான கவிதைகளைத் தாங்கி வெளிவந்திருக்கின்றது.

"இரவு பகலற்ற இருள்" என்ற கவிதையில்

"மழை பொழிய மகிழ்ந்திருந்தோம்
வயல் குளிருமென்று-அது
முளை பயிரின் மேல் விழுந்தால்
முகம் மலர்தல் எவ்வாறு?

அதிகாலை இருள் தொலைய
அகமகிழ்ந்தோம் விடிவென்று!
அவ்விருளும் மீளவரின்
ஆறுதல் தான் எவ்வாறு?"

என்றும்

"அந்நாள் இனி வேண்டேன்" என்ற கவிதையில்

"கோயில் முகாமாகக் கொடி கட்டி நாம் மாண்ட
காலத்துச் சோதரான கண்ணீரின் நண்பா!
குளிப்பு முழுக்கில்லாத கோலம்-உள்ளே
ஊர் முழுவதும் ஒன்றாய்... உறங்காத மன நலிவில்
பாலுக்கழும் சிசுக்கள்-பகலிரவாய் மெய் சோர்ந்து
சீர் மிகுந்ததெம் வாழ்வின்-சிரிப்பை இழந்தோமே!

காற்றடித்த பக்கம் எல்லாம் சாயும் மரங்களிடை
வேர்த்தொழுக நின்றோம்... விலங்குகள் போல்..!
விடியுமுன்னம் சூரன் தலையாட்டிச்
சுற்றிவரும் வேளை-நெஞ்சில்
ஏறி மிதிப்பது போல் எரி சுமந்து நின்றோமே!
உங்களைப்போல்எல்லோர்க்கும்உதவும்குணமுடைய
எங்கள்... மெழுகுவர்த்தி...
எவரெவரோ கால் அடியில்.."

என்றும் தன் மன அவசங்களைச் சொல்கிறார்.

"ஏனம்மா நீ அழுதாய்" என்ற கவிதையில்

"முள் முடி சுமந்து யேசு
முதுகிலே சிலுவையோடு
புண்பட்ட மலையிலேறப் பின்
தொடர்ந்தவளாய் நீயும்
என் இடர் கண்டு நெஞ்சம் ஏங்குகிறாயோ அம்மா!
அம்மா அழாதே!
அடுத்தடுத்தே முயன்று-அறுந்த தன் கூட்டினைத்
தொடுத்த சிலந்தியையும் உன் சேயினையும்-யாரும்
தடுத்தல் இயலாது தாயே!
சிரித்து எழு!" என்று உசாரூட்டுகிறார்.

"வளரும் விதை நெல்" என்ற கவிதையில்

"வடலிப் பனங்காணி
வலுவிழந்த சிறுகுடிசை
வாடைக்காற்றில்-உயிர்
வருந்தும் இலாம்பருகில்
பயிலும் சிறுகுருத்தே
பாலகியே ஏனழுதாய்?"

என மின்சாரம் செத்த அச்சூழலில் பயின்ற ஒரு தலைமுறை பட்ட பாட்டை, துயரை எம்மிலும் தொற்ற வைக்கிறார்.

"நேரமும் நிலையும்" என்ற கவிதையில்

"கலை முகில்கள் கூடி கவி பொழியும் வானத்தில்
அலையும் வெண்முகில் நான்.
அன்பான மயில்களே!
வளியில் நான் அடைந்த வேதனையின் அச்சத்தால்
மண்ணுக்குள் மீள மனமின்றி மேலுயர்ந்தேன்.
மண்பிளந்து-நீர்வரண்டு
மரஞ்செடியெல்லாம் வருத்தி
கண்கலங்கும் போது-மயில்களே!

நீங்கள் வாடி வருந்தியது
என் மனதுக்குத் தெரியும்."

என்று தன் கவியுளத்தை ஒப்புக் கொடுக்கிறார்.

"வேரடியை நோக்கி" என்ற கவிதையில்

"ஆலமரம் விழுதுகளை ஆக்குவதும் ஏன்? அது
தான்தளரும் போது-கிளை
தாங்குமென்ற துணிவில் தான்..
ஆலமரம் விழுதுகளை ஆக்குவது பார்!
ஆக்குகிற விழுதுகளோ "ஆம்" எனது தாய்மரத்தைத்
"தூக்குதல் என்கடன்"! என்று
துணிவோடு நீள்கிறதா? இல்லை! இல்லை!
இடைநடுவிற் கூழைகளாய்
எத்தனையோ தூங்குது பார்..."

என்று குறியீட்டில் குடும்ப உறவின் குறைகளைச் சுட்டுகிறார்.

"யாரொடு நோகேன்..." என்ற கவிதையில்

"காலக்குழந்தையின் "கிலுகிலுப்பை"யாய்-ஒலிக்கும்
கோயில் மணிகள்!
நாணிச் சிவந்த முகம் நகைபுரியக்-காலை எழும்
நாதசுர மேள இசை
காவடிகள் கூத்துக்கலைகள் பரதம் இசை
பூத்துக் குலுங்கும் பொழுது எல்லாம்-இந்தப்
பூமிக்கு மாலையிட பூக்களினை
தூதுவிடும் சூரியனை
தன் மேலில் சுமக்கும் உழவரிசை
வாழவைக்கும் பூமிக்கு வணக்கம்!"

என்று கற்பனைக் கவித்துவம் காட்டுகிறார்.

"இலையுதிர் காலம்" என்ற கவிதையில்

"வெள்ளிகளும் கூட விழி கலங்கும் இராத்திரிகள்.!
சேவலும் தான் சிறகசையாச் சோகம்-மௌனம்!
நாய் குரைக்க மனம் நடுங்கி.. நடு வீட்டினுள் இருந்து.
ஏங்கிய நாள் போனதென்று எழுகிறது இளைய கதிர்!
பெருநாளைக் கொண்டாட முடியாது இரவு பகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் தன் பிரிவாலே உள்ளம் கலங்குவதை
புரிந்ததனால் போலும் வெய்யோனும்
புன்னகையை இழந்து நின்றான்!
மலர் இதழும் வளர்மதியும்
மனம் கலந்த உறவு-பகல்
இரவாய் முற்றிப்-பனி வியர்வை
சொட்டும்-அதிகாலைப் பொழுதை
பாடுகின்ற மென் மனதோ
பறிபோயிற்று..."

கடந்த காலத்துயர் சொல்கின்றார்.

"இன்னமும் தீ...."என்ற கவிதையில்

"நல்லூரின் வீதி மணல்! நான் பிறக்கு
முன்னர்-இந்த
மண் மீது கோடி வரலாறு உயிர் பெறத் தம்
பண்பாடு காத்த பழைய மணல்!
ஏட்டில்-எழுத்தில் இடை இடையே
பெருந்துயரக் கூட்டில் இருந்தும்
குறிக்கோளுடன் நிமிர்ந்து
வாழும் தலைமுறைக்கு
வழி சொன்னோர் வாழ்ந்த மணல்!
தென்றலென வந்துயிரைத்
தீண்டும் அனற்காற்றை
நின்றெதிர்த்த தீப நெருப்புச்சுடர்-அணைந்த
கண்ணீரின் ஈரம் இன்னும் காயாத(து) இந்த
மணல்" என்று எம் மண்ணின் பீடும் பெருமையும் ஈகந் தியாகமும் பேசுகிறார்.

"துள்ளிய மீன் குஞ்சே உன் துடிப்பு..." என்ற கவிதையில்

"கடல் அலையின் நுரை சிதறிக்
காய்ந்த பெரும் மணல் வெளியில்
அங்காய்ந்த வாயும்-உன் தன்
அவலமுமாய்-வான் பார்த்து
"என்னுறவு சுற்றம் இன்று...
எங்கே?" என்றேங்குவதாய்...
செந்நீரின் சேற்றில்...சிறகிறுகிப் பூ வாடி...
உயிரின்துடிப்பும்-உள்உணர்வுகளும்அடங்கிய-ஓர்
உருவாக இல்லை வெறும்உருக்குலைந்த சடலமென
காவல் இரவதிர்வினில்-தன்
கடல் இழந்த படகு என..."

என்றும் செம்மை மிகு கவிசொல்கிறார்.

"வாழ்கின்றாய் அம்மா" என்ற தன் சாமானிய கிராமத்து எளிமைமிகு அன்பு அன்னையின் நினைவைப் பகிர்ந்த கவிதை கவிஞர் சோ. ப சொன்னதுபோல எம் கண்களையும் நெஞ்சையும் கலங்கி நெகிழ வைக்கிறது. இந்த ஆரவாரமற்ற உண்மை உணர்ச்சி இழை அனேகமான எல்லாக் கவிதைகளிலும் ஊடுபாவாக ஓடி இருப்பது நாக. சிவசிதம்பரத்தின் தனித்துவத்தைப் பறை சாற்றுகிறது.

நாக. சிவசிதம்பரத்தின் கம்பன் விழாக் கன்னிக் கவியரங்கேற்றத்தை அரங்கில் திரண்டிருந்த சனக் கூட்டத்துள் செல்ல முடியாமல் அன்றைய நல்லை ஆதீன மண்டபத்தின் முன்னிருந்த கம்பிக் கிராதியைப் பிடித்துக்கொண்டு பார்த்து இரசித்த ஒருவனாகவும், அவரின் அன்பர்களில் இரசிகர்களிலொருவனாகவும், அவரின் "வேரினை நோக்கிய விழுதுகள்" நூல் வெளியீட்டு நிகழ்வில் கவிஞரின் அறிமுகத்தையும் அவரின் நூலையும் உலகுக்கு அறிமுக உரையூடாக அறிமுகம் செய்தவனாகவும், அவரின் இந்த முதலாவது கவிதை நூலுக்கு "அவர் கேட்டுக் கொள்ளாமலேயே" ஒரு நயப்புரையை வழங்க வேண்டும் என எண்ணி அதற்கான நேரம் கிடைத்த அண்மையில் அதனை எழுதத் தொடங்கிய போது, அவரின் இந்நூல் "அரச இலக்கிய விருது" வழங்கும் விழாவில் இவ்வாண்டு வெளிவந்த சிறந்த கவிதை நூலுக்கான தேசிய விருதுத் தெரிவில் உள்வாங்கப்பட்டது என அறிந்து அவரை தொலைபேசி ஊடாக வாழ்த்தினேன்.

நேற்று (18.09.2025) "அரச இலக்கிய விருது" வழங்கும் விழாவில் தேசிய ரீதியில் இவ்வாண்டு வெளி வந்த சிறந்த கவிதை ஆக்க நூலாக நாக சிவசிதம்பரத்தின் "வேரினை நோக்கிய விழுதுகள்" தெரிவுசெய்யபட்டு, கவிஞர் அவ் விருதையும் பெற்றதும் அவர் மீது புதிய புகழ் வெளிச்சம் விழுந்து பரவத் தொடங்கியிருப்பதும் மிக மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தருகிறது.

கவிஞரின் கவிப்பணி மேலும் சிறப்புறத் தொடர வாழ்த்துக்கள் கோடி.

இ.சு.முரளிதரனின் வியாக்ரன் வெளியீட்டு விழா யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் கே.கே.தவகீஸ்வரன் தலைமையில் 03.10.2025 நடைபெற்றது. அறிமுகவுரையை கலாநிதி தி.செல்வ மனோகரனும் கருத்துரையை இ.இராஜேஸ்கண்ணனும் நிகழ்த்தினார்கள். ஏற்புரையும் நன்றியுரையும் செல்வி ஷாயினி வித்தி ஆனந்தன் அவர்களாலும் இ.சு.முரளிதரனாலும் நிகழ்த்தப்பட்டது.



இ.சு.முரளிதரனின் வியாக்ரன் நூல் அறிமுகவிழா இமையாணன் கலைபண்பாட்டு வளாகத்தில் 8.10.2025 அன்று க.பரணீதரன் தலைமையில் நடைபெற்றது. அறிமுகவுரையை சி.விமலனும், கருத்துரையை திரு த.அஜந்தகுமாரும் ஏற்புரையை நூலாசிரியரும் நிகழ்த்தினார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. இரவீந்திரன்

# நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து



**9**

எமது மறுமலர்ச்சித் தாயாகத் திகழ்ந்த தாயாகத் திகழ்ந்த கந்தையா வாத்தியாரின் இணையர் அன்ரி வழிமறித்து மன்ற முன்னோடிகளகச் செயற்பட்ட வாறிருந்த எங்களில் பலரும் பௌதிக ரீதியாகத் திக்கெட்டும் பிரிந்து சென்றிருப்பதனைச் சுட்டிக் காட்டியதில் வெறும் ஊர் தாண்டிய பரவலாக்கத்தை மட்டும் குறிப்பிட்டு இருக்கவில்லை. எமக்கான அடுத்த பரிணமிப்பில் வேறுபட்ட தளங்களுக்குச் சிதறிப்போகத் தொடங்கிவிட்டோம் என்பதனை உணர்த்தும் நோக்க மும் அவருக்கு இருந்தது. ஊரில் ஒன்றுபட்டு வளர்ந்த போது ஒரே சமூகச் சூழலுக்குள் மன்றமென அடை யாளம் கொண்டிருந்த ஒவ்வொருவரும் புதிய தளங் களில் முன்னேறும் போது பழைய அடித்தளத்தை இழக்காது இருப்பது மிகச் சிரமம் என்பதனை வாழ்வனுப வம் வாயிலாகக் கண்டுணர்ந்து அன்ரி எச்சரித்து இருக் கிறார் என்பதனை இப்போது புரிந்து கொள்கிறேன்.

அந்த மாற்றம் அன்றைய நிலையில் எனது நடத்தையிலும் வெளிப்படதனை அவர் அவதானித்து இருந்தார். ஊரிலேய இருந்த வேளையிலும் கூட என் தலைக்கறுப்பு மன்றத்தில் தென்படுவதில்லை என்ற வகையில், “இப்போது உள்ளதை இனிவரும் நாட்களில் மறந்துவிடுவீர்கள்” எனச் சொன்னதன் அடியாழத்தில் ஏற்கனவே மன்றப் பக்கம் எனது பிரசன்னம் அருகிக் கொண்டு வருவதனைக் குத்திக்காட்டுவதும் இருந் திருக்கலாம். முன்னரைப் போல விளையாட்டில் மூழ்கிக் களைத்து, அதன் நிறைவுடன் கிணற்றுக் கட்டைச் சூழ்ந்திருந்து அரட்டை அடிப்பது என்ற பழக்கத்தில் இருந்து நான் விலகியவாறு இருக்கிறேன் என்பதனை அன்ரி கவனத்தில் எடுத்திருப்பார். மிக முக்கியமான கலந்துரையாடல் கூட்டங்கள், நிகழ்வு கள் இடம்பெறும்போது மன்றத்துக்குச் செல்வதற்கு அப்பால் நாளாந்தப் பங்கேற்பைக் குறைக்கும் நார்ப்பந்தம் எனக்கு ஏற்படத் தொடங்கியது. மன்றம் எனக்கு வலுவான அடியத்திவாரத்தை இட்டுத் தந்ததன் தொடர்ச்சியாக ஊரெல்லை கடந்த அரசியல் - சமூக - பண்பாட்டுச் செயல் களங்கள் எனது கரிசனத்துக்கு உரியனவாய் விரிவடைந்தன. மன்ற அரங்கில் இயங்கிய இலக்கியப் பரிமாற்றங்களின் வாயிலாகச் சமூக சீர்திருத்தங்களைக் கடந்து அடியந்தமாகச் சமூக அமைப்பை மாற்றுவதற்கான அரசியல் புரிதல் வலியுறுத்தப்பட்டு, சமூகமாற்றச் சிந்தனைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனத் தெரிந்து கொண்ட பின்னர் எனது கற்றலின் பரப்பு விஸ்தீரணப் படலாயிற்று. சமூக அமைப்பை மாற்றுவதற்கான திசை முகப்படுத்தலில் ஏனையவர்களை ஆற்றுப்படுத்தும் கலை-இலக்கிய வெளிப்பாடுகளைத் தருவதோடு அமைதி கொள்ளாமல் அதற்கெனத் தீவிரமாக உழைப்பவர்களோடு களமாடிச் செயற்படுவதன் வாயிலாகக் கற்றுத் தெளிவடையும் முனைப்பில் முழு வீச்சாக ஈடுபட்டதன் பேறாக எனது வாழ்வியல் தடம் புதிய திசை நோக்கியதாக, அடியந்தமாய் மாறிப்போகத் தொடங்கியிருந்தது.

நூல்களின் மூலமாகப் புதிய பாதையை அறிவது என்றில்லாமல், ஒரு முன்னோடியின் தடத்தைத் தொடர்வதன் வாயிலாக அவரின் நீடிப்பு ஈர்த்துச் செல்லத்தக்க ஆற்றொழுக்கில் எனக்கான மார்க்கத் தைத் தேர்ந்து தெளிவதற்கேற்ற வழிகாட்டி ஒருவர் தற்செயலாக அறிமுகமாகும் நல் வாய்ப்பு ஏற்பட்டது. எமது பிரதேசத் தலைமையகம் அமைந்திருந்த சங்கானை அந்தத் திருப்புமுனையின் மையமாயிற்று.

மன்றச் செயற்பாட்டின் ஒரு நீடிப்பாக அமைந்த இலக்கிய ஊடாட்டம் போன்றதாகவே அதுவரை மார்க்சிய நூல்களைப் படிப்பதும் அது குறித்து உரையாடு வதும் அமைந்திருந்தன. எமக்கு அப்போது அறிமுகமாகி யிருந்தது “பல்கலைக்கழக மார்க்சியம்” என்ற வகையில் அறிதலும் பரப்புரையும் என்பதற்கு அப்பால் களச் செயற்பாடு பற்றிய அக்கறை இருந்திருக்கவில்லை. மன்ற மைதானம் - ஊருக்கான பண்பாட்டு விழிப் புணர்வுச் செயற்பாடுகள் - மன்றத்தவர் பங்கேற்கும் இலக்கிய ஊடாட்டம் என்பவை கடந்த வேறு செயல் புலம் ஏதும் எமக்கனதாக இருக்க இயலும் என்ற புரிதல் அப்போது எமக்கு இருக்கவில்லை.

ஒவ்வொரு நாளும் விளையாட்டில் மூழ்க இயலாது, கலை - இலக்கிய - அரசியல் விவாதங்களை முன்னெடுத்தவாறு இருக்க முடியாது என்பதனால் அவ்வப்போது பத்துப் பதினைந்து பேராக ஆறேழு சைக்கிள்களில் சினிமாத் தியேட்டர்களுக்கு செல்வது எம்மிடம் இருந்த மற்றொரு பொழுதுபோக்காகத் தொடர்ந்தது. அவ்வாறு யாழ்ப்பாணம் சென்று திரும்பிக் கொண்டு இருந்த ஒரு நாள் மாலையில் சங்கானையை அடையும்போது “சங்கானை மீன் சந்தைக்கருகில் தோழர் சண்முகதாசன் உரையாற்றும் கருத்தரங்கு” இடம் பெறவுள்ளது என்ற சுவரொட்டி கண்ணில் பட்டது நாளும் நேரமும் அதுவே என்பதால் எங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைக்கிள்கள் கூட்டம் இடம்பெறும் இடத்தை நோக்கித் திரும்பின. தோழர் சண் உரையை நிறைவுக்குக் கொண்டு வந்ததும் மூன்று கேள்விகளை அவரிடம் முன்வைத்தேன்.

பத்துப் பதினைந்து புதிய முகங்கள் அதிரடியாக நுழைந்தது மட்டுமன்றித் துணிந்து கேள்விகள் வேறு தொடுப்பது என்பது குழப்பும் குழுச்சேட்டையோ என்ற எச்சரிக்கை உணர்வு முதலில் தங்களிடம் ஏற்பட்டிருந் தது என்று பின்னர் தோழர்கள் சொல்லி இருந்தனர் அப்போது அதனைக் கண்டுணரும் வண்ணம் கூட்டப் பங்கேற்பாளர்களிடம் எத்தகைய சலசலப்பும் இருக்க வில்லை. பின்னதாக அவ்வாறு சொல்லப்பட்டதைக் கேட்ட எனக்குள், கட்சிக் கட்டுக்கோப்பும் கட்சிப் பலத்தின் மீது ஒவ்வொரு தோழரும் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையும் எத்தகையது எனும் உணர்வே மேலோங்கியது. எமது கேள்விகளுக்கு அக்கறையுடன் தோழர் சண் பதிலிறுத்த பாங்கு கட்சிமீது அப்போதே பெரு மதிப்பை விதைத்திருந்தது.

"மக்களுக்கான விமோசனத்தை வழங்க இயலாத கையறு நிலையுடனும் அடக்குமுறைப் பண்புடனும் இன்றைய அரசாங்கம் ஆட்சி புரிகிறது எனச் சொல்கிறீர்கள் இத்தகைய அரசாங்கத்தைப் பலப்படுத்தும் வகையில் தானே "பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுக்கும் புரட்சிகர நாடு" என நீங்கள் சொல்லியபடி ஆதரிக்கின்ற சீனா, "பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம்" என்கிற ஒன்றைக் கட்டிக்கொடுப்பதோடு இவர்களைப் பல வழிகளிலும் தாங்கிக் கொண்டும் இருக்கின்றதே அது எந்த வகையில் சரியானது? அமெரிக்க ஏகாதிபத்தி யத்துக்கு எதிராகப் பேசுகிறீர்கள், அதே அமெரிக்கா வுக்கு சீனா நட்புக் கரம் நீட்டுவதுடன் சீனக் கொம் யூனிஸ்ட் கட்சித் தலைவரான மாஓ சேதுங் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனைக் கைகுலுக்கி வரவேற்கவும் செய்கிறாரே, இதனை எந்த வகையில் ஏற்க இயலும்? முன்னர் தீவிரமான பல போராட்டங்களை முன் னெடுத்த உங்களுடைய கட்சி இப்போது செயலிழந்து போயிருப்பது ஏன்?" என்பவை என்னால் முன்வைக்கப் பட்ட கேள்விகள்.

சாரங்களோடு காலுக்குச் செருப்புமில்லாமல் சைகிள்களில் வந்து குதித்த, விளையாட்டுத்தனமான பொடிப்பயல்கள் போல இருப்பவர்கள் எழுப்பிய கேள்விகள் எனப் பார்க்காமல் பொறுப்புணர்வுடனும் தெளிவாகவும் சண் தோழர் முன்வைத்த பதில்கள் மிகுந்த திருப்தியை அளித்து உற்சாகமூட்டியதில் முழு தாக ஆகர்ஷிக்கட்டவர்களானோம் கூட்டம் நிறைவுற்று வெளியேறுவதற்கு அவர் முற்பட்டபோது அவரை நெருங்கிச் சென்று உரையாடத் தொடங்கினோம் அவருடன் எங்களைச் சூழ்ந்து தோழர்கள் வளைய மிட்டிருந்ததை இயல்பான ஒன்றாகவே எண்ணியிருந் தோம். பின்னதாகத் தோழர் வன்னியசிங்கம் சொன்ன போது எமது உத்வேகமான நடவடிக்கைகள் தங்களுக் குச் சந்தேகங்களை உருவாக்கியதாகவும் எமது தாக்குதல்களை முறியடிக்கும் முஸ்தீபுடன் தாங்கள் தயாராகச் சுற்றிவளைத்து வந்ததாகவும் கூறியிருந்தார்.

அத்தகைய பயங்கரவாதக் குழுவாக நாங்கள் இருக்கவில்லை. தோழர் சண்முகதாசனை நெருங்கி மிகப் பணிவுடன் "இந்த விடயங்களைப் பேசுவதற்கு நாங்கள் கூட்டமொன்றை ஏற்பாடு செய்கிறோம் எங்களூருக்கு எப்போது வரக் கூடியதாக இருக்கும்?"

"எந்த ஊர்?"

"பக்கத்திலே, இரண்டு மூன்று மைல் தூரத்துக்குள், காலையடி"

"அங்கு தானே மூன்று வருடங்களுக்கு முன் வரை இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய இவர், தோழர் மணியம், இருந்தார். இப்போது தொல்புரத்தில் இருக்கிற இவரோடு சந்தித்துப் பேசிக் கூட்டத்தை எப்போது, எப்படி வைக்கலாம் என்னு முடிவு செய்யுங் கள்" என்றபடி அருகில் நின்ற தோழர் கே.ஏ. சுப்பிர மணியத்திடம் எங்களை ஒப்புக் கொடுத்தார். தொல்புரம் வீட்டில் அவரை மறுநாளே வந்து சந்திப்பதாகக் கூறித் தோழர்களிடம் இருந்து விடைபெற்றோம்.

காலையடி என்று சொன்னதுமே தோழர் மணியம் மூன்று வருடங்களுக்கு மேலாக வாழ்ந் துள்ளார் என்பதனைத் தோழர் சண் ஞாபகப்படுத்த இயலுமாக இருந்தது ஆச்சரியத்தைத் தந்தது. பின்னர் அறிந்த வண்ணம், மணியத்தார் குடும்பம் எங்களூரில் இருந்த காலத்தில் அவரது மகள் ராதா அங்கு வந்து ஒரு மாதமளவில் தங்கியிருந்துள்ளார் என்ற வகையில் மகத் தான தலைவரின் நினைவிலும் எமது கிராமம் ஆழத் தடம் பதித்துள்ளமை மகிழ்வைத் தருவதாக அமைந்தது. அந்தக் குதூகலிப்புடன் மறுநாள் காணவுள்ள புதிய அரசியல் மார்க்கம் எத்தகையது என்ற மன உந்துதல் பலவேறு சிந்தனைகளைக் கிளர்த்தும் தேடலூக்கத் தோடு வீடு நோக்கிப் பயணித்தோம்!

மணியம் தோழர் வீட்டுக்கு எவ்வாறு செல்வது என்பதில் சிரமம் ஏதும் இருக்கவில்லை. யோகேஸ் வரனின் சிறிய தாயார் மணியத்தாரின் இணையரிடம் ஊரிலுள்ள நெசவுசாலையில் கற்றவர் என்ற வகையில் தொல்புரத்துக்குச் சென்ற பின்னரும் அவர்களுடைய வீட்டுக்கு தனது சிறிய தாயாரை அவ்வப்போது அழைத்துச் செல்வதை அறிவோம். எமது சினிமா யாத்திரைகளுக்கு யோகேஸ்வரன் வருவதில்லை விருப்பமில்லாமல் அல்ல, வர இயலாத அளவுக்குக் குடும்பப் பொறுப்பு அவரை மிக அதிகமாய் அழுத்துவ தாக இருந்தது. அதனை உணர்ந்து, இயன்ற வரையில் குடும்பத்துக்காகத் தனது நேரத்தின் பெரும் பகுதியை வழங்கியவாறு தான் மன்றச் செயற்பாடுகளை மேற் கொண்டு வந்தார். எங்களுடைய அரசியல் நாட்டத்துட னும் அக்கறை காட்டியவர் இன்றைய சமூக நியதியை மாற்றாமல் ஒவ்வொருவரும் குடும்பத்துக்காக மல்லாடுவதில் பெரும்பகுதி நேரத்தை மூழ்கடிப்பதில் இருந்து விடுதலை கிட்டாது என்பதை அறிந்தவர் என்ற வகையில் அரசியல் செயற்பாடு நோக்கிய நகர்வுகளிலும் பங்கேற்பார் என்பதனை அறிவோம்.

இப்போது வீடுதேடிச் சென்று சந்திக்க இருப்பதி லிருந்து ஒன்றரை வருடத்தின் பின்னர், 1976 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பை ஏற்று புரட்சிகர இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி அனுப்பிய தூதுக்குழு ஒன்றில் இடம்பெற்றுத் தோழர் மணியம் மக்கள் சீனம் சென்றிருந்தார். இரு கட்சிகளுக்கும் இடையேயான கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்த வேளையில், "மக்கள் சீனக் குடியரசு" வெற்றி கொள்ளப்படுவதற்கான போராட்டங்களில் பங்கேற்றவரும் அதன் உதயத்தில் இருந்து பிரதமாராகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி வகித்ததனூடாகச் சர்வதேச அரங்கில் சோசலிச சீனத்துக்கு நல்லாதரவைத் திரட்டித் தந்த மகத்தான பங்களிப்பின் காரணமாக மக்களிடையே பெரு மதிப்பைப் பெற்றிருந்த தோழர் சௌ என்லாய் விடை பெற்றார் இலங்கை வானொலி அறியத் தந்த இந்தத் துயரச் செய்தியைக் கேட்டறிந்த போதிலும் அது தொடர்பில் மேற்கொள்ளத்தக்க அரசியல் பணி ஏதும் இங்கே இருக்குமெனும் புரிதலின்மையால் வழக்கமான கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன்.

ஆத்துப் பதைத்துப் படலையடியில் வந்தவுடன், என்னை அழைத்த யோகேஸ்வரன் "செய்தி அறிஞ்சனியோ?" என்றார்.

"ஓம், சூ என்லாய் இறந்துவிட்டார் என்ற செய்தியை ரேடியோவில கேட்டனான்"

"அதைக் கேட்ட பிறகும் வீட்டில சும்மா இருக்கிறியோ?"

"சீனத் தலைவர் அங்கை இறந்ததுக்கு இங்கை நாங்கள் என்ன செய்ய ஏலும்? சீனாவில நடக்கிற செத்தவீட்டுக்கு நாங்கள் போக முடியுமோ?"

அன்றைய இருப்பில் வானொலிச் செய்தி நிறைவுற்றதும் மரண அறிவித்தல் ஒலிபரப்பாகும் போதே அநேகமாக இறுதிச் சடங்கு எங்கே - எப்போது இடம்மெறும் என்ற தகவலும் தரப்படும். உற்றார், உறவினர், ஊரவர், நண்பர்கள் என அனைத்துத் தரப்பினரும் உத்தியோக நிமித்தமாக எங்கிருந்தாலும் இலங்கை வானொலி அறிவித்தல் பிரகாரம் உரிய நாளில் நேரில் சென்று இறுதி மரியாதையை வெளிப் படுத்துவர். அது போன்ற புரிதல் அரசியல் தெளிவை மழுங்கடித்துச் "சீனாவுக்குப் போக இயலாது தானே" என்று ணொல்ல வைத்தது. அரசியல் தத்துவங்களை விவாதிக்கின்ற ஒருவரின் நடைமுறை வறட்சி யோகேஸ்வரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"இறுதி மரியாதை செலுத்திறதுக்குச் சீனாவுக்கு நாங்கள் போக வேண்டிய அவசியமில்லை. இங்கை எங்கடை கட்சி ஏதாவது செய்யும் அதிலை பங்கெடுக்கிறது தான் அரசியல் செயல்பாடாக இருக்கும். மக்கள் விடுதலைக்காகப் போராடிய ஒருவருக்கு செலுத்துகிற மரியாதை என்றது அதுதான். வெளிக்கிடு, யாழ்ப்பாணம் போவோம்."

மணியம் தோழர் வீட்டில் இருந்திருந்தால் இந்தச் செய்தியை அறிந்ததும் அவரது வீட்டுக்குப் போயிருப்பேன். அவர் இல்லாத காரணத்தால் செயலற்று இருந்த என்னை கட்சிக்குரிய "யாழ்ப்பாணம் அச்சகம்" நோக்கி அழைத்துச் சென்றார். "மறைந்த சீனப் பிரதமர் சூ என்லாய்க்கு புரட்சிகர அஞ்சலிகள்" எனும் சுவரொட்டி (போஸ்ரர்) ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் அச்சாகிக்கொண்டு இருந்தது. அவரது வழக்கமான சீனப் பாரம்பரியக் காற் சட்டை-மேற்சட்டை அணிந்திருந்த சீனப் பிரதமர் தமிழ் மரபுப் பட்டுச் சால்வையை மாலையாக அணிந்திருந் தார். எமது பட்டுச் சால்வையை நெஞ்சில் சௌ என்லாய் (அன்றைய பாவனையில் சூ என்லாய்) தாங்கும் அந்த அழகான தோற்றத்தை ஏற்படுத்திய தோழர் வி.பி. என அழைக்கப்படுகின்ற வ. பொன்னம்பலம் ஒன்றிணைந்திருந்த கொம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்த போது அதனை அணிந்த கையுடன் இருவரும் இணைந்து எடுத்த படம் அது அஞ்சலிக்காக பிரிக்கப்பட்ட தோழர் விபி சோவியத் சார்பினராக ஏற்கனவே எம்மிலிருந்து வேறுபட்டு இருந்தார்.

அவ்வாறு போஸ்ரர் அடிக்கப்படும் காட்சி எனக்குப் பெரும் வியப்பைத் தந்தது. அச்சகத்தில் அதனை அடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வன்னிய சிங்கமும் அவற்றைப் பெற்றுப் பலவேறு கட்சிக் கிளை களுக்கு அனுப்பும் வேலையை மேற்கொண்டவாறு இருந்த செந்திவேல் அவர்களும் பின்னர் மிக நெருக்க மாக வந்த தோழர்கள். வாலிபர் சங்கத்தில் இணைந்த கையுடன் இடம்பெற்ற வட பிராந்திய வாலிபர்சங்கக் கூட்டத்தைச் செயலாளராக இருந்து நடாத்திய தோழர் செந்தில் பின்னர் எமது கிராமத்தில் பல தடவைகள் வந்து அரசியல் வகுப்புகளை நடாத்தியவர். மணியம் தோழர் இங்கு இல்லாத போது உடனடியாக இத்தகைய பணி மேற்கொள்ளப்படுவதில் இவரது தலைமையில் கட்சி வேலைமுறை தொடர்வது சாத்தியம் என்பதனை அங்கு கற்றுக்கொண்டேன்.

வட்டுக்கோட்டை முழுவதற்கும் ஒட்டுவதற் கான சுவரொட்டிகளில் எங்களுக்கு உரியதையும் சங்கானையில் தோழர்களிடம் கையளிக்க வேண்டிய வற்றையும் பெற்றுக்கொண்டு நானும் யோகேஸ்வரனும் ஊர் திரும்பினோம். மறுநாள் யாழ்ப்பாணப் பிரதேசம் முழுமையும் கட்சியின் அந்தப் போஸ்ரர் அனைவரது கண்களையும் ஈர்ப்பதாக இருந்தது. "துக்கத்தைப் பல மாக மாற்றுங்கள்" எனும் இயங்கியல் செயல் முறையைக் கையேற்றுத் துயர்மிகு செய்தியைப் பரப்புரை செய்வதனூடாக மேற்கொள்ளப்படும் அரசி யல் வேலைமுறையை நேரடியாகக் கற்கும் வாய்ப்பினை முதன் முதலில் எனக்கு இவ்வகையில் ஏற்படுத்தித் தருபவராக யோகேஸ்வரன் விளங்கினார். அவ்வாறு அன்று யாழ்ப்பாணம் நோக்கி உடனடியாகப் போக வில்லை எனில் சொன்னதைச் செய்யும் கிளிப் பிள்ளை யாகக் கணிக்கப்பட்டு எனக்கான கட்சிப் பணி மட்டுப் பட்டிருக்கும்.

தன்னுடைய குடும்பத் தேவைகளைத் திட்ட மிட்டுச் செம்மையாக நிறைவாக்கித் தருவது போலவே கட்சி வேலைகளிலும் அப்போது யோகேஸ்வரன் முன் கையெடுத்து இயங்குபவராக இருந்தார். வீட்டுப் பணி அதிகரித்து வந்த சூழலிலும் புலம்பெயர்ந்து கனடா சென்றுவிட்டமையாலும் தொடர்ந்து அரசியல் களத்தில் அவர் இயங்க இயலாமலாயிற்று என்பது எமக்கான துரதிர்ஷ்டம் என்ற போதிலும் கற்பதைச் செயலாக்கும் நடைமுறை உந்தலை என்னில் அவர் விதைத்ததன் வாயிலாகத் தோன்றாத் துணையாக இயங்கிக் கொண்டி ருந்தார் எனலாம். பின்னரான அரசியல் கள நிலவர மாற்றமும் அவர் அரசியலுக்கு முன்னுரிமை வழங்குவதி லிருந்து ஒதுங்கக் காரணமாக அமைந்தது. இருப்பினும், தொடர்ச்சியாக இடதுசாரி உணர்வுடன் எமது வேலை களை ஊக்கப்படுத்தி வருவதைக் கைவிடாதிருந்தார் என்பது கவனிப்புக்குரியது.

தோழர் மணியத்தை முதன் முதலில் தொல்புரம் வீட்டில் சென்று சந்திப்பதற்கு யோகேஸ் வரன், கிருஸ்ணதாசன், தயாளன், வேல்முருகன் என ஆறேழு பேர் என்னுடன் வந்தார்கள் என்ற ஞாபகம் உள்ளது. காரைநகர் நோக்கிச் செல்லும் பிரதான வீதியின் பத்திரகாளி கோவில் சந்தியில் இருந்து தெற்காகப் பிரிந்து தொல்புரம் மத்தி ஊடாகச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணாவெட்டியில் மீண்டும் காரைநகர் வீதியை அடையும் அந்தச் சாலையில் சென்று, இடையிலேயே ஒரு கையொழுங்கைக்குள் யோகேஸ் எங்களை அழைத்துச் சென்றார். ஒழுங்கை முடிவில் உள்ள தோழரின் வீட்டுப் படலையில் உள்ளே எவரும் இல்லை எனக் காட்டும் பூட்டுத் தொங்கிக்கொண்டு இருந்தது. ஏமாற்றத்துடன் எதிர் வீட்டில் விசாரித்த போது ஓரிரு மணித்துளிகளில் ரீச்சரும் பிள்ளைகளும் வந்து விடுவார்கள் என்பதை அறிந்தோம். ஒழுங்கையில் இருந்து மீண்டு சாலையின் சந்திக்கு வந்து சைக்கிள் பாரில் சாய்ந்தும் நின்றும் கதையளந்து கொண்டிருந் தோம். "புதிய வளவொன்றில் வீடு கட்டும் வேலைக் காகப் போயிருக்கும் ரீச்சரும் பிள்ளைகளும் பொழுது சாயுமுன்னர் வந்துவிடுவார்கள்" என்ற அயல்வீட்டவர் தந்த நம்பிக்கைப் பிரகாரம் அதிக நேரக் காத்திருப்புக்குத் தேவை இருக்காது!

பத்து வயதுச் சிறுமி முன்னால் தலையில் கடகம் தாங்கி நடந்து வரத் தொடர்ந்து அவரது அண்ணா, தம்பி, ரீச்சர் என ஒவ்வொருவரும் பின்னாலே வரிசைகட்டி வந்திருப்பர். முன்னதாகக் கண்ணில் பட்ட சிறுமியிடம் யோகேஸ்வரன், "பபி, அப்பாவைச் சந்திக்க வந்தனாங்கள். அப்பாவும் அம்மாவும் வருகினமோ?" என்று கேட்டுக்கொண்டு இருக்கும் போதே அருகில் வந்த ரீச்சர் "நீங்கள் வருவீங்கள் என்றதைத் தோழர் சொன்னவர் இப்ப வந்துவிடுவார். வீட்டுக்குப் போவோம்" என அழைத்துச் சென்றார். ஊர்க் கதைகள் பேசிக் கொண்டு இருக்கும் போது தோழர் வந்து சேர்ந்தார்.

எங்களூரில் எனக்குத் தெரியாதவர்களைக் கூட அறிந்து வைத்திருக்கிற அளவில் ரீச்சரின் விசாரிப்புகள் தோழரின் வருகைக்கு முன்னதாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. புதிய வளவொன்று கல்லுத் தரை யுடன் பற்றைகளும் பீங்கான்களும் நிறைந்துள்ளதை வீடு கட்ட ஏற்ற வளவாக்க வேண்டி இருக்கிறது, எனக் கூறி அவற்றைச் செய்து வந்த களைப்பைக் காட்டாமலே வந்தவர்களை உபசரித்துத் தேநீர் தந்து, கிடைக்கும் கணப்பொழுதுகளில் கதைகள் பல பேசித் "தோழரை இன்னும் காணவில்லையே" என்ற ஏக்கம் எம்மைத் தொற்றுவதற்கு இடந்தராமல் பரபரப்பாக்கிய வண்ணம் இருந்த ரீச்சர், மணியம் தோழரைத் தாங்கி நிற்கும் பலமான தூண் என்பதனை முதல் சந்திப்பிலேயே உணர்த்தினார்.

"அவர் கட்சி வேலையென்று ஒவ்வொரு நாள் பொழுது விடிஞ்ச கையோடை கிளம்பிவிட்டால் பொழுது சாய்ஞ்சு இருட்டின பிறகு தான் திரும்புவார். இன்றைக்கு நீங்கள் வரக்கூடும் என்று சொன்னதாலை கனத்த இருட்டுக்கு முன்னமே வந்துவிடுவார்" எனச் சொல்லிக் கட்சி முன்னெடுத்த போராட்டங்களில் மணியத்தார் வாங்கிக் கட்டிய வீரத்தழும்புகள் பலதை யும் சொன்னவாறிருந்தார். முன்னதாக ஊர்க் கதைகள் பேசிக்கொண்டு இருந்தபோது வராதிருந்த தோழர் அவரைப் பற்றி விலாவாரியாகச் சொன்னபோது வந்தார். சைக்களை நிறுத்தியவாறே "என்ன தேர்தல் பிரசாரம் செய்யிறீங்களோ" என்று இணையரைச் சிரித்துக்கொண்டே கண்டித்துக்கொண்டு எங்களை வரவேற்றார். அந்தக் கண்டிப்பைக்கூட மனங்கோணாத வகையில் முன்வைக்க அவருக்கு இயலுமாக இருந்தது. முன்னெடுக்கப்படவை எவையும் தனது பணிகள் என்றில்லாமல் கட்சியின் சாதனைகள் அவை என அனைத்தையும் பொதுமைப்படுத்தி முன்வைக்கும் இயல்பான பாங்கினை அந்த முதல் சந்திப்பிலேயே கண்டுணர்ந்தேன். "மேலெழுந்து வரும் களமொன்றில் அவசியப்படும் பணிக்குரிய சரியான மார்க்கம் செயலுக் குத் தூண்டி இயங்க வழிப்படுத்தியது, அவற்றை நிறைவாக்கிய தனியாளாக எனது சாதனை அது என்று எப்படி உரிமை கோர இயலும்" என்ற புரிதலைத் தொடக்கி வைத்தவர் எனக்கான சரியான மார்க்கத்தில் பயணிக்கும் முதல் களத்துக்கான அரிச்சுவடியை ஆரம்பித்து வைத்தார்! புதிய பள்ளியின் படிமுறை விருத்தி இனி வளரும்!

# நீ வருவாயென...

செய்னுலாப்தீன் நஸீரா.
ஏறாவூர்

எத்தனை இன்பமாய்
என்னுடன் மகிழ்ந்தாய்.
மொத்தமாய் முகமதில்
மலர்ந்தே கிடந்தாய்.

இன்புற்றே உன்னிலே
என்றுமே பதிந்தேன்
கண்துஞ்சும் வேளையும்
கலந்தே மகிழ்ந்தேன்.

கழுத்திலும் மார்பிலும்
தழுவியே சுகித்தேன்
விழித்ததும் எனில்நீயும்
இலயித்ததும் மறவேன்.

இரவிலும் பகலிலும்
உன்னிலே புரண்டேன்
மறைவிலும் எனைநீ
மகிழ்வுடன் ரசித்தாய்.

முகம்காட்டும் கண்ணாடி
முன்னாலும் நின்று
மகிழ்வாக எனையே
வருடியே முகர்ந்தாய்.

முடையொன்று உனக்கும்
முந்தியே வந்ததோ
அடகுக்குள் எனையே
அடக்கிட நினைத்தாய்.

உதவிட யாருமே
உலகிலே இலையோ
புதருக்குள் எனையே
பூட்டிட முனைந்தாய்.

அழகுக்கு உந்தன்
கழுத்தினில் தவழ்ந்தேன்
அழுகையும் கண்ணீரும்
அரும்பிட அடைத்தாய்.

பையிலே சுருட்டிப்
போட்டெனை மடித்தே
வைப்பக இரும்புவெஞ்
சிறையினில் அடைத்தார்.

என்றுனைப் பணமும்
நெருங்கும்நாள் வருமோ
என்றுமே நிதமும்
ஏங்கியே நொந்தேன்.

பொன்னான வுன்றன்
வெண்சங்குக் கழுத்தினில்
மின்னிடும் நாளும்
மீண்டு வராதோ..?

வந்துமே எனையும்
மீட்டெ டுப்பாயோ
வெந்துமே சிறையில்
வாடுகிறேன்
நீ வருவாயென...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வெற்றி - வெற்றி"

நடராசா சிறிரஞ்சன்

இருவர் விளையாடி இருவருமே வெற்றி பெறக்கூடிய ஒரே விளையாட்டு காதல்தான் என்றதொரு பொன்மொழி உள்ளது. அது காதலில் மட்டும்தான் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் வணிகத்தில் வெற்றி-வெற்றி ஒப்பந்தம் என்றதொரு கருத்தியல் உண்டு.

வாடிக்கையாளர் பொருளொன்றை வாங்கி நுகரும்போது, அவருக்குக் கிடைக்கும் திருப்தி அல்லது உணரப்பட்ட பெறுமதி, அவர் அப்பொருளுக்குச் செலுத்திய விலையிலும் பார்க்கக் கூடுதலாக இருந்தால் அக்கொள்வனவில் அவர் திருப்தி கொண்டவராகிறார்.

மறுபக்கத்தில் விற்பவரின் கண்ணோட்டத்தில், அப்பொருள் விற்பனையின் மூலம் அவர் ஈட்டிய பணமானது அப்பொருள் தொடர்பில் அவருக்கு ஏற்பட்ட கிரயத்திலும் பார்க்க அதிகமாக இருப்பின் அவ்விற்பனை தொடர்பில் வணிகரும் திருப்தி கொண்டவராகிறார். இது வெற்றி-வெற்றி ஒப்பந்தம் எனப்படுகிறது.

எவ்வாறெனிலும் இந்தக் கோட்பாட்டை தனியே கிரயம்-விலை, விலை-பெறுமதி என்ற விடயங்களுக்குள் முடக்கி விடாது ஆழமாக நோக்குதல் வேண்டும்.

இங்கு பொருளின் கிரயம் என்பது இலகுவாகக் கணிக்கக் கூடியது. ஆனால் அப்பொருளைக் கொள்வனவு செய்து நுகரும் வாடிக்கையாளருக்கு ஏற்படும் உணரப்பட்ட பெறுமதியைத் துல்லியமாக கணித்தல் கடினமானதாகும். உணரப்பட்ட பெறுமதி வாடிக்கையாளருக்கு வாடிக்கையாளர் வேறுபடலாம்.

பெறுமதி, பயன் என்பவை குறிப்பிட்ட பொருளை நுகரும்போது ஒருவருக்கு ஏற்படும் திருப்தியுணர்வு என்பதற்கு அப்பால் வேறும் பல்தரப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாகும். உதாரணமாக உணவுப்பொருள் ஒன்றை நுகரும்போது அவர் உணரும் அதன் சுவை என்பதற்கு அப்பால், அது அவரது உடலிற்கு ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது போன்ற விபரங்களும் கருத்தில்கொள்ள வேண்டியவையாகும். வாய்க்குச் சுவையாக இருக்கும் உணவுப்பொருள் அவரது உடலிற்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிதல் முக்கியமானதாகும்.

உணவும் சுவையாக இருந்து அது ஆரோக்கியத்திற்கும் சிறந்தது எனில், அங்கு கொள்வனவாளர் இரண்டு வெற்றிகளை அடைகிறார். இங்கு விற்பனையாளருக்கு ஒரு வெற்றி கொள்வனவாளருக்கு இரண்டு வெற்றிகள். விற்பனையாளர் கர்மக்கோட்பாட்டில் நம்பிக்கை உள்ளவரெனில் அவருக்கும் இரண்டு வெற்றிகள். ஏனெனில் அவர் ஒரு ஆரோக்கிய பானத்தை விற்று அதனூடே ஆரோக்கிமான சமூகமொன்றை உருவாக்கும் புண்ணிய கருமம் ஒன்றைச் செய்தவராகிறார். ஆகவே இரண்டு சாராருக்கும் இவ்விரண்டு வெற்றிகள் கிடைக்கின்றன.

சாதாரண உணவுப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் மதுபானம் முதலியவை அதிக திருப்தியைத் தருபவையாக சில நுகர்வோர் உணரக்கூடும். எனவே நுகர்பவரின் கண்ணோட்டத்தில் அது பாரியதொரு வெற்றி யுணர்வைக் கொடுக்கும். இந்நிலையில், அதன் விலை எவ்வளவு உயர் வானதெனினும், அதைவாங்கிப் பயன் படுத்தும் அவா அத்தகைய நுகர்வோர் களிடையே காணப்படும். அதனால் விற்பனையாளர் கூடியவிலைக்கு விற்று கூடிய இலாபம் எடுக்கக்கூடியவராக இருப்பார். எனவே வெற்றி – வெற்றி என்பது இங்கும் இருக்கின்றது. ஆனால் மதுபானம் நுகர்வோரின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்பதால் அங்கு தோல்வி ஒன்றும் அதற்குள்ளே மறைந்துள்ளது. அது அவரது ஆரோக்கிய நோக்கில் தோல்வியாகும். அதேபோல் அவரது குடும்பத்தவர்களது நோக்கிலும் தோல்வியாக அமையலாம்.

இவ்வாறானதொரு பின்னணியில் இக்கோட்பாட்டை தனியே விற்பனையாளர், நுகர்வோர் ஆகியோரது நோக்கில் மாத்திரம் பார்க்காது, குறிப்பட்ட வர்த்தகப் பரிமாற்றத்தால் குடும்பத்திற்கு, சமூகத்துக்கு, அரசிற்கு மற்றும் நாட்டிற்கு ஏற்படும் விளைவுகளையும் எடுத்து நோக்குதல் வேண்டும்.

ஒருவர் உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு பொருளொன்றை உற்பத்தி செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வாராயின் அதில் பல வெற்றிகள் அடையப்படும். உள்ளூரில் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதால் மக்களுக்கு வருமானம் கிடைக்கும். அது அவர்களது நோக்கில் "வெற்றி" ஆகும். அப்பொருட்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், நாட்டுக்கு அந்நியச் செலாவணி வருமானம் கிடைக்கப்பெற்று நாட்டின் பொருளாதாரம் மேம்படும். இது மற்றொரு "வெற்றி" ஆகும். இது போன்று வெவ்வேறு கோணங்களில் இதனை விரிவுபடுத்திச் செல்லலாம்.

எனவே, இந்த வெற்றி-வெற்றி என்ற கருத்தியலை நாம் மேலும் விரிபுபடுத்திச் சிந்திக்கும் போது பற்பல வெற்றிகள் ஈட்டப்பட்டு பல்தரப்பட்ட நன்மைகள் அடைய முடியும்.

அத்துடன் தனியே இதனை வெற்றி வெற்றி என்ற கோணத்தில் மட்டும் நோக்காது குறிப்பிட்ட செயற்பாட்டினால் "தோல்வி" நிலமை ஏதாவது உள்ளதா என்பதையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். உதாரணமாக மேலே குறிப்பிட்ட ஏற்றுமதிக்கான உற்பத்தி நடவடிக்கையின் போது வெளியேற்றப்படும் கழிவு முதலியவற்றால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுமாயின் அதுவொரு "தோல்வி" நிலையாகும். எனவே இவ்வாறன விடயங்களும் கருத்தில் கொள்ளப் படல் வேண்டும்.

அவ்வாறு பல்தரப்பட்ட நோக்கில் இந்தக் கருத்தியலை எடுத்துச் செல்வதன் மூலம் நற்பயன் தரும் முயற்சிகளை அடையயாளம் கண்டு, அவற்றை மென்மேலும் விரிவுபடுத்தி சமூகத்தையும் நாட்டையும் நீண்டு நிலைத்து நிற்கக்கூடியதொரு அபிவிருத்திக்கு இட்டுச் செல்லலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

6

# ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும்



ஆளுமை ஒன்று எவ்வாறு உருவாகி, மெல்ல மெல்ல மாற்றமடைந்து, நடத்தைக்கோலங்களில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை ஆளுமை கொள்கைகள் விளக்க முற்படுகின்றன. உள இயக்கக் கொள்கை, பெறப்பட்ட விசேட பண்புகளின் கொள்கை, மனிதாயவாதக் கொள்கை, நடத்தைக் கொள்கை, உயிரியல் கொள்கை, சமூக அறிகைக் கொள்கை என இவை பல வேறு பிரிவுகளில் வகுக்கப்படலாமாயினும் எல்லாக் கொள்கைகளிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க சில உண்மைகளாவது இருக்கத்தான் செய்கின்றன. ஒவ்வொரு கொள்கையும் ஒவ்வொரு குறிப்பிட்ட வகுதியை முக்கியத்துவப் படுத்தினாலும் எல்லாக் கொள்கைகளுமே ஆளுமை என்பது பரம்பரை அலகு ,ஆழ்மன உந்தல்கள், வாழ்வின் மிக ஆரம்பகால அனுபவங்கள், கற்றலின் பேறு, சூழல் காரணிகளின் தாக்கம் போன்ற பல விடயங்கள் சேர்ந்து குறிப்பிட்ட நபருக்கும் சூழலுக்கும் இடையில் இடம்பெறும் இரு திசைப் பயன் விளைவுதான் என்பதை ஏற்றுக்கொள்கின்றன.

அல்பேர்ட் பண்டுரா என்பவர் கனேடிய அமெரிக்க உளவியலாளர். அவரது சமூக அறிகைக் கொள்கையின் முதற்பகுதி மற்றவர்களைப் பார்த்துக் கற்றல் பற்றிப் பேசுகிறது. ஒருவரது வாழ்வின் மிக அதிகமான நடத்தைக்கோலங்கள் "போலச் செய்தல்" என்ற வகைக்குள் வருகின்றன என்பது எமக்குத் தெரியும். யாரோ ஒருவரைப்பார்த்துத்தான் பல் மினுக்கக் கற்றிருப்போம். தலைவாரப் படித்திருப்போம். சேலை உடுப்பது எப்படி, வேட்டி கட்டுவது எப்படி என்று யாரையோ பார்த்தோம்தானே! (இப்போது அழகுக் கலை நிலையங்களில் சேலை உடுக்கப் பயிற்சி கொடுக்கிறார்கள் அல்லது வேட்டியை அப்படியே "ரெடி மேட்டாக" வைத்து ஒட்டி விடுகிறார்கள் என்பது வேறு )எமது வாழ்வில் போலச்செய்தல் ,மாதிரியாகக் கொள்ளுதல், மீள வலியுறுத்தல் ஆகிய மூன்று விடயங்களும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. ஆயினும் மாந்தர்கள் காண்பவை, கேட்பவை, சுவைப்பவை எல்லாவற்றையும் போலச் செய்வதில்லை. செய்யவும் முடியாது. சேலை உடுத்தவர்களைப் பார்த்தவர்கள் அனைவரும் சேலை உடுப்பதில்லையே! ஒருவருடைய செயற்பாடு மற்றவரின் கவனத்தைப் பெற வேண்டும். அவருடைய நடத்தையைப் பின்பற்றுவது நன்மை தரும் என்ற நம்பிக்கை வரவேண்டும். அத்துடன் பார்த்தவுடன் அல்லது கேட்டவுடன் இந்தப் போலச் செய்தல் நடைபெறவேண்டும் என்பதுமில்லை. சில வேளை அது பலவருடங்களின் பின் இடம்பெறலாம். அதுவரை அந்தவிடயம் மூளையில் ஒரு பிடிமானத்தோடு தக்கவைத்திருக்கப் பட வேண்டும். ஏதோ ஒரு குறியீட்டு வடிவில் சேமித்து வைத்திருக்கப்பட வேண்டும். இலகுவில் மீளெடுக்கத்தக்க வார்ப்புரு வடிவில் அது சேமிக்கப்படுகிறது என்று நரம்பியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

எமது கலாசாரத்தில் குரு சிஷ்ய பரம்பரை இப்படித்தான் வளர்ந்தது. குருவைப் பார்த்தே சிஷ்யர் பல விடயங்களை உடனேயோ அல்லது பிற்காலத்திலோ செய்வார். அவரைப் போலச் செய்யவேண்டும் அல்லது அவரைப் பார்த்துப் பின்பற்றவேண்டும் என்று சிஷ்யர் நினைத்ததற்குப் பல காரணிகள் இருந்திருக்கும். புத்தபெருமானைப் பார்த்தவர்கள் எல்லாரும் துறவியாகவில்லை. இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பார்த்தவர்களில் விவேகானந்தரிடம் பெரிய மாற்றம் ஏற்பட்டது. "கடவுளைக் கண்டீர்களா?" என்ற கேள்விக்குப் பரமஹம்சர் சொன்ன பதிலில் அந்தக் கவர்ச்சி இருந்தது. பரமஹம்சரைப் போலாகிச் செய்ய விரும்பிய விவேகானந்தர் குருவை மிஞ்சிய சிஷ்யர் ஆனார். வேறு கலாசாரங்களிலும் இது போன்ற பின்பற்றுகைகள் மிகத்தாராளமாக நடைபெற்றிருக்கின்றன.

சோக்கிரடீசின் புகழ் பூத்த மாணவர் பிளேட்டோ பிளேட்டோவின் பெருமைக்குரிய மாணவர் அரிஸ்டோட்டில் இந்த மூன்று கிரேக்க தத்துவ ஞானிகளும் தமது ஒத்த செயற்பாடுகளால் உலகையே வடிவமைத்தவர்கள் எனலாம். இவர்களுக்கிடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த முக்கிய ஒற்றுமை என்னவெனில், நேர்மை, துணிவு, நிதானத்துடன் கூடிய தன்னடக்கம் ஆகியவை ஒரு மனிதரின் மிகச் சிக்கலான, அறிவுபூர்வமான, சமூகத்திறன்கள் என்பதைப் புரிந்து கொண்டு ஒருவர் வாழ்ந்து காட்டிடத் தொடர்ந்து வந்தவர்கள் பின் பற்றியமையேயாகும். "வாழ்க்கைப் போரில் ஏற்படும் பெரிய வெற்றி என்பது நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு வரிடமும் கருணையுடன் நடந்துகொள்வதே" என்றார் சோக்கிரடீஸ். தனது கற்பித்தலின்மூலம் இளைஞர் களைக் கெடுக்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட சோக்கிரடீஸ் அங்கு வைத்து நஞ்சு அருந்துமாறு வற்புறுத்தப்பட்டுக் கொல்லப் பட்டார். அதற்கு முன் சிறையில் இருந்து தப்பிச் செல்ல ஒரு சந்தர்ப்பம் வந்தபோதும் அவர் அதைச் செய்ய வில்லை. அதுவே அவரது கொள்கை வழி வாழ்வுக்கான மிகப் பெரும் சாட்சி. சோக்கிரடீசின் மரணம் தொடர் பான மிக உணர்ச்சிபூர்வமான ஓவியம் ஒன்றை 1787இல் வரைந்தார் ஜேக்ஸ் லூயிஸ் டேவிட் என்ற பிரெஞ்சு ஓவியர்.

"கல்வி என்பது சரியானதைப் பின் பற்றுவதற் கான விருப்பம்" என்றார் பிளேற்றோ .எமது நாட்டில் இன்றும் பிளேற்றோவின் கல்விக் கொள்கையை எல்லா ஆசிரியர்களும் படிக்கிறார்கள். சரியான வாழ்வு எது என்று அறியும் ஆவலோ அல்லது சரியானதைச் சரியான முறையில் பெற்றுக்கொள்ளும் விருப்பமோ எத்தனை பேருக்கு வந்தது என்று தெரியாது. ஒரு ஆசிரியரிட மாவது வந்தால் அங்கிருந்து ஒரு மாணவரிடமாவது செல்லும். அதுவே பெரிய விடயம். "கல்வி பெற்ற மனம் என்பது ஒரு எண்ணத்தை ஏற்றுக்கொள்ளாமலே அதைப் பொழுதுபோக்காக வைத்துத் தாலாட்டிக் கொண்டிருக்கும்." என்றார் அரிஸ்டோட்டில். அந்த எண்ணத்தை ஏற்றுக்கொள்ள முதல் அல்லது ஏற்றுக் கொள்ளாமல் விடமுதல் அதைப்பற்றி நிறையவே ஆராயும் எனபதே அதன் விளக்கமாகலாம். இரு வழிக் கலந்துரையாடலே சோக்கிரடீசின் கற்றல் கற்பித்தல் முறை. ஒவ்வொரு விடயத்திற்கும், "ஏன்? இப்படி இருந் தால் என்ன?" என்பன போன்ற கேள்விளைக் கேட்பதும் அவற்றுக்கு விடை காண்பதுமே கற்றல் என்பது அவரது கருத்தாக இருந்தது .அக்கருத்தினால் மிகக் கவரப்பட்ட பிளேட்டோ ஒரு நிலையில் தன்னைப்பற்றிக் கூறுகையில் "இங்கு பிளேற்றோ என்று யாரும் இல்லை. இது மீள்பிறந்துள்ள சோக்கிரடீஸ்" என்றார். அந்த அளவுக்கு அவரது பின்பற்றல் அமைந்தது. இந்தப் பரம்பரையில் மூன்றாம் தலைமுறையாக வந்தவராகிய அரிஸ்டாட்டிலை மாவீரன் அலெக்சாண்டர் தனது குருவாகக்கொண்டான். இன்றும் நாங்கள் இவர்களைப் பற்றிப்பேசுகிறோம்.

இந்து சமயத்திலே புறச் சந்தான குரவராகிய மெய்கண்டதேவர். அருணந்தி சிவாச்சாரியார், மறை ஞான சம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார் ஆகியோரை யும் இவண் வைத்து நோக்கலாம். மெய்கண்டதேவர் சிவஞானபோதம் எழுத, அவரது மாணவராகிய அருணந்தி அதைப் பின் பற்றிச் சிவஞான சித்தியார் எழுதினார்.

பார்த்தாகிவிட்டது. மூளையில் சேமித்தாகி விட்டது. இனி அதனைப் பெருக்கம் செய்யவேண்டும். தசைகளினூடு அது புதிதாகப் பிறக்கவேண்டும். விருப்பம் இருந்தாலும் அந்த நடத்தையைச் செய்வதற் குரிய இயலுமையும் இருக்கவேண்டும் .சிலவேளை நாம் செய்யவிரும்புவோம். ஆனால் செய்ய முடிவதில்லை. அவர் 90 வயதுக்கிழவி. தில்லானா மோகனாம்பாள் திரைப் படத்தில் வரும் பத்மினியின் நடனத்தைப் பார்த்தார். அந்த ஆட்டத்தில் அவருக்கு நல்ல விருப்பம். ஆயினும் அவ்வளவு வேகமான, பல உறுப்புகள் ஒருங்கிணைந்த நடனத்துக்கு அவரின் மூளையும் தசைகளும் ஒத்துழைக்காது. மிக இளமையில் இருந்து விடாத தொடர் பயிற்சி வேண்டும். ஒலிம்பிக் வீரன் போல் ஓடவேண்டும் என்று நாம் நினைத்து விட்டால் போதுமா? இந்த இயலுமையும், இயலாமையும் எமது தீர்மானம் எடுத்தலைப் பாதிக்கும்தான். மனதினுள்ளே கற்பனையில் செய்து பார்க்கலாம். வெளியே யதார்த்த மாகச் செய்யமுடியாதிருக்கலாம் .மறுதலையாகக் கொஞ்சம் முயன்றால் முடியுமான ஒன்றை முடியாதென நினைப்பவர்கள் பலர்

இதற்கு அடுத்த படிநிலைதான் மீளவலியுறுத் தல். குறித்த நடத்தையை மற்றவர்கள் பாராட்டும்போது அது மீளமீளத் திருப்பி நிகழ்த்தப்படுவதற்கும், தண்டனை பெறும்போது ,கிண்டல் செய்யப்படும் போது அல்லது கவனிக்கப்படாது விடப்படும்போது மெல்ல மெல்ல மறைந்துபோவதற்கும் நிகழ்தகவுகள் அதிகம்.

பிள்ளைகள் எவ்வாறு தாம் பார்ப்பதைச் செய்கிறார்கள் என்பதற்கு 1961இல் பண்டூரா செய்த "போபோ பொம்மை"(Bobo Doll)பரிசோதனை மிகச் சிறந்த சான்று. அவர் 72 பிள்ளைகளை ஸ்டான் போர்ட் பல்கலைக்கழக முன்பள்ளியில் இருந்து தெரிவு செய்தார். அவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். முதலாவது பிரிவினருக்கு முன்னால் தினமும் ஒரு ஊதப்பட்ட "போபோ பொம்மை" வைக்கப்பட்டு ஆக்ரோஷமான முறையில் தாக்கப்படும். இரண்டாவது பிரிவினருக்கு முன்னால் அதே பொம்மை அன்புடன் கவனிக்கப்படும் .மூன்றாவது கட்டுப்பாட்டுக்குழு .அங்கு பொம்மைக்கு எதுவும் நடக்காது. சில வருடங்களின் பின் இந்தப் பிள்ளைகள் அவதானிக்கப்பட்டனர். முதல் குழுவில் இருந்த பிள்ளைகள் மத்தியில் வன்முறை அதிகம் வெளிப்படுத்தப்பட்டது. ஆகவே இந்த முன்மாதிரி என்பதும் எதைப்பார்க்கிறோம் என்பதும் மிக முக்கிய மான விடயங்கள் என்பது நிறுவப்பட்டுள்ளது. வன் முறை மிகுந்த திரைப்படங்கள், தொடர் நாடகங்கள், யூ ரியூபுகள் முன் பிள்ளைகள் அமர்ந்திருப்பது எத்தனை வீடுகளில் நடக்கிறது என்பது பெற்றோருக்குத் தெரியும்.

பிள்ளைகள் தமது வாழ்வில் சிலரை முன்மாதிரி யாக எடுத்துக்கொள்வார்கள். இந்த முன்மாதிரி பெற்றோராகவோ, ஆசிரியராகவோ, சக மாணவரா கவோ அல்லது மிகப் புகழ்பெற்ற ஒருவராகவோ இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். மாணவர்களை மாதிரியாகக் கொள்ளும்போது சம வயதினர் ,ஒத்த பாலினர், ஒத்த இனத்தவர், ஒரே மாதிரி ஆர்வ முள்ளவர்கள், ஒரே வகை விழுமியங்களைக் கொண்டவர் களை மாதிரியாகக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். அந்த முன்மாதிரி நிஜத்தில் வாழ்பவராக இருந்தால் அவரைப்பார்த்துச் செய்வதற்குப் பிள்ளைக் குப் பல விடயங்கள் இருக்கும். இல்லாவிட்டால் அவரது செயற்பாடுகளை வாய்மொழி மூலமான அறிவுறுத்தல்கள் மூலம் விளக்கவேண்டும்..

நூல்கள், படங்கள், ஊடகங்கள், காணொளிகள் போன்றவற்றில் இருந்து எடுக்கப்படும் குறியீட்டு மாதிரி மூன்றாவது வகை. முன்மாதிரிகளின் சமூக அந்தஸ்தும் முக்கியந்தான். எமது நாட்டில் -எல்லா நாட்டிலுமல்ல - வைத்தியர்களின் சமூக அந்தஸ்து உயர்வாக இருப்பதால் தான், பெற்றோர்கள் பலரும் பிள்ளைகள் பலரும் கூடத் தாமும் வைத்தியர்களாக வரவேண்டும் என்று மிக விரும்புகிறார்கள். வைத்தியத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட பிள்ளை எங்கே டியூசனுக்குப் போனதோ அங்கே தனது பிள்ளையும் போகவேண்டும் என்று விடாப்பிடியாக நிற்கிறார்கள் .அந்தப்பிள்ளை இரவில் எத்தனை மணிவரை படித்ததோ அத்தனை மணிவரை தனது பிள்ளையும் படிக்கவேண்டும் என்று கட்டாயப் படுத்துகிறார்கள். இரவில் நித்திரை வராதிருந்து படிக்க அந்தப்பிள்ளை ஏதாவது மருந்து மாத்திரை சாப்பிட்ட தாக அறிந்தால் கேட்டுக் கேள்வி இன்றி அதையும் வாங்கிக் கொடுத்துவிடுகிறார்கள். இப்படியும் மருந்து களுக்கு அடிமையாதலும், போதைப்பொருள் பாவனை யும் ஆரம்பிக்கலாம்.

பெற்றோர்களை அல்லது சிறந்த ஆசிரியர் களைப் பிள்ளைகள் முன்மாதிரியாகக் கொள்ளும்போது பெரும்பாலும் நல்ல விளைவுகள் ஏற்படும். மாறாகப் பிழையான அல்லது பொருத்தமற்ற நடத்தைக் கோலங் களைக்கொண்டு சமூகத்தில் அதிகாரம் பெறுபவர்கள், அதிக பணம் பெற்று ஆடம்பரமாக வாழ்பவர்களைப் பிள்ளைகள் மாதிரியாகக் கொள்ளும்போது பெரும் ஆபத்துக்களில் மாட்டிக்கொள்ள நேருகிறது. எமது நாட்டில் இன்று இது அவசரம் தலையிட வேண்டிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மதுப்பாவனையில் அல்லது போதைப்பொருள் பாவனையில் அடிமைப் பட்டுப் போனவர்கள் சிலவேளை மற்றவர்கள் பயப் படும் இடங்களில் துணிவுடன் நடந்துகொள்வது போன்ற மாயத்தோற்றத்தைப் பிள்ளைகள் அவதானிக் கிறார்கள். வாள்களைக்கொண்டு மிக வேகமாக அவர்கள் மோட்டார் சைக்கிள்களில் வீதிகளில் பயணிப் பது ஒருவித கவர்ச்சியை ஏற்படுத்துகிறது சிலருக்கு. திரைப்படக் கதாநாயகர்களின் மற்றோர் வடிவம் நிஜத்தில் காணப்படுவது போல் தோன்றுகிறது. பிள்ளைகள் அவர்களை அணுகி நட்புக் கொள்கிறார்கள். பின் அவர்களின் நடத்தைக்கோலங்களைப் பின்பற்றத் தொடங்குகிறார்கள். வீதியில் மிக வேகமாகப் பயணிக்கும்போது தென்திசை அதிபர் தமக்குப் பின்னல் வந்துகொண்டிருப்பதை அவர்கள் உணருவதில்லை. இந்த நடத்தை சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்கும் ஆபத்தானதாக மாறுகிறது.

கட்டிளமைப் பருவத்துக்கு முன்பின்னாக ப் பெற்றோரும் ஆசிரியர்களும் பிள்ளைகளோடு கலந்துரையாடும்போது அவர்கள் யாரை மாதிரியாகக் கொள்கிறார்கள் என்பது பற்றிப் பேச வேண்டும். அவர்கள் சுய செயல்திறன் மிகுந்தவர்களாக வரவேண்டு மெனில் சரித்திரத்தில் மிகப்பெரும் அறிஞர்களாக, விஞ்ஞானிகளாக, எழுத்தாளர்களாக, கலைஞர்களாக, ஆன்மிகத் தலைவர்களாக வந்தவர்களின் சாதனைகளை மட்டுமல்ல அவர்கள் சந்தித்த சவால்களையும், சவால் களை வெற்றிகொண்ட வழி களையும் கூட வாசித்து அறியும்படி பிள்ளைகளை ஊக்கப்படுத்தவேண்டும்.

பண்டூராவின் கொள்கையில் "எதிரீடான நிர்ணயம்" என்ற கருத்துநிலை மிக முக்கியமானது. தனி மனிதர் ஒருவருடைய எண்ணங்கள், உணர்வுகள், இலக்குகள் ஆகியவற்றோடு சூழலும், அவரது நடத்தை யும் எப்போதும் தாக்கமும் எதிர்த் தாக்கமும் நடத்திக் கொண்டேயிருக்கும் என்பதை இந்தப்படம் நன்கு விளக்கும்.




குறிப்பிட்ட ஒரு நடத்தை பின்பற்றப் படவேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் அறிகைக்கூறுகள் வலிமையாக ஆட்சி செலுத்துகின்றன என்பதை இக்கொள்கை வலியுறுத்துகிறது.

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

- தொடர்ந்து பேசுவோம்





நூல் - வியாக்ரன்

ஆசிரியர் - இ.சு. முரளிதரன்

வெளியீடு - ஜீவநதி காமிக்ஸ்

விலை 300.00





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2

*38*

மாங்குளத்தின் அலைகரைப்பிரதேசம் பெருங் காடாவிருந்தது. அந்த காட்டின் ஒரு பகுதியை வெட்டி சண்டிலிப்பாய் சங்கானைப்பிரதேசங்களி லிருந்து இடம்பெயர்ந்த வசதியற்ற மக்களை குடியேற்றி னார்கள் இந்த வேலையை கடைசிவரை சங்கானைப் பொறுப்பாளராக இருந்த வெண்ணிலவன் பொறுப் பெடுத்து செய்து கொண்டிருந்தான்.

வேலைகளில் அனுபவம் வாய்ந்த பெரியவர் களும் இளைஞர்களும் அங்கே இருந்தனர். அவர்களை நாடி தனது வேலைகளை செய்ய அழைத்தாள். அவர் களில் குறிப்பிடும்படி ஒருவர் இருந்தார் பெயர்கூட கந்த சாமி என நினைவிருக்கிறது. அவர் முன்னர் மணலாற் றில் குடியிருந்து சிங்களக் காடையரை எதிர்த்து சண்டை யிட்டதில் பாரிய காயமடைந்தவர். அந்த பழைய குடி யேறிகளைப்பற்றி இப்போது பேசினாலும் உணர்ச்சி வசப்படுவார். பண்டைய கட்டுமான வேலைகளில் அனுபவம் உள்ளவர்களாக இருந்தார்.

கந்தசாமி பத்துக்கிலோ சர்க்கரையை பெரலில் போட்டு காச்சி அதை பாகு பதமாக்கி அந்த நீரில் சுண்ணாம்பைக் கரைத்து கட்டடத்தை கல்லடுக்கி அந்த சுதையில் இறுக்கினார். இதற்காக சர்க்கரையும் சுண்ணாம்பும் வாங்கி சேர்த்தார்கள். அநேக மக்கள் சுண்ணாம்பு உற்பத்தியில் ஈடுபட்டனர். சிப்பிகளி லிருந்து எடுப்பதல்ல போறணை கட்டி அதில் கருங்கற் களைப்போட்டு எரித்து வெப்பத்தில் நீறாக்கி இடித்து செய்யப்பட்டது. இந்த கற்கள் பழைய புகையிரதப் பாதையில் அள்ளி எடுக்கப்பட்ட சரளைக்கற்கள்தான் தண்டவாளங்களை கழற்றி கட்டடங்களுக்கு தூணாக பயன்படுத்தினார்கள். சிலிப்பர்கட்டைகள் விறகாக வும் பங்கர் கூரைகளாகவும் மாறின. கற்கள் சுண்ணாம் பாகின. இவற்றில் பொதுமக்களில் பலர் அதன் ஆணிகள் தட்டை இருப்பச்சுகள் என்பவற்றைமுறிகண்டி மாங்குளம் புளியங்குளம் என இவற்றை செய்பவர்களும் இருந்தனர் இந்த சுண்ணாம்புத்தூசியால் குடியிருக்க முடியவில்லை என குறைப்பட்டுக் கொண்டோரும் இருந்தனர். எப்படியோ மக்களின் வாழ்வாதாரமா இந்த தொழில்கள் உருவாகியிருந்தன.

இப்படியாக ஒரு கல்வீடு முகாமாக கட்டப் பட்டது. இந்த வேலை முடிவதற்குள் போராளிகள் தங்கவென இன்னுமொரு மண்சுவர்வைத்த கொட்டகை ஒன்றையும் கட்டிவிட்டாள் லெச்சிமி. அழகான அந்த சிறிய கொட்டகை அறை ஒன்று கதவுபோட்டும் வெளி மால் ஒன்றும் கொண்டதாக அமைந்தது. அதைப் பார்த்த தணிகைச்செல்வி "அன்ரீ சுப்பரன்ரீ பக்கத் திலயே ஒரு கிச்சினும் போடுங்க" என்றாள். இந்த கட்டுமானப்பணிகள் முடிந்துவிட ஒரு மாதமானது.

திடீரென கிளிநொச்சிக்குள் எறிகணைகளும் விமான தாக்குதல்களும் அதிகரித்தன. மருத்துவப் பிரிவின் பெண்போராளிகள் தமது உடைமைகளுடன் வந்து சேர்ந்தனர். அவர்களது முகாமே முதலில் தாக்குதலுக்குள்ளானது என்றாலும் குறி தவறிவிட்டது. அடுத்து புலிகளின்குரல் வானொலி தாக்குதலுக்கு முன்பே தனது பாதி அலுவல்களை மாங்குளத்தில் கொண்டு வந்து போட்டிருந்தது.

லெச்சிமி அமைத்த கட்டடத்துக்குள் கிளி நொச்சி அரசியற்றுறை மகளிர் குடியேறினர். அவர்களது கிளிநொச்சி முகாமை படையணிப் போராளிகள் பிடித்துக் கொண்டனர். கிளிநகருக்குள் படையணிப் போராளிகள் நிறைந்தனர். பூநகரி உமையாள்புரம் பகுதி களூடாக அரசபடைகள் முன்னேறின. கிளிநகரை அரசபடைகள் கைப்பற்றினர். எனினும் இரணைமடு ப்பகுதி போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைவீதியில் முரசு மோட்டைவரை அதாவது கோரக்கன்கட்டுவரை போராளிகள் நின்றாலும் பொதுமக்கள் இடம் பெயர்ந் தனர். புதுக்குடியிருப்பு, ஸ்கந்தபுரம், அக்கராயன், மல்லாவி என்பன பெருநகரங்களின் இடத்தை பிடித்தன. அதேபோல மன்னார் முழங்காவில் விடத்தல்தீவுவரை போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. மக்கள் மல்லாவிக்கும், புளியங்குளம் ஓமந்தைக்கும் புதுக்குடி யிருப்புக்கும் கிழக்கே செம்மலை வரையிலும் சிற்றூர்தி கள் மக்களுக்காக ஓடின. என்றாலும் பல வருடங்களாக திருத்தப்படாத தார்வீதியும் உழவுயந்திரங்கள் செல்வ தற்காகவே அமைக்கப்பட்ட வயற்பாதைகளும் பிரதான வீதியாக மாறிய இரணைமடு குளக்கட்டும். பல தடவைகள் வாகனங்களை இடறிவிழுத்தியதில் பயண சேவைகளில் கவனம் செலுத்த வேண்டிய கடப்பாடும் வந்தது இரணைமடுக்குளக்கட்டில் பயணிகளை இறக்கியபின்னரே வாகனம் ஏறவேண்டும். இறங்கும் போதும் அதே கட்டுப்பாடுதான்.

புதுக்குடியிருப்பிலிருந்து மல்லாவிக்கு புறப் படும் வாகனம், தர்மபுரம்வரை முல்லைத்தீவு பரந்தன் சாலையில் ஓடி வட்டக்கச்சி வயல்வீதியில் திரும்பி கடசன் வீதிவழியே இரணைமடுவை அடைந்து கட்டில் ஏறி கனகாம்பிகை கோயிலடியாக திரும்பி இரணைமடு ஏநைன் வீதியால் தெற்கே திரும்பி முறிகண்டிவரை வந்து அக்கராயன் வீதியிலும் திரும்பி ஊயிலங்குளம் போகலாம் அதேபோல கொக்காவில் சந்திவரை சென்று ஐயன்கண் குளம் ஊடாக துணுக்காய் மல்லாவியையும் அடையலாம். கோக்காவிலிலும் சரி அக்கராயனிலும் சரி. திடீரென முதுகுத்தண்டை குண்டு துளைக்கும் அபாயம் உண்டு. சில போராளிகள் உயிரை கொடுத்தும் உள்ளனர்.

அன்று வெள்ளிக்கிழமை அரசியற்றுறை யினரின் முக்கிய கூட்டம் புதுக்குடியிருப்பு தீலிபன் முகாமில் நடந்தது. புலிகளின் குரலில் வேலை செய்த லெச்சிமி இப்போது அதில் ஒரு நிகழ்ச்சித்தயாரிப்பாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக மாறியிருந்தாள். எனவே அவளும் போக வேண்டும். மாங்குளத்திருந்து புறப்பட்ட தட்டிவான் ஒன்றில் அவளும் இன்னும் இரண்டு போராளிகளும் ஏறிக் கொண்டனர். அப்போது எதிரே புதுக்குடியிருப்பி லிருந்து வந்துகொண்டிருந்த தட்டிவான்காரர் இந்த வானை மறித்து "ஒட்டிசுட்டான் பக்கம் செல்லடிக் கிறான் பாத்துப் போங்க" என்றார். பொதுமக்களில் சிலர் ஒட்டிசுட்டானில் ஒரு செத்தவீட்டுக்கு போக வேண்டியவர்கள். வான் சாரதி இயக்கத்திற்கு சண்டைக் களத்துக்கு வாகனம் ஓடிய அனுபவத்தில் இருந்தான். "அதெல்லாம் பிரச்சனையில்லை பாக்கலாம்" என்றான். லெச்சிமிக்கு இதுவரை அப்படி செல்லடிக்குள் இருந்த அனுபவம்" இல்லை. எனவே அச்சம் அவளைச் சூழ்ந்தது. "இறங்கலாமா" என்று கூட இருந்த போராளி களை கேட்டாள். "அன்ரீ சனம் போகுது நாங்கள் இறங்கிறதே" என்றாள் ஒருத்தி. தட்டிவான் உறுமிக் கொண்டு பாய்ந்தது என்ற சொல்ல முடியாது காரணம் அந்த வீதி மேடுபள்ளங்களுடன் கற்கள் கிழறப்பட்டு மோசமாக இருந்தது. வான் மட்டும் என்ன மிகப் பழையது. கொட கொடவென ஓடியது. ஒட்டிட்டான் சிவன்கோவிலடியை கடந்து முள்ளியவளை சந்தியை யும் கடக்கும்போது அயல் வளவுகளிலிருந்து மக்கள் பங்கர்களில் ஓடிப்பதுங்குவது தெரிந்தது. வாகனசாரதி இயன்றவரை வேகமாக ஓட ஒருத்தி இறக்கம் என்றாள் வாகனம் நின்றது. அவளுடன் இன்னும் நால்வர் வேக மாக இறங்கினர். வாகனம் வேகமாக நகர்ந்தது. திடீரென அவர்களது இடப்பக்கமாக ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அப்போது ஒருத்தி இறங்கப்போறன் என்றாள் வாகனம் ஏதிர்பாராத வேகத்தில் பறந்து கொண்டி ருந்தது. உள்ளிருந்த யாருக்கும் சமாளிக்க முடியவில்லை வாகனம் துண்டுதுண்டாக பறந்து விடுமோ அன்ற அச்சமே இருந்தது. கட்டைவண்டியைப் போல கலகலத்து ஓடியது வாகனம் உள்ளே அந்தப் பெண் "எடேய் நான் இறங்கவேண்டிய இடம் பங்க போட்டு தடா" என்று கத்தினாள். வாகனத்திலிருந்த அனைவரது உயிரும் ஒடுங்கிக் கிடந்தது.

பேராற்றுபாலம் கடந்தபோது வாகனம் நின்றது. அனைவரது முகங்களும் பீதியில் நிறைந்து கிடந்தது. சாரதி பின்புற ஓட்டைவழியாக உள்ளே பார்த்து "ஆரெணை இறங்கி நடந்து போ... உன்னை இறக்கப்போக வானுக்க உள்ளவை சாகுறதே, நிண்டா செல்லைக் கையில பிடிச்சிருப்பாய்..." கிழவி புறு புறுத்தவாறே இறங்கியது. வாகனம் மிக நிதானமாக ஓடி புதுக்குடியிருப்பை அடைந்தது. லெச்சிமிக்கு சாரதியின் செயல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பொதுமக்களில் ஒருவன் சேவைக்காக களமுனைக்குப் போய் வந்த அனுபவம். தன்னை நம்பி வாகனத்தில் ஏறியவர்களை காப்பாற்றி இருக்கிறான்.

விடுதலைப்புலிகளின் பிரதான முகாம்கள் இரண்டு பிரிவுகளாகியது. மல்லாவிப்பக்கமாக மாங்குளம் புளியங்குளம் மன்னார் வரை ஒரு பகுதியும் செம்மலைமுதல் முரசுமோட்டை முறிகண்டி பூநகரி, அக்கராயன் ஜெயபுரம் முழங்காவில் வடத்தல் தீவுவரை ஒரு பிரிவாகவும் அமைந்தது. ஓமந்தை சோதனைச் சாவடி முற்றாக கைவிடப்பட்டு நகருக்கான பயணம் மன்னார் உயிலங்குளம் வழியாக அமைந்தது.

பிரதேசம் நெருங்க நெருங்க பிரச்சார வேலை கள் துரிதப்படுத்தப்பட்டன. புதிய போராளிகளை சேர்ப்பது மட்டுமல்லாமல் பொதுமக்கள் அனைவரும் போரியில் அறிவுள்ளவர்களாக மாற வேண்டும். எனவே கிராம மக்கள் அனைவருக்கும் சுய பாதுகாப்புக்கான பயிற்சியை வழங்க வேண்டும் என, இயக்கம் முடி வெடுத்தது. இதை தன்னிச்சையாக விட்டபோது மக்கள் முன்வர தயங்கினர். அதுமட்டுமல்ல அவர்கள் இந்த பிரதேசத்தைவிட்டு வெளியேறவே விரும்பினர்.

இயக்கம் கடவுச்சீட்டு முறையை எப்போதோ ஆரம்பித்து விட்டது என்றாலும், கடவுச்சீட்டில்லாமல் கடந்து போக மக்களும் துணிந்து விட்டார்கள் அப்படி சென்று உயிரிழந்தவர்களும் உண்டு. பெரும்பாலும் வியாபாரிகள் பாவித்த கள்ளப்பாதைகளால் மக்களைக் கடத்துவோரும் இருந்தனர் கிளாலி கடற்பரப்பிலும் காட்டு வழிகளிலும் அநேகமான வெற்றிலை வியாபாரிகளே உயிரிழந்தனர். என ஒரு நிர்வாக சேவை அதிகாரியுடன் பேசியபோது லெச்சிமி அறிந்து வியந்தாள்.

*39*

லெச்சிமியின் மகளுடைய குடும்பம் இன்னும் மடுக்குளத்திலிருந்தது. வெளிநாட்டில் வேலை தேடிப் போன மகளும் வந்துவிட்டாள். அவளுக்கு ஒரு ஆண் மகனும் மூன்று பெண்பிள்ளைகளும் இருந்தார்கள். மூத்தவளுக்கு இரண்டும் பெண்பிள்ளைகள்தான். ஆனால் அவர்களுடைய வீடு எல்லையிலிருந்தது. பூவரசன் குளத்திலிருந்து பனங்காமம் வரையான வீதியில் இரண்டாவது மைல்கல்லில் அந்த இடத்தை நாம் முன்னரே பார்த்திருக்கிறோம்.

அங்கே எதிரியின் பிரதேசத்தினுள் வேவுக்கு செல்லும் போராளிகளின் அணியொன்று முகாம் அமைத்துக் கொண்டிருந்தது. அந்த முகாம் அமைக்கும் வனத்தின் முன்பிரதானவீதி அதன் எதிரே இவர்கள் குடியிருந்தார்கள். கிணறு பொருட்களை போட்டு வைக்க வசதியான இடமாக இந்த வீடு இருந்ததால் அவர்கள் அங்கே ஒரு அறையில் தமது உடைமைகளை வைத்துவிட்டு முகாம் வேலையை செய்தார்கள். பூவரசன்குளம் கடந்து குருக்களூரில் மன்னார் வீதியில் மக்களுக்கு பயிற்சி கொடுக்கும் வேலைகள் ஆரம்பித் திருந்தன. இதில் நாற்பத்தைந்து வயதுக்கு கீழ் உள்ள ஆண்கள் அனைவருக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. இந்த பயிற்சி பெறுவோர் "எல்லைப்படையினர்" என அழைக்கப்பட்டனர். ஒரு பழைய போராளி ஒவ்வொரு கிராம படைகளுக்கும் பயிற்சி கொடுத்தார். மாலை மூன்று மணியிலிருந்து ஆறுமணிவரை பயிற்சி. அது என்ன தலைபோகிற வேலை இருந்தாலும் பயிற்சிக்கு போயே ஆக வேண்டும். என்பதால் விரும்பியும் விரும் பாமலும் மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். பயிற்சி முடிந்தபின் மாதத்தில் ஒரு வாரம் அவர்கள் முறைவைத்துக்கொண்டு ஏழு பேர் களமுனைக்கு போக வேண்டும். அங்கே பதுங்குகுழி வெட்ட, சமைக்க, உணவு கொண்டு செல்ல, சென்றி இருக்க என பலதரப்பட்ட வேலைகள் இருக்கும். ஒருவார முடிவில் அவர்களுக்கு உலர்உணவுப்பொதியும் வழங்கப்படும்.

லெச்சிமியின் மருமகனும் இந்தப்பயிற்சிக்காக போய் வந்து கொண்டிருந்தான். அதேசமயம் இராணுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் இந்த நடமாட்டங்களை வேவுக்காக கணித்து வைத்திருப்பான் போலும் எல்லைப்பயிற்சி முடிந்த சில நாட்களான போது இவர்களுடைய வீட்டில் குளிப்பதற் காக வந்துவிட்டு தமது முகாமுக்கு போய்க் கொண்டி ருந்த வேவுப்பிரிவு போராளிகளை, இராணுவத்தினர் மறைந்திருந்து சுட்டுவிட்டு தப்பியோடினர். அதில் இரண்டு போராளிகள் கொல்லப்பட ஒருவன் காய மடைந்தான். எல்லை விட்டேத்தியாக கையில் ரைபிளும் இல்லாமல் இவர்கள் வந்து போனதையிட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். மறைந்திருந்து தாக்கிய இடம் லெச்சிமியும் அவளுடைய மகனும் இறுதியாக குடியிருந்து எள்விதைத்த காணிதான். உடனே அவர்கள் குடியெழும்ப வேண்டியதாயிற்று. போராளிகளே அவர்களது பொருட்களுடன் ஏற்றிக் கொண்டுபோய் போராளிகளால் நடாத்தப்பட்ட பண்ணையில் கொண்டு சேர்த்தனர்.

அது ஒரு பெரிய அரசியல்வாதியின் நிலம். அதை இப்போது இயக்கம் கைப்பற்றி அங்கே தோட்டம் செய்திருந்தார்கள். அதைவிட இரண்டு ஏக்கர். மாமரங்களும் காய்த்திருந்தன.. இவைதவிர பெரிய குளம் அந்த அரசியல்வாதி பதவியிலிருந்த போது தனக்கெனவே வெட்டி கட்டிய மடுக்குளமும் இருந்தது. அதன்கீழ் நூறு ஏக்கர் நெல்வயல்களும் இருந்தன. மலர் என்னதான் ஆபத்து என்றாலும் அந்தக்காணியலில இருக்கும் மரக்கறித்தோட்டத்து வருமானத்தை இழக்க விரும்பாமல் போய் அவற்றை ஆய்ந்து கொண்டு வந்தாள்.. இந்த நிலத்தில் புதிதாக பயிர்களை போட்டு வளர்த்தார்கள். சின்னவளும் இங்கேயே இருந்ததால் ஒரே குடும்பமாக உழைத்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆகாயக்கடல்வெளிச் சமரில் வீரச்சாவடைந்த தன் மகனுக்கு ஆண்டு நினைவு செய்ய வழக்கமாக மகளின் வீட்டிற்கே போவாள். மகனும் தனது படிப்பை முடித்துவிட்டு மன்னாரில் நின்றான் அவனும் அங்கே வருவான் என எண்ணிய லெச்சிமி நேராகவே இரணை இலுப்பைக்குளம் வழியாக கோவில்புளியங்குளம் சென்று வேலன்குளம் போய் மடுக்குள அலைகரை வழியாக அந்த வீட்டுக்கு போனாள். பத்து மணியளவில் மகனும் தனது நண்பர்களுடன் வந்து விட்டான் எனவே சமைத்து படையல் போட்டு எல்லோரும் சாப்பிட்ட பின், வழமைபோல தங்காமல் உடனே கிழம்பினார் கள். மருமகன் "நின்டிட்டு நாளைக்கு போகலாமே" என்றான். இல்ல சுரேசண்ணையக் கேட்டுத்தான் இதுக்கால வந்தநாபங்கள் இண்டைக்கு வேற அலுவலா "கட்டவுட்" போட்டிருக்கினமாம். இரவு எட்டுமணிக் குள்ள போகோணும்." என்றான் சுதன். அப்படியே அம்மா நீங்களும் இதால வாங்கோ" என்றான்.

"அது மடுவுக்கு செல்லும் வழி. மன்னாருக்குப் போக சரி நான் கல்மடுவிற்குப் போய் நொச்சிக் குளத்தால பாலமோட்டைக்குப்போய் அப்படியே பெரியமடு அல்லது குஞ்சுக்குளம் வழியாக மன்னாகுளம் மாங்குளம்." என்று முடித்தாள் லெச்சிமி. மாங்குளம்போக, ஓமந்தை நம்பைக்குளம் பாதையும் சரிதான். ஆனால் சோதனைச்சாவடி இப்போது அங்கில்லை. எனவே அது நெருக்கடிதான்.

"ஆனைக்க மாட்டுப்படப் போறாய்" என்றான்.

"ச்சாக் நான் இரணை இலுப்பைக்குளத்தில பிள்ளையளின்ர பேசில நிண்டிட்டுத்தான் போவன்" என்றாள். அவர்கள் புறப்பட்டுப் போனார்கள்.

ஆனால் அவள் இரணை இலுப்பைக்குளத்தை அடைந்தபோது, மாங்குளம் செல்வதற்காக ஒரு உழவு யந்திரம் பெட்டியுடன் புறப்பட்டுக் கொண்டிருந்தது அவர்களைக் கேட்டு தன் மிதிவண்டியை தூக்கி அதிலே போட்டுக் கொண்டு தானும் ஏறிக் கொண்டாள். அதில் அரிசி மூடைகள் ஏற்கெனவே இருந்ததால் சாவகாச மாக படுத்துக் கொண்டாள்.

நல்ல வேளை நான் பிழைத்துக் கொண்டேன் என்று அவள் சுதாரித்துக் கொள்ள ஒரு நேரம் அது. அவர்கள் புளியங்குளத்தைக் கடந்தபோது இராணுவம் ஓமந்தைப் பகுதியிலிருந்து முன்னேறும் முயற்சி யொன்றை செய்து கொண்டிருந்தான். எறிகணைகள் நம்பைக்குளம் பாதைகடந்து பழைய சோதனைச் சாவடியை நொருக்கி கொண்டிருந்தது. மன்னார் குருக்களூர் பகுதியை ஊடுருவுவான் என எதிர்பார்த் திருந்த போராளிகள் மீண்டும் திரும்பாமல் புதிய தாக்குதலை எதிர்க்கவேண்டியதாயிற்று. இராணுவம் புலிகளின் பழைய சோதனை சாவடியான விளக்கு வைத்தகுளம் வரை வந்து நிறுத்திக் கொண்டான்.

எல்லைப்படைப்பயிற்சியை பெண்களுக்கும் விரிவு படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டாலும் பெண்கள் ஏதாவது சாக்குச் சொல்லி தப்பித்துக் கொண் டார்கள். இப்போது அதற்கென பாரிய பிரச்சாரங்கள் நடத்த வேண்டியதாயிற்று. ஒரு வயதுக்குட்பட்ட குழந்தை உள்ளவர்களும் கர்ப்பவதிகளும் பயிற்சி எடுக்க வேண்டியதில்லை. ஏனையவர்கள் கண்டிப்பாக மாலைநேரம் பயிற்சிக்கு வரவேண்டும். இப்போது பண வசதி சொத்துப்பத்து இருப்பவர்கள் தமது சொத்துகள் அனைத்தையும் புலனாய்வுத்துறையிடம் அல்லது நிர்வாக சேவையிடம் ஒப்படைத்துவிட்டு குடும்பத் துடன் வெளியேறினார்கள். அதைப்பற்றி கேள்வி எழுந்தபோது. "எல்லாம் எங்கட தேவைக்குத்தான் ஒரு காரணமாத்தான் அனுப்பிறம் எல்லாத்தையும் சொல்லிக்கொண்டு செய்ய ஏலாது" என்ற பதில் ஆயத்தமாக இருந்தது.

எல்லைப்படைகளின் சேவைகள் எங்குமிருந்தது பிரசவத்திற்கு தயாராக இருந்த மனைவியை விட்டுவிட்டு களத்துக்கு சென்ற எல்லைப்படை வீரன் மனைவிக்கு பிரசவமானதை கேள்விப்படுகிறான் அவனுடைய சேவை அன்றுடன் முடிகிறது..ஆனால் எங்கிருந்தோ வந்த எறிகணையின் சிதறல் அவன் உயிரைப்பறித்தது. பல தியாகங்கள் அரங்கேறின யாழ்மண்ணிலிருந்து வன்னிக்குள் வந்தமக்கள் பெருமளவு துயரத்தை அனுபவித்தனர்.. அவர்களுடைய வாழ்வாதாரமே காசோலைக்கலாச்சாரம்தானே. இங்கிருந்து அவர்களால் தமது உறவுகளுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. அடிக்கடி நகருக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். நெடுந்தூரம் பயணம்செய்து நகருக்குசென்றார்கள் உயிலங்குளம் தாக்குதலுக்கு இலக்காகவே பள்ளமடு பயணப்பாதையானது.

"ஆன்ரீ வாறீங்களா ஒரு இடத்துக்கு போயிற்று வருவம்"தணிகைச்செல்விதான் அழைத்தாள். எங்கே என்று கேட்காமலே லெச்சிமி புறப்பட்டாள். கூழாமுறிப்புக்கு சற்று மேலே உள்ள குச்சொழுங்கையில் இறங்கிய உந்துருளி நேராக ஒற்றையடிப்பாதையில் போனது. அப்படியே அந்த வழி காட்டுக்குள் நுழைந்தது. ஆனால் அது பிழக்கமற்ற பாதைபோன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தது. நடைபாதைதான். மாடுகள் நடந்திருக்கலாம். ஆனால் மனித நடமாட்டங்களால் தேய்ந்த பாதை. வெறும் காயாக்காடு வெடுக்குநாறிகளும் ஆங்காங்கே கூமா மரங்களும் தென்பட்டாலும் அது அடர்வனமாக இருந்து கீழ்க்காடு வெட்டப்பட்டு பின்னர் கவனிக்கப் படாமல் போயிருக்கிறது என்பதை ஊகித்தாள் லெச்சிமி. தணிகைச் செல்வி ஒரு மர நிழலில் உந்துருளியை நிறுத்திவிட்டு யோசித்தாள்.

"ம்... இதுக்கதான் எண்டு சொன்னாங்கள்" என்றாள்

"என்ன இதுக்கதான்" என்று கேட்டாள் லெச்சிமி.

"ஒரு கைவிடப்பட்ட முகாம்"

"அப்பிடியா என்றவள் சுற்று முற்றும் பார்த்து விட்டு, "எப்பிடியும் இன்னும் ஒரு பத்துப்பதினைந்து ஏக்கர் போகவேணும்" என்றாள்.

" போனா வருமா எப்பிடி" முகாம் போடுறதா இருந்தா குளிக்க முழுக கழுவ துடைக்க சமைக்க கொள்ள தண்ணியும் வசதியா வேணுமெல்லே"

"ஓஒ... ஓ," தணிகைச்செல்வி வேகமாக தலையசைத்தாள்.

"நாங்க கொஞ்சம் மேட்டில நிக்கிறம் பூமி போற சாய்வுக்கு கிட்டவா எங்கயோ நீர்நிலை இருக்கு. அதை மேவித்தான் முகாம் போட்டிருப்பாங்கள்."

"சரி ஏறுங்க" என்றவள் உந்துருளியை இயக் கினாள். ஒரு நூறு மீட்டர் போனதுமே அத்தகைய தொரு இடம் வாய்த்தது. சிதைந்த மண்சுவர்கள், கட்டப் பட்டபரண்கள். உடைந்த பானைசட்டிகள். இன்னும் கிழிந்த துணிகளும் கூட. "பெடியளின்ர முகாம்" என்று லெச்சிமிகூற, "மாத்தையாண்ணையின்ர"என்றாள் தணிகைச்செல்வி. "ஒரு ரெயினிங் பேஸ் போடப் போறன் இதுக்க," லெச்சிமி சிரித்தாள் "அது சரிவராது". என்றாள். இதுக்க எங்கயும் மிதிவெடியள் போட்டிருப் பாங்கள் " பயிற்சிகுடுக்க சரியா வருமா" என்றாள்.

"எல்லாம் கிளியர் பண்ணித்தான் செய்வம்" என்ற தணிகைச்செல்வி சரி போவம் என்றவாறே திரும்பினாள்.

ஏன்னண்டு அன்ரீ இப்பிடி கண்டு பிடிக்கிறியள் உங்களோட சும்மா திரிஞ்சாலே எவ்வளவு விசயம் வருது" என வியந்தாள் தணிகைச்செல்வி. "ஙா... அப்பிடியா" என்று சிரித்தாள் லெச்சிமி

புதிதாக ஆரம்பிக்கப்போகும் அந்தப்படை யணி பெண்களின் போராட்ட வரலாற்றில் ஒரு மைல்கல், என்றாலும் லெச்சிமி சொன்னது போல அந்த முகாம் சரியாக வரவில்லை.

### 40

"ரிவிரச" இந்த சூரியக்கதிர் நடவடிக்கைக்குப் பின், யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் முற்றாக வெளி யேற வில்லை கணிசமான தொகையினர் அங்கே தங்கி விட்டனர். அவர்களுடைய வாழ்க்கை இராணுவத்தி னருடன் என்றாயிற்று.

மூலைக்கு மூலை இராணுவ சோதனைச் சாவடிகள் பெண்கள் கவுரவமாக பாதுகாப்பாக வாழ முடியாத நிலை காணப்பட்டது. பாடசாலைக்கு செல்லும் பெண் பிள்ளைகள் மிகவும் அவதியுற்றார்கள் பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைவரை கொண்டு சென்று இறக்கி விடவும் மீண்டும் பாடசாலை விடும்வரை காத்திருந்து கூட்டிவரவும் சிரமப்பட்டனர். பாடசாலை விடுதிகளில் தங்கிப் படிப்போர் அதிகரித்தாலும் போதிய இடம் கிடைக்கவில்லை. சந்தைக்குப்போவோர், பயணம் செய்வோர் என பெண்கள் சிரமத்தை எதிர் நோக்கினர் இந்த காலப் பகுதியில்தான்பல வன்முறைகளையும் கொலைகளை யும் காணாமல் போதலையும் யாழ்ப்பாண மக்கள் எதிர் கொண்டனர். எனினும்,

யாழ்ப்பாணத்திற்குள் புலிகள் மறைந்து திரிந்தனர். பெரும் ஆபத்தை எதிர் நோக்கி அவர்கள் அலைந்தனர். பண்டைய முறைப்படி ஒரு கரந்தடிப்படையாக அவர்கள் செயற்பட்டனர். பெண்களின் இக்கட்டு களை சமாளிக்க இந்தவகை தாக்குதல்களை பெண்களே நடாத்தினால் இராணுவம் பெண்களை துன்புறுத்துவது குறையும் என்று தீர்மானித்த தலைவர் யாழ்ப்பாணத் திற்கு உள்ளே சென்று கைத்துப்பாக்கிகளை மட்டும் கொண்டு தாக்குதல் நடாத்த ஒரு அணியை தயார் செய்ய திட்டமிட்டார். அதற்கான வேலைகளைத்தான் தணிகைச் செல்வி ஆரம்பித்தாள்.

அதற்காகத்தான் காடு கவனிக்கப்பட்டது. முப்பது பெண்கள் சகல பிரிவுகளிலிருந்தும் திரட்டப்பட்டா லும். பயிற்சி முல்லைத்தீவில் ஒழுங்கு செய்யப்பட்டது. இது "யாழ் செல்லும்படையணி." அல்லது "பிஸ்டல் டீம்"

என அழைக்கப்பட்டது. அதுபற்றி தனியாக ஒரு புத்தகம் வந்துவிட்டதால் அவற்றை தவிர்த்து நாம் கதையை நகர்த்தலாம்.

"இது ஒரு புது முயற்சி இதில நாங்கள் முதல் பங்கேற்பாளராக இருக்கிறம். இதெல்லாம் வரலாற்றில வரவேண்டும். அன்ரீ இது என்னுடைய கனவு ஆசை. நீங்க எங்களோட எங்க வேணுமெண்டாலும் வரலாம். அடிக்கடி வாங்க, உங்கட வேலையளோட இதையும் செய்யுங்க எல்லாத்தையும் எழுத்தில கொண்டுவாங்க" லெச்சிமிக்கு அதை அவள் சொல்லும்போது பளீரிட்ட அவளுடைய கண்களில்அந்த வெறி தெரிந்தது. அவள் ஒரு களமுனை அனுபவங்களிலிருந்து திளைத்தவள் அல்ல. அரசியற்றுறையிலிருந்து இப்போது கொஞ்ச நாட்களுக்கு முன்தான் படையணியில் பொறுப் பேற்றவள். லெச்சிமியை இயக்கத்தில் தொடர்பாக்கி யவர்களில் லெப்ரினன் கேணல் நளாயினியும் இவளுமே முக்கியமானவர்கள். வவுனியா மாவட்டத்தில் முதல் முதலாக அரசியல் வேலைகளுக்காக வந்தவர்கள். லெச்சிமி முதல் கண்ட பெண்புலிகள் இவர்கள். அன்பாலும் நடவடிக்கைகளாலும் அவளது பிள்ளை களைப் போலவே கணிக்கப்பட்டவர்கள்.

அவள் பயிற்சி வழங்கும் இடத்தில் அனுமதிக்கப் படவில்லை. என்றாலும் தனது பிரச்சாரக்கூட்டங்கள் ஒலிபரப்பு வேலைகளை முடித்துக் கொண்டு முள்ளிய வளையிலிருந்து ஐந்து மைல் தொலைவிலிருந்த அவர்களுடைய முகாமில் சென்று இரவில் தங்குவாள்.

நீண்ட காலமாக இராணுவத்தின் கட்டுப் பாட்டிலிருந்து மீட்கப்பட்ட பிரதேசம் எனவே பெரும்பாலு பனங்காடுகளும் இலந்தைமரப்புதர்களும் மண்டியிருந்தன. முற்றாக மிதிவெடிகள் அகற்றாததால் மக்கள் பெருமளவு குடியேறவில்லை வருவதும் போவதுமாக இருந்தார்கள். பெண்பிள்ளைகளின் முகாமின் எதிரிலேயே விடுதலைப்புலிகளின் கரும்புலி களின் முகாமும் இருந்தது. அதில் ஆண்போராளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். அவர்களில் பலருக்கு லெச்சிமியை நன்கு தெரியும். அவளுக்கும் அவர்களை தெரியும் ஆனால் அவர்கள் கரும்புலிகள் என்பது இப்போதுதான் தெரியும்.

இயக்கம் பெரும் படை நடவடிக்கைமூலம் நெடுங்கேணி மணலாறு போன்ற பிரதேசங்களை கைப்பற்றிபோது புலிகளின் குரலில் ஒரு தொடர் நாடகத்தை அமரர் யோகேந்திரநாதன் எழுதினார். அது ஒரு வரலாற்று நாடகம். அதில் ஒரு பாத்திரம் கிராமத்தின் வம்பு பேசும் ஒரு வயோதிபப் பெண்ணின் பாத்திரம். யோகேந்திரநாதன் கேட்டுக் கொண்டதற் கமைய அந்த பாத்திரத்தில் நடிக்கு ஒப்புக் கொண்டாள். அவள் முன்னரே மேடையேறிய நடிகை என்பது இங்கு யாருக்கும் தெரியாது. பாடசாலைக்காலங்களிலும் திருமணமான பின்னும் அவள் நடித்திருக்கிறாள். ஆனால் அது வவுனியாவில் அவள் சாதாரண மனுசியாக இருந்த போது. இப்போது இந்த நாடகத்தின் மூலம் பெரும் புகழ்பெற்ற நடிகையானாள். அதுவே இந்த போராளிகளுக்கும் பெரிய விடயமாகும். நாளாந்தம் வானொலி கேட்கும் யாராயிருந்தாலும் இந்த நாடகத்தை தவற விடமாட்டார்கள். அந்தவகையில் அவளிடம் மக்களும் ஆதரவாளர்களாக இருந்தனர்.

தணிகைச்செல்வி எங்கு சென்றாலும் அவளையும் கூடவே அழைத்துச் சென்றாள் காரணம் நளாயினி சொன்ன அதே காரணம்தான் பேசிக்கொண்டிருக்கும் போதே பல கருத்துகளை கைப்பற்ற முடிகிறது. அவளுக்கு அந்த வரம் வாசிப்பாலும் கதைசொல்லிகளை சூழ்ந்திருந்ததாலும் வாய்த்தது.

முகாமுக்குத் தேவையான பயிற்சி ஆசிரியரை அவள் தேடவேண்டியிருந்தது. அதற்காக முக்கிய படை யணியின் முகாமிற்கு செல்ல தணிகைச் செல்வியுடன் புறப்பட்டாள் ஒட்டி சுட்டான் முல்லைத்தீவு வீதியில் கரிப்பட்ட முறிப்பு வருகிறது. அது ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும், வன்னியில் பெரிய மடுக்கள் இருப்பது போல கரிப்பட்ட முறிப்பு இருந்தது. இதற்கு வடக்கே மம்மில் பிள்ளையார் கோவில் வருகிறது புலிமச்சிநாதகுளம் கடந்து கொஞ்ச தூரம் ஓடினால் அம்பகாமம் வருகிறது. அது மிகப் பலத்த பாதுகாப்புடன் கூடிய இடம் விமானப்படை அங்குதான் முகாம் வைத்திருந்தது. இயக்கத்தின் போராளிகள் பட்டியலில் இந்த படையணிப் போராளி களின் பெயர் இருக்காது. அவ்வளவு ரகசியம். இவர்கள் சாதாரண மனிதர்களாக எங்கும் நடமாடித் திரிவார்கள். அந்த முகாமுக்கு புகைப்படம் எடுக்கவும் அவர்களே ஆள் வைத்திருப்பார்கள்.

இந்த கரிப்பட்டமுறிப்பின் தெற்கே கற்கிடங்கு அம்மன் கோவில் உள்ளது. அங்கே பூசகர் குடும்பம் மட்டும் காட்டின் நடுவே தனித்து வாழ்ந்தது. அதைக் கடந்தால் கனகராயன் குளம் சென்றடையும் பொதுவாக அந்த வீதி பழைய ரோட் என அழைக்கப்படும். காரணம் கனகராயன் குளத்திலிருந்து அம்பகாமம் கடந்து இரணைமடு அலைகரை வழியே வட்டக் கச்சிக்குப் போய் முரசுமோட்டை ஊரியான அல்லது சுண்டிக் குளம் வீதிவழியே தரைவழியாக கடந்து யாழ்ப் பாணம் போகலாம். பெருங்கடலுக்கும், ஆனையிறவு களப்புக்கும் இடையே சுமார் நூறு மீட்டருக்கும் குறை வான தரைத்துண்டுதான் ஆழமான மணற்பரப்பாக இருக்கும். இது குதிரைகளின் மூலம் யாழ்ப்பாணம் சென்று வந்த மன்னர்காலத்தின் பாதை. ஞாபகத்தில் வைத்திருங்கள் இந்த மன்னர்காலத்துப் பாதைகளுக்கு தொடர்ந்து செல்லப்போகிறோம். கரிப்பட்ட முறிப்பின் மேற்கே மாங்குளம். கிழக்கே ஒட்டிசுட்டான் ஒட்டிசுட்டானி லிருந்து நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு முள்ளியவளை என்ற இடங்களுக்கும் முத்தையன் கட்டிற்கும் திரும்பும் வீதிகள் அமைந்துள்ளன.

கரிப்பட்ட முறிப்பிலிருந்து சுமார் ஐந்து மைல் தூரத்தே காட்டிற்குள் பிளவுற்ற ஒரு வண்டிப்பாதை அதில் நான்கு சக்கர வாகனங்கள் சென்று வந்த தடத்தில் தணிகைச்செல்வி வண்டியை செலுத்தினாள். வீதியில் சவண்டு கிடந்த மரக்கொப்புகளையும் பற்றைகளையும் கைகளால் விலக்கியவாறே,

"அன்ரீ குனியன்ரி, ஆங் கண்ணைமூடு , இப்ப நிமிர் என்ற கட்டளை போட்டவாறே அவள் வண்டியை செலுத்தினாள். நின்றும் இருந்தும் நடந்தும் அவர்கள் காட்டினுள் சென்றனர். ஒரு வழியாக கிடுகு வேய்ந்த ஒரு கொட்டகையை கண்டு அவர்கள் நிறுத்து முன்பே ஒரு பெண் ஓடிவந்து "நிப்பாட்டுங்கோ இதுக்கு மேல போகேலாது உங்கட விபரங்களை இதில பதியுங்க" என்று ஒரு கொப்பியை கொடுத்தாள். தணிகைச்செல்வி அந்த கொப்பியைவாங்கி தனது பெயரையும் லெச்சிமி யின் பெயரையும் எழுதி விபரத்தை நிரப்பினாள்.

"அக்கா இருங்கோ தகவல் அனுப்பிறம்"

"ஏன் புதிசா வந்த "பச்"சுக்கு இன்னும் பயிற்சி தொடங்கேல்லயா"

"இல்லக்கா. அதால காலமை வழக்கமான ரண்ணிங்கும் எக்ஸஸைசும்தான்." அந்தப்பெண் ஒரு மண்ணில் அமைத்த திண்ணையைக்காட்டினாள். லெச்சிமி அமர்ந்தாள். தணிகைச்செல்வி அந்த பெண்ணு டன் நின்றவளிடம் பேச்சுக் கொடுத்தாள். "அக்கா நிக்கிறாதானே உங்களுக்கு ஆர் ரெயினிங் மாஸ்டர்"

அதற்கு அவள் பதிலளிக்காமல் சற்றே நெளிந் தாள். அது சொல்லக்கூடாத விசயம்தான் தணிகைச் செல்வி வோக்கிடோக்கியுடன் நின்றவளை கவனித்தாள். அவள் பேசியபின் தணிகைச் செல்வியிடம் " அக்கா வாறாவாம்" என்றவள் கூட நின்றவளிடம் தேநீர் போடப் பணித்தாள். "இல்லயில்ல வேண்டாம்" என அவசரமாக மறுத்தாள் தணிகைச்செல்வி. பத்து நிமிடங்களின் பின் இரு பெண் போராளிகள் காட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தனர். தணிகைச்செல்வி எழுந்து நின்றாள் லெச்சிமி யும் எழுந்தாள். "அன்ரி இருங்கோ, என்றவள் நீங்க வந்திருக்கிறீங்க எண்டு தெரிஞ்சா பிள்ளையள் ஆரவாரப் படுவினம்" என்றாள்.

தணிகைச்செல்விக்கு பயிற்சிக்கான வகுப்புகளுக் கான வெடிமருந்துகளுக்கான பயிற்சிகள் எது முதல் எது பிறகு என்பன போன்ற விபரங்களும் ஆசிரியர் தேர்வும் முக்கியமாக தேவைப்பட்டது. அது சோதியா படை யணி முகாம். அவள் எதற்கும் தளபதியையும் கண்டு பேசினால் நல்லது என்றாள். விடைபெற்று இருவரும் திரும்பி வந்தனர். மாலை நான்குமணிக்கு மேலாகி விட்டது. எனவே வழங்கல் முகாமில் இருவரும் சாப்பிட்டனர். அதன்பின் லெச்சிமி தனது முகாமில் தங்கிவிட தணிகைச்செல்வி மாங்குளம் போனாள். அரசி யற்றுறையின் தீலீபன் முகாம் அடுத்த ஒழுங்கையி லிருந்தது. அங்கு வரும்படி அவளுக்கு கட்டளை வந்தது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org